# கொங்கும் தமிழும்



முனைவர். இரா. கா. மாணிக்கம்

# கொங்கும் தமிழும்

முனைவர்

**இரா. கா. மாணிக்கம்,** *M.A., M.Phil., Ph.D.,*

முதல்வர்
காமதேனு கலை அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்

வெளியீடு :

**தமயந்தி பதிப்பகம்**

சீனிவாச வீதி, கோபி - 638 452

ஈரோடு மாவட்டம்

# கொங்கும் தமிழும்

(கட்டுரைத் தொகுப்பு)


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஜூன் 2003 |
| உரிமை | : | **தமயந்தி மாணிக்கம்** |
| விலை | : | ரூ. 40/- |
| வெளியீடு | | **தமயந்தி பதிப்பகம்**<br>சீனிவாச வீதி<br>கோபி - 638 452<br>ஈரோடு மாவட்டம்<br>தொலைபேசி : 04285 - 223624 |
| ஒளி அச்சு | . | **சரோஜினி கணினி மையம்**<br>32, விவேகானந்தா சாலை<br>வீரப்பன்பாளையம், திண்டல் (அ.நி)<br>ஈரோடு -9 |
| அச்சாக்கம் | . | **ராஜகணபதி பிரஸ்**<br>271, நேதாஜி ரோடு<br>ஈரோடு -1 |
| தாள் | : | 6 9 Kg |
| எழுத்து வடிவம் | | 11 புள்ளி |
| புத்தக அளவு | · | டெம்மி 1/8 |

## வாழ்க வளமுடன்

அருள்நிதி
பேராசிரியர் இராம.இருசுப்பிள்ளை

## ஆசியுரை

பேராசிரியர் முனைவர் இரா.கா.மாணிக்கனார் கொங்குநாட்டுச் சமுதாய பண்பாட்டு வாழ்வியல் பற்றி எண்ணி எண்ணிப் பல்வேறு காலங்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இது கொங்கு நாட்டின் வரலாறு, வாழ்வுநெறிகள் ஆகியன அறிய விழைவார்க்கு உதவும் ஆய்வுச் செய்திகளை உள்ளடக்கியது.

கொங்கு நாடு எனப் பெயர் வந்ததற்கான காரணங்களைச் சொற் பொருள் கொண்டும், ஆய்வாளர்கள் பலர் தம் உரைகளின் துணை கொண்டும் தெளிவுபடுத்துகின்றார். காப்பிய வளர்ச்சியில் தலைநின்று தமிழ்க்குத் தொண்டாற்றியவர்கள் கொங்குப் புலவர்கள் என்பதனைச் சான்றுகளோடு விளக்கி மகிழ்கின்றார். சமணத் தாக்கத்திற்குப் பெரிதும் ஆளாகிய கொங்குப் பகுதி சைவத்தை வளர்ப்பதிலும் தலை நின்றுள்ளது என்பதனைத் தேவாரப் பாடல்பெற்ற ஏழு திருக்கோயில்களைப் பற்றியும் வைப்புத் தலங்கள் பற்றியும் விளக்கிக் கூறி நிறுவி யுள்ளார். அந்தியூரின் பழமை பற்றியும் வரலாற்றில் அது பெறும் இடம் பற்றியும் பல்வேறு செய்திகளை மேற்கோள்களாககக் காட்டி விளக்குவது இவர்தம் அகன்ற நூற்பயிற்சியினைக் காட்டுவதாக உள்ளது. ஊர்களுக்குப் பெயரிடுவதில் உலகம் எங்கணும் உள்ள பின்னணி கொங்கு நாட்டின் ஊர்கட்கும் பொருந்துவதாய் உள்ளது என்பதனைச் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

தாளாண்மைக்கும் வேளாண்மைக்கும் பெயர்போன நாடு கொங்கு நாடு. கடையெழு வள்ளல்கள் காலம் முதல் இன்றுவரை அது உண்மை. ஆனால் இக்காலப் புரவலர்களைச் சுட்டினால் குறை யேற்பட்டுவிடுமோ என்ற எண்ணத்தில் ஆசிரியர் அண்மைக் காலத்தில் மறைந்த புரவலர்கள் வரையிலான சிலரை விளக்கியுள்ளார் 'புலமை போற்றிய புரவலர்கள்' என்ற தலைப்பில்.

உள்ளத்து உணர்ச்சிகளை மறைக்காது வெளிப்படுத்துவது ஒப்பாரிப் பாட்டு. கொங்கு நாட்டில் கற்றறியா மக்களிடத்தும் கவிதைக் கவினோடு

10 JUL 2003

உணர்வுகள் வெளிப்பட்டுப் பெண்களின் நிலை கண்டு அழுத அழுகையை உணர்த்தும் ஒப்பாரிப் பாடல்கள் சிலவற்றின் விளக்கமாக அமைந்திருப்பது 'ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்கள் நிலை'.

கொங்குவேளிர் எழுதிய பெருங்கதை எனும் காப்பிய நூல் வட நாட்டுக் கதையைப் பொருளாகக் கொண்டு வடமொழி நூலைப் பின்புலமாக வைத்துத் தமிழில் எழுதப்பெற்ற காப்பியமாயினும் அதில் தமிழ் மர்புகள் போற்றப்படும் வகையில் மாற்று மாற்றத்தில் ஏற்றம் கண்டுள்ளதோடு கொங்கு நாட்டு வாழ்வியல் கூறுகளையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார் என்பதனைச் சான்று காட்டி விளங்க வைப்பது 'பெருங்கதைச் சிறப்பும் மண்ணின் மணமும்' என்ற கட்டுரை.

சான்றோர்களாலும் தாளாண்மை மிக்காராலும்தான் ஒரு நாடு நாடாக வாழ்கின்றது. சான்றோர்களும் தாளாண்மை மிக்காரும் கொங்கு நாட்டில் மிக்காராக வாழ்கின்றனர் என்பதனைச் சிவக்கவிமணி.சி.கே. சுப்பிரமணியனார், திருத்தொண்டர் புராணத்திற்கு எழுதியுள்ள பேருரை கொண்டும் நாட்டு விடுதலை வரலாற்றில் அவர் ஆற்றிய அரும்பணி கொண்டும் தெளிவுபடுத்துவது அவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் கொண்ட கட்டுரை. அவர்தம் பணியால் இன்றும் நின்று வாழ்கிறார்.

இப்படிப் பல சமய, சமுதாய, வரலாற்று, பண்பாட்டுச் செய்திகளை விளக்கி, கொங்கு நாட்டின் வரலாற்றுக்குத் துணையாய் அமையும் வகையில் விளங்கும் இந்த நூல் பயன்பாடு மிக்க நல்ல நூல். இதன் ஆசிரியர் பல நூல் பயிற்சியாளர். தமிழர் தம் நன்றிக்கு உரியவர்.

நன்றிக்குரிய நல்லாசிரியராய் விளங்கும் அறிஞர். மாணிக்கனார் எல்லாம் வல்ல அருட்பேராற்றலாம் ஆண்டவனின் அருளால் உடல்நலம், நீள்ஆயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வாராக என வாழ்த்துவோம்.

வாழ்க வளமுடன்!

இராம.இருசுப்பிள்ளை

''தாயகம்''
தாமுநகர் - கோயமுத்தூர்- 45
20-04-2003

முனைவர் கா.ப.மாரப்பன்,
தமிழ்த்துறைத் தலைவர்(ஓய்வு),
கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபி - 638 453.

## பாராட்டுரை

ஒரு நாட்டின் வரலாறு மன்னர்களின் வரலாறாகவே எழுதப்படுகிறது. அந் நாட்டு மக்களின் -சமுதாயத்தின் வாழ்வைக் காட்டுவனவாகப் பெரும்பாலும் வரலாறுகள் அமைவதில்லை. மக்களின் வாழ்வும் தாழ்வும் பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் இவற்றைப் பொதிந்துவைத்துள்ள நாட்டுப்புற இலக்கியங்களும்தாம் உண்மை வ்ரலாற்றை வடித்தெடுக்க உதவும் மூலங்கள் எனலாம்.

இந்திய வரலாறுகளை - குறிப்பாகத் தமிழக வரலாற்றை வடித்தெடுத்த வல்லுநர்களின் பார்வை பட்டிடாத பகுதிகளுள் கொங்கு நாட்டுப் பகுதியும் ஒன்றெனலாம். இனத்தால் - மொழியால் தமிழகம் ஒன்றாயினும் பழக்க வழக்கங் களால் பண்பாட்டால் தமிழர்களுக்குள் வேறுபாடு உண்டு. சேறுடைக் கழனி நாடாம் சோழ நாடு சோற்றால் புகழ்பெற்றது. மலை வளம் சூழ்ந்த சேர நாடு மலைபடு பொருள்களால் வளம் பெற்றது. தென்கரை நாடாம் பாண்டி நாடு கடல்படு செல்வத்தால் கவின்பெற்றது. சைவமும் வைணவமும் தளர்வறத் தழைத்துக் கிளை பரப்பினமையால் தொண்டைநாடு சான்றோர்களின் போற்றுதலுக் குரியதாயிற்று.

இந்நாடுகளில் செழிப்பும் வளமும் மண்டியமையால் அந்நாடுகள் கலைகளாலும் இலக்கியங்களாலும் வணிகத்தாலும் பேரரசுகளின் ஆட்சியாலும் சிறப்புற்றுப் பலரது பார்வைக்குரியனவாயின.

ஆனால் குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப் பாலையோ என அய்யப்பட வைத்த - மழை மறைவுப் பகுதியான பண்டைக் கொங்கு நாட்டிற்கு அத்தகையனவான பெருமை களும் சிறப்புக்களும் இருந்தாலும் அவை வெளிச்சமிடப்படவில்லை. வாட்டும் வறுமையிலும் நீங்காத பஞ்சத்திலும் பண்பாடு காத்த எம்மக்களின் விருந்தோம்பல் வரலாறு போற்றப்படவில்லை. இன்னும் கன்னல் தமிழுக்காக இன்னல் ஏற்றவர்களின் பெருமை -

*தண்டமிழுக்காகத் தலையையும் தர முன்வந்தவர்களின் சிறப்பு- வாரிவாரி வழங்கிய கொங்கு வள்ளல்களின் கரையிலா வள்ளன்மை போன்றன உரிய முறையில் பேசப்படவில்லை.*

*இக்குறைகளைக் களைய எண்ணியோர் பலராயினும் உரிய காலம் வாய்ப்பாக அமையவில்லை.*

*இந்திய வரலாற்றைப் புரட்டும் போதெல்லாம் தமிழக வரலாறு இருட்டடிக் கப்பட்டுவிட்டதோ என்ற அய்யம் பலருக்கும் ஏற்படுவதுண்டு. இதே போன்று தமிழக வரலாற்றைக் கற்க முனைகின்றபோதெல்லாம் வரலாற்றாளர்களுக்குக் கொங்குப் பகுதியின் வரலாறு கண்ணின் படவில்லையோ என்ற பரிதவிப்பும் எமது மண்ணின் பெருமை ஏடேறவில்லையோ என்ற ஏக்கமும் எமக்கு ஏற்படுவதுண்டு.*

*அவ்வேக்கம் நீங்கத் தம் நுண்மாண் நுழைபுலத்தையும் நாற்பதாண்டு நற்றமிழ்ப் பயிற்சியையும் பண்படுத்தி - பயன்படுத்திக் கொங்கு நாட்டின் வரலாற்றுப் பக்கங்களில் ஒரு சிலவற்றைத் திறந்து காட்டியுள்ளார் நூலாசிரியர்.*

*''ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்பது செலவாந்திரம். 'கூறியது கூறல்' என்ற குறை ஆங்காங்குத் தட்டுப்படினும் கட்டுரைகள் எழுதப்பட்ட காலங்கள் கருதி ஏற்றுக் கொள்ளலாம்.*

*இது 'கொங்காயர்களின்' முழுமையான முகம் அன்று; எனினும் வருங்காலத்தில் முழுமையும் வரைந்து காட்டுவார் என்ற நம்பிக்கை வற்றிப் போகவில்லை அல்லது வரைய முயல்வோர்க்கு இந்த நூல் பயன்படும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை எமக்கு உண்டு.*

*எது எப்படியாயினும் நூலாசிரியர்தம் முயற்சி வளரட்டும்; வெல்லட்டும்.*

அன்புடன்,
*கா.ப.மாரப்பன்*

'வாத்தியார் தோட்டம்'
புதுக்காடு
பா.ந.க.பாளையம் (அஞ்சல்)
கோபி - 638 476.

Dr. மே.அ.பாலமுருகன், *M.A., Ph.D.*,
இணைப்பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
ஈரோடு கலைக் கல்லூரி(தன்னாட்சி),
ஈரோடு - 638009.

## அணிந்துரை

*குறிஞ்சி மலர் தினமும் பூப்பதில்லை. சிப்பியிலிருக்கும் முத்தும் ஒரே நாளில் முதிர்வதில்லை. கருக்கொண்டு கரு உயிர்க்கக் காலம் கனிய வேண்டும் அல்லவா? அறுபதாண்டுகள் - நீண்ட காலம்தான். முன்பாதியில் பழித்தும் பின்பாதியில் பழிப்பித்தும் அனுபவம் கொண்டவர் பேராசிரியர் முனைவர் இரா.கா.மாணிக்கம். வாசிப்பில் நாட்டம் கொண்ட இவரைப் பிறர் வாசிக்க நூலியற்றச் செய்த நண்பர்களுக்கு நன்றி சொல்லவேண்டும். 'கொங்குக் கட்டுரைகளைத் தொகுத்த இந்நூலாக்கம் கண்டும் - வாசித்தும் மகிழ்ச்சி கொண்டேன். ஆழ்ந்த கற்றலின் - சிந்தனையின் வெளிப்பாடே இந்நூல்.*

*கொங்கு நாடு, நாட்டுப் பிரிவுகள், இங்கு வாழ்ந்த சான்றோர்கள், கொண்டாடிய தெய்வங்கள், பாடிய இலக்கியங்கள், வாழ்ந்த வாழ்க்கை இன்ன பிறவற்றையெல்லாம் தொகுத்தும் பகுத்தும் ஆய்ந்து புதுமுடிவுகள் கண்டும் இந்நூலை ஆக்கியுள்ளார்.*

*கொங்கு நாடு என்ற பெயர் அமைந்த காரணத்தைக் கூற வரும் பொழுது அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையெல்லாம் தொகுத்துக் கூறி அவற்றை மென்மையாக மறுத்து இறுதியாக இம்மண்ணில் வாழும் மக்கள்- கொங்கர்களால் பெயர் பெற்றது இந்நாடு என்று முடிக்கிறார். இந்தக் கொங்கர் யார்? என்ற வினாவினைத் தொடுத்து ஆய்வாளர்களுக் காலம் அமைத்துக் கொடுக்கிறார். கொங்கர்கள் யார்? தேடவேண்டியதுதான்.*

*கொங்குநாட்டினைச் சார்ந்த காப்பியப் புலவர்கர்களைப் பட்டியலிடும் பொழுது பரவலாக அறியப்பட்ட தகடூர் யாத்திரை, பெருங்கதை, தக்கை ராமாயணம், இராவண காவியம் ஆகியவற்றைக் குறித்துள்ளதோடு பலராலும் அறியப் பெறாத பக்தமான்மியம், திருவள்ளுவர் காவியம், பேரூர்ப் புராணம், தீர்த்தகிரிப் புராணம் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார். மேலும் கொங்குநாட்டிற்கே உரிய இலக்கியமான ''தாய் மகள் ஏசலை''யும் சுட்டுகிறார்.*

மேய்ப்பு வாழ்க்கையை முக்கிய வாழ்முறையாகக் கொண்ட கொங்கு மக்கள் நீர் கண்டவிடத்து வேளாண்மையையும் செய்து வந்தனர். அன்றும் இன்றும் முனைப்பிற்குப் பெயர்போன இம்மக்கள் ஆன்மிகத் துறையிலும் நாட்டம் கொண்டவர்கள். தங்களுக்கென நாட்டுப்புறத் தெய்வங்களைப் படைத்துக் கொண்ட இவர்கள் பெருந்தெய்வ வழிபாட்டிலும் ஈடுபட்டனர். கொங்கு நாட்டில் அமைந்துள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களைப் பட்டியலிட்டு அழகாக அறிமுகப்படுத்துகிறார்.

ஊர்ப் பெயர்கள் பெரும்பாலும் காரணம் கருதியே அமைகின்றன. தெய்வத்தின் பெயரிலும் சான்றோர் பெயரிலும் ஊர்ப் பெயர்கள் அமைதல் உண்டு. மேலும் இயற்கைச் சூழல் காரணமாகப் பெயரிடும் வழக்கமே அதிகமாகும். பெயர்கள் வெறும் அடையாளம்தான் என்றாலும் அவற்றிலும் சிறப்புக் கூறுகளைப் பார்க்க முடியும். கால வெள்ளத்தில் பழைய பெயர்கள் திரிந்தும், மருவியும் வழங்குதல் உண்டு. பல ஊர்ப் பெயர்கள் அமைந்த காரணங்களைக் காலம் அழித்துவிடுதலும் உண்டு. ஊர்ப் பெயர் ஆய்வுகள் வரலாற்று பண்பாட்டுக் கூறுகளை வெளிக் கொணரும் தன்மையன. சமயத் தாக்கத்தாலும் வள்ளல் பெருமக்களாலும் அமைந்த பெயர்களும் முல்லை நிலம் காரணமாகப் பட்டி, பாடி என முடிவு கொண்ட பெயர்களும், பாளையக் காரர்களின் ஆட்சி காரணமாக அமைந்த பெயர்களையும் சுட்டும் ஆசிரியர் சில ஊர்ப் பெயர்கள் மருவி வழங்குவதால் வரலாற்றுப் பெருமையை இழந்து நிற்றலையும் சுட்டுகிறார்.

அந்தியூர்' பெயர்க் காரணத்தை விரிவாக ஆய்வு செய்து 'காட்டுப் பகுதியிலும் மலைப்பகுதியிலும் பகலில் கால்நடைகளை மேய்த்து வந்து மாலையில் - அந்தியில் அவற்றை இப்பகுதியில் நிலைநிறுத்தியதால் இப் பெயர் பெற்றது' என்று கூறும் பூங்குன்றனின் கருத்தே பொருத்தமுடையது என்பார். மேலும், திப்புசுல்தான் காலத்தில் இவ்வூர் 'அகமதாபாத்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது என்றாலும் அப்பெயர் பின்னாளில் மறைந்து பழைய பெயரே நிலைபெற்றது என்று கூறுவது ஆசிரியர் வரலாற்று நிகழ்வுகளை எவ்வாறு நுணுகி ஆய்ந்துள்ளார் என்பதைக் காட்டும்.

பேராசிரியர் அவர்கள் சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் நிறைவாழ்வைத் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார். சிவக்கவிமணி சி.கே எஸ். வாழ்வில் நடந்த சிறுசிறு நிகழ்வுகளையும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து தொகுத்திருப்பதும் - விளக்கியிருப்பதும் அன்னாரை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

'புலமை போற்றிய புரவலர்கள்' கட்டுரை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவது. சங்க இலக்கியத்தில் போற்றப்பெறும் கடையெழு வள்ளல்களும் கொங்கு நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதோடு அதற்குப் பின்வந்த வள்ளல்களும் அவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. சவுக்கடி பெற்ற புரவலர், கொதிக்கும் நெய்யில் கைவிட்டும் புலவரின் எச்சில் வாயைக் கழுவிவிட்டும் புகழ்பெற்ற புரவலர், மேலும் வள்ளலையே விற்க முனைந்த புலவனுக்கும் கருணை காட்டிய ஆனூர் காமிண்டன் என வியப்பான செய்திகளைக்·கொண்டது இக்கட்டுரை.

கொங்குவேளிரின் பெருங்கதை பிற காப்பியங்களிலிருந்து எவ்வெவ் வகைகளில் வேறுபடுகிறது என்பதையும் – பிற காப்பியங்களுக்கு எவ்வெவ் வகைகளில் வழிகாட்டியாய் அமைந்துள்ளது என்பதையும் விளக்கியுள்ளார். பெருங்கதை ஆய்வாளரான பேராசிரியர் அவர்கள் கொங்குவேளிர் வடமொழிக் காப்பியத்தைத் தழுவி எழுதியபோதும் அம்மொழி மரபுகளைப் போற்றி இயற்றியிருப்பதைச் சுட்டுகிறார். மேலும் கொங்கு மண்ணுக்கே உரிய பழக்கவழக்கங்கள் பெருங்கதையில் இடம்பெற்றுள்ளதைச் சுட்டுகின்றார்.

இறுதியாக ஒப்பாரியில் உள்ளத்தை உருக்குகிறார். ஏட்டிலக்கியங்கள் நடப்பியல் உண்மைகளைக் காட்டாது கற்பனையில் திளைக்கின்றன என்றும் நாட்டுப்புற இலக்கியங்களே நடப்பியலை காட்டுகின்றன என்றும் நிறுவுகிறார். பெண், பிறப்பில் படும் துன்பங்களை அடுக்கியுள்ளார். தந்தை இறந்தாலும் தாய் இறந்தாலும் கணவன் இறந்தாலும் பெற்ற பிள்ளை இறந்தாலும் இவள் படும் துன்பம் சொல்லி மாளுமா? மாளாது துயரம், மீளாத இன்பம். இதுதானே பெண்களுக்கு விதிக்கப்பட்ட சாபம். இக்கட்டுரை இதயத்தைக் கனக்க வைக்கிறது.

இவ்வாறு நாட்டு வரலாற்றாய்விலும், மொழி ஆய்விலும், இலக்கிய ஆய்விலும், படைப்பாளர் தம் வாழ்வியல் ஆய்விலும், ஊர் ஆய்விலும் பெயர் ஆய்விலும் பேராசிரியர் இரா.கா.மாணிக்கம் அவர்கள் தனிமுத்திரை பதித்துள்ளார்கள். இனியாவது ஆண்டுக்கு ஓரிரண்டு புத்தகப் பிள்ளைகளைப் பெறவேண்டும் என விரும்பி முடிக்கிறேன்.

அன்புடன்,
மே.அ.பாலமுருகன்

முனைவர் அ.கோவிந்தராஜு
தலைமையாசிரியர்
வைரவிழா மேனிலைப் பள்ளி
கோபி.

## ஒரு பறவைப் பார்வை

*நூலாசிரியர் முனைவர் இரா.கா.மாணிக்கம் அவர்களுடைய பல்லாண்டுக் காலத் தேடலை, தேடலில் கிடைத்தவற்றை நிரல்படுத்தி மேற்கொண்ட பகுப்பாய்வை, அவ்வாய்வில் நிறுவப்படும் கருத்துகளை இந்நூலை ஆழ்ந்து வாசிக்கும் எவரும் காணலாம்.*

*ஒரு மண்ணின் வரலாற்றை மீட்டெழுதுவது என்பது சாதாரண செயலன்று. மண்ணின் மகத்துவத்தை - ஆறுகளை - காடுகளை - மலைகளைப் பற்றி எழுதி விடலாம்; அது வெறும் புவியியலாகப் போய்விடும். மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மாந்தர்களைப் பற்றி எழுதுவது தானே அம்மண்ணின் உண்மையான வரலாறாக இருக்கமுடியும்? மண்ணுக்கு ஏற்படும் மாட்சியும், வீழ்ச்சியும், உயர்வும், தாழ்வும், பெருமையும் சிறுமையும் அங்கு வாழும் மக்களைப் பொறுத்தது; மரம், செடி, கொடி, விலங்குகளைப் பொறுத்ததன்று. இதன் அடிப்படையில் இந்நூலாசிரியர் கொங்கு மண்ணின் ஊர்ப்பெயர் முதல் ஒப்பாரி வரை அலசி ஆய்ந்துள்ளார்.*

*சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்றும் ஒருங்கிணைந்ததே தமிழகம் எனப் பொதுவாக நாம் அறிவோம். எனினும் ஆய்வாளர்கள் இவற்றோடு தொண்டை நாடு, கொங்கு நாடு, துளு நாடு ஆகியனவும் இணைந்ததே தமிழகம் என்பர். இவற்றுள் இந்நூலின் கருப்பொருளாக விளங்கும் கொங்கு நாடு - அதன் பெயர்க் காரணம் குறித்து விரிவாகப் பேசப்படுகிறது. பத்துக்கும் மேற்பட்ட காரணங் களைப் பட்டியலிடும் ஆசிரியர் இறுதியில் மக்கள் அல்லது மன்னர்களாலேயே கொங்கு நாடு எனப் பெயர் பெற்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றார். ஒரு நாட்டிற்குரிய பெயர் அந்நாட்டிற்குரிய மக்கள் காரணமாக அமைதல் பொருத்தம் என நிறுவுகிறார்.*

*ஒரு நிலத்தின் உண்மையை அங்கு இயற்கையாக முளைக்கும் செடி கொடிகள் காட்டிவிடும் என்பார் திருவள்ளுவர்.*

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

என்பது சுற்றுச்சூழல் நுட்பத்தைக் காட்டும் குறள். அதுபோல் ஒரு நாட்டில், அங்கு வாழும் மக்கள் தம் தாய்மொழிக்கு அளிக்கும் பங்களிப்புகளின் வாயிலாக அம்மண்ணின் கலாச்சாரத்தை, பண்பாட்டை அறிய முடியும். அவ்வகையில் கொங்கு நாட்டாரின் தமிழ்க் கொடைகளான தகடூர் யாத்திரை, பெருங்கதை, இராவண காவியம், தக்கை இராமாயணம், பக்த மான்மியம் போன்றன இம்மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மகத்தான காப்பியங்களாகும்.

இவற்றுள் கொங்குவேளிர் என்னும் வேளாளர் குலப் புலவன் எழுதிய பெருங்கதையில் ஆய்வு நிகழ்த்தி பிஎச்.டி., பட்டம் பெற்ற இந்நூலாசிரியர் 'பெருங்கதைச் சிறப்பும் மண்ணின் மணமும்' என்னும் இயலில் தனி முத்திரையைப் பதிக்கின்றார். குணாட்டியார் என்பார் பைசாச மொழியில் 'பிருகத்கதா' என்ற பெயரில் இயற்றிய காப்பியத்தை, கொங்குவேளிர் 'பெருங்கதை' என்னும் பெயரில் மொழிபெயர்த்தார். இது தமிழில் மலர்ந்த முதல் மொழிபெயர்ப்புக் காப்பியம் எனக் கூறுவர். குணாட்டியாரின் கதைக் கருவை மட்டும் எடுத்துக் கொண்டு, கொங்கு மண்ணைக் களமாகக் கொண்டு-கொங்கு மக்களின் பெயர்கள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், பேச்சு வழக்கு - இவற்றைக் கொண்டு இக்காப்பயிம் புனையப்பட்டிருப்பதால் இதை வெறும் மொழிபெயர்ப்பு (Translation) என்பதைவிடப் பெயர்த் துருவாக்கம் (Transcreation) என்று கூறுவது பொருத்தமாக அமையும் என்பதை ஆசிரியர் சான்றுகளுடன் நிலைநிறுத்துகின்றார்.

கொங்கு நாட்டுச் சிவத்தலங்கள் பல ஊர்களில் இருப்பினும் 'ஏழ் தலங்கள்' எனப் போற்றப்படுபவை கரூர், கொடுமுடி, திருச்செங்கோடு, பவானி, திருமுருகன்பூண்டி, கரூருக்கு அருகில் உள்ள வெஞ்சமாங் கூடலூர், அவினாசி ஆகிய ஏழு ஊர்களாகும். இவற்றின் திருப்பெயர்கள், பாடல் பெற்றத் தலமா, வைப்புத்தலமா என்னும் விபரம், அத்தலங்கள் தொடர்பான செவிவழிச் செய்திகள் அனைத்தும் வாசகருக்கு விருந்தாக அமைகின்றன.

அருகிலுள்ள அந்தியூரின் வரலாற்றைத் தனிநூலாக எழுதும் அளவிற்குச் செய்திகள் உள்ளன என்பதை இந்நூல் வாயிலாக அறிந்து வியக்கின்றோம்.

*சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் வாழ்க்கை வரலாறு தமிழ்மொழியின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்தது. நூலாசிரியர் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை மிக அருமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். புலவர்களைப் போற்றும் புரவலர்களுக்கும் கொங்கு நாட்டில் பஞ்சமில்லை என்பதைப் பல்வேறு சான்றுகளுடன் பட்டியலிடுகிறார்.*

*நிறைவாக, 'ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்கள் நிலை' என்னும் இயலில் ஏடுகளில் இலக்கியங்களில் பெண்கள் போற்றப்பட்டாலும், நடைமுறை வாழ்வில் பெண்கள் இழிவாகவே நடத்தப்படுகின்றனர் என்பதை ஒப்பாரிப் பாடல்களின் துணைகொண்டு சுட்டிக் காட்டுகிறார். பெண்மையைப் போற்றும் பொற்காலம் மலரட்டும்.*

*இந்நூலைப் படிக்கும் வாசகர்களிடையே கொங்கு நாட்டைப் பற்றிய விழிப்புணர்வு பெருகும். ஒரு சிலரை மேலும் இப்பொருளில் ஆய்வு செய்யத் தூண்டும் இந்நூல் ஓர் ஆற்றுப்படை நூலாகவும் விளங்குகிறது. இந்நூலாசிரியர் மேலும் பல நூல்களைப் படைத்து அன்னைத் தமிழுக்கு அணிசெய்ய இறையருளை வேண்டுகின்றேன்.*

கோபி, *அ.கோவிந்தராஜு*
01-05-2003

*ஓம் சக்தி*

**Dr. இரா.கா.மாணிக்கம், *M.A., M.Phil., Ph.D.,*** சீனிவாச வீதி
முதல்வர் கோபி-638453
காமதேனு கலை அறிவியல் கல்லூரி ஈரோடு மாவட்டம்
சத்தியமங்கலம் - 638403. 04285 - 223634.

## "யான் இதற்கு இலன் ஒரு கைம்மாறு

*எனது முதல் நூல் இது. இதில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் அறிமுகச் செய்திகளை உள்ளடக்கியனவேயன்றி ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. சொந்த மண்ணின் வரலாறு, தனது சொந்த மக்களின் பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள், பலம், பலவீனம் போன்றவற்றை அறியாது அந்நிய நாட்டுச் செய்திகளை வலிந்து மனதில் இருத்திக் கொள்ளும் பாடத் திட்டங்கள் இன்றைய வரலாற்றுக் கல்வியின் அவலநிலைக்குக் கட்டியம் கூறுகின்றன. எனவே இளைய தலைமுறை தனது சொந்த மண்ணிலேயே அந்நியராகி உலா வருவதைக் காண முடிகின்றது.*

*இதனைக் கருத்துள் கொண்டு கொங்கு நாட்டார்க்கு அவர்தம் நாட்டின் பல்வகைக் கூறுகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இக்கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன.*

*என்னை வளர்த்த கோபி கலை அறிவியல் கல்லூரியில் தன்னாட்சித் தகுதியால் தமிழுக்குப் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டபோது கொங்கு நாட்டியலை மாணவர்தம் மனத்தகத்து இருத்தவேண்டித் தமிழ்த்துறை பல நூல்களை வெளியிட்டது. அந்த நூல்களுக்காக எழுதப்பட்ட கட்டுரைகள் பலவும் இந்த நூலுக்காகச் செய்யப்பட்ட இரண்டு கட்டுரைகளும் இந்த நூலினை நிறைவு செய்கின்றன.*

*எனது பேராசிரியரும் ஞான குருவுமான அருள்நிதி.இருசையா அவர்கள் இதற்கு ஆசியுரை நல்கியுள்ளார்கள். நல்லன மட்டுமே எண்ணும் வெள்ளை உள்ளம், வாடிய பயிரைக் கண்டபோது வாடித் துன்புறும் அன்பு இதயம், நேர்மையின் மறுபதிப்பு என்றெல்லாம் அய்யா அவர்களைச் சொற்குவியலிட்டு வழிபட்டாலும் அவர்தம் மனிதநேயத்தை எடுத்துரைக்க என்னால் இயலவில்லை. நானும் என் குடும்பமும் என்றும் அவருக்கு - அவர்தம் அன்புக்கு அடிபணிகின்றவர்களேயன்றி அவருக்கு நன்றி சொல்லி*

உறவைக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. அவரது ஆசியுரை என் வளர்ச்சிக்கு அழித்தளம் என்ற ஒன்றே நான் சொல்லிக் கொள்ளும் பணிவுரையாகும்.

முனைவர் கா.ப.மாரப்பன் அவர்கள் என்னோடு முப்பதாண்டுக் காலத்திற்கும் மேலாகத் தமிழ்த்துறையில் இணைந்து பணியாற்றியவர். 'நக்கீரக் குணம்' அவரது தனியுடைமை. முன்னவர் மே.அ.பாலமுருகன் அவர்கள் எனது நெஞ்சத்தில் நிலைபெற்றுள்ள பாசமே வழிவான கெழுதகை நண்பர். கடுமையை இனிமையாக்கிக் கூறுவதில் அவர்தம் பண்பு மிளிரும். முனைவர் அ.கோவிந்தராஜு அவர்கள் எங்கள் குடும்பத்தில் ஒருவர். 'பறவைப் பார்வையாக' அவரது மதிப்புரை பாய்ச்சலிடுகிறது. இந்த மூவருக்கும் இந்த நூலாக்கத்தில் பங்கு உண்டு. எனவே இந்நூல் பற்றிய கருத்துரைகளை நல்கியுள்ளார்கள்.

கோபி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேரா.கு.மகுடீஸ்வரன், வேரா.நீ.வா.கருப்புசாமி, பேரா.திருமதி.வ.ஜெயந்தி ஆகியோருடைய பங்களிப்பும் இந்தக் கட்டுரைகளில் உண்டு. அவர்கட்கு என் அன்பு வணக்கங்கள்.

பேராசிரியர் பெ.பழநியப்பன்(தமிழ்த்துறை, ஈரோடு கலைக் கல்லூரி) என்மீது கொண்ட அன்பால் இந்த நூலை சரோஜினி கணினி மையம் கொண்டு எழிலுற வழிவமைத்துக் கொடுத்துள்ளார். அவருக்கு நன்றி கூறின் அது சடங்காகப் போய்விடும் என்பதால் அந்தத் தவறை நான் செய்யவில்லை.

கோபி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவினர் இதனைத் தங்கள் பட்ட வகுப்பு மாணவர்க்குப் பாடமாக வைத்துள்ளனர். என் எழுத்துக்கள் மீதுள்ள நம்பிக்கையைவிட என்மீது அவர்கள் கொண்டுள்ள நெஞ்சப் பிணைப்புத்தான் இதற்குக் காரணம். ''காலத்தினால் செய்த நன்றி...'' வள்ளுவனை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

கட்டுரைகளில் உள்ள 'கனம' கற்போர்க்கு மட்டுமே தெரியும். அப்பழி ஏதாவது இருப்பின் அதற்குக் காரணமானவர்கள் எனதருமை ஆசிரியப் பெருமக்கள். அரக்கன்கோட்டையில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மணலில் 'அ ஆ .' எழுதி விரலைத் தேய்க்கச் சொன்ன அந்த மூலவர் தொடங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்னை முதுகலைப் பட்டத்திற்

குரியவர்களாக்கியவர்கள் வரை அனைவரையும் என் நெஞ்சு நினைத்து வணங்குகிறது. போற்றத்தக்கன இந்நூலுள் இருப்பின் அது அவர்களுக்குச் சொந்தம். குற்றங்குறைகள் இருப்பின் அதற்கு முழுமையும் பொறுப்பு யானாவேன்.

தெய்வமாகிவிட்ட எனது பெரியப்பா, அம்மா, அப்பா ஆகியோர் ஆசியின்றேல் இச்செயல் நிகழ வாய்ப்பு இல்லை. அவர்களை வணங்குகின்றேன்.

எனது துணைவியார், பாசத்திற்குரிய எனது இரு மகன்கள், தந்தையாய் எனைப் பேணும் இரண்டு மருமகள்கள், தம்பியர் தங்கைகள் இவர்களெல்லாம் மகிழவும் நண்பர்கள், உறவினர்கள், நல்லவர்கள், பழைய மாணவர்கள் போற்றவும் இந்நூல் வெளியாகின்றது. என் நெஞ்சம் மணிவாசகரின் ஒரு அடியை இந்த நேரத்தில் அடிக்கடி சொல்லித் துதிக்கிறது.

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ அதற்கு நாயகமே"

அன்புடன்

இரா.கா.மாணிககம்

# பொருளடக்கம்


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| | ஆசியுரை | ... | |
| | பாராட்டுரை | ... | |
| | அணிந்துரை | ... | |
| | ஒரு பறவைப் பார்வை | ... | |
| | யான் இதற்கு இலன் ஒரு கைம்மாறு | ... | |
| 1. | கொங்கு நாடு - பெயர்க்காரணம் | ... | 1 |
| 2. | கொங்கு நாட்டார் தமிழ்ப் பணி: காப்பியப் புலவர்கள் | ... | 11 |
| 3. | கொங்குச் சிவத்தலங்கள் | ... | 27 |
| 4. | கொங்குநாட்டு ஊர்ப்பெயர்கள் | ... | 40 |
| 5. | அந்தியூர் | ... | 51 |
| 6. | புலமை போற்றிய புரவலர்கள் | ... | 61 |
| 7. | கொங்கு நாட்டு ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்கள் நிலை | ... | 72 |
| 8. | பெருங்கதைச்சிறப்பும் மண்ணின் மணமும் | ... | 88 |
| 9. | சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் | ... | 98 |

# 1. கொங்கு நாடு - பெயர்க் காரணம்

## தமிழகப் பிரிவுகள்

பண்டைத் தமிழகத்தைச் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என முப்பிரிவாகச் சொல்வதே பெருவழக்காக உள்ளது. இருப்பினும் தொண்டை நாட்டையும் சேர்த்து நான்காக்கிப் பெருமைப்படுத்தும் மரபும் ஒரு சூழலில் இருந்துள்ளது. இதனை,

*"வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க*
*சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்*
*தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர்வயல் தொண்டை*
*நன்னாடு சான்றோர் உடைத்து"*[1]

என்ற பாடல் கொண்டு அறியலாம். இருப்பினும் சங்க காலந் தொட்டே கொங்கு நாடு தனிநாடாகக் கருதப்பட்டமைக்குச் சான்றுகள் சங்க இலக்கியங்களிலேயே உள்ளன.

"கொங்குப்புறம் பெற்ற கொற்ற வேந்தே"[2] என்ற புறத்தொடர் இந்த நாடு தனிப்பிரிவாக இயங்கியதைக் காட்டுகிறது. பதிற்றுப்பத்து, "கொங்கர்நாடு அகப்படுத்தி"[3] என இப்பகுதியைக் கொங்கர்நாடு என

விதந்து பேசுகிறது. கண்ணகி கோட்டத்திற்கு வருகை தந்தவருள் 'கொங்கு இளங்கோசரும்' இடம் பெற்றிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கண்ணகியும் 'கொங்குச்செல்வி' எனப் போற்றப்படுகிறாள்.

இந்த நாட்டு மக்கள் 'ஆகெழு கொங்கர்'[4] எனப் பேசப்படு கின்றனர். இக்கொங்கருக்கும் ஏனையோர்க்கும் ஏற்பட்ட போர்கள் பற்றிக் ''கொங்கர் ஒட்டி''[5] ''ஈர்ம்படைக் கொங்கர்''[6] ''கொங்கர் செங்களம்''[7] என்ற தொடர்கள் காட்டுகின்றன.

இன்னும் ''வியன்தமிழ்நாடு ஐந்து'' என்ற தண்டி மேற்கோள் தொடர், ''தமிழ் மண்டிலம் ஐந்து'' என்ற திருமந்திரத் தொடர் ஆகியனவும் தமிழகத்தின் ஒரு பிரிவாகக் கொங்கு நாட்டை வைத்துப் பேசுகின்றன.

கொங்கு நாட்டைத் தனிநாடாகக் கொள்ளும் நிலை தேவார ஆசிரியர் காலத்தும் நீடித்திருந்தது. சுந்தரர்,

''*கொங்கில் குரங்கில் குரக்குத் தளியாய்*''[8]
''*கொங்கே புகினும் கூறைகொண்டு அலைப்பார் இல்லை*''[9]
''*மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமாளை*''[10]

என்று கூறுகிறார். இவற்றை விரித்துரைப்பார் போன்று சேக்கிழார் சுந்தரரின் தலயாத்திரை கூறுகிறார்.

சுந்தரர் சோழ நாட்டிலிருந்து கொங்கு நாடு அடைந்ததை, ''கொங்க நாடணைந்தார் திருவாரூரர்''[11] எனக் கூறி, ''பாண்டிக் கொடுமுடி அணைந்தார் கொங்கில்'', ''குலவு மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்'' என்றெல்லாம் கூறி முடிவில் ''கொன்னார் அயில்வேல் மறவர் பயில்கொங்கர் நாடு கடந்தருளி'' [12] எனக் கொங்கு நாடு நீங்கியதையும் கூறுகிறார். இவரே ''குடக்கொங்கு'', ''கொங்கிற் குடபுலம்'', ''கொங்கின் இடை'' என்ற தொடர்களையும் சுட்டுகிறார்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடுகையில் அவன் தவழ்ந்து விளையாடும் திருப்பதிகளாகக் ''கொங்கும் குடந்தையும் கோட்டியூரும்'' என்கிறார். இங்குக் குறிக்கப்படும் கொங்கினை ஓர் ஊரின் பெயராகக் கூறும் வழக்கமும் உண்டு.

“கொங்கு நாட்டில் வந்த பஞ்சம் காரணமாகக் கொள்ளைக் களம்” என்ற அக்கிரகாரத்தில் வசித்த பெண் ஒருத்தி இராமானுசர் மடத்தில் சேர்ந்தாள். அம்மடத்தில் உள்ளவர்கள் அவளைக் ‘கொங்குப் பிராட்டி’ என்று அழைத்தனர்.”[13]

மேற்காண் சான்றுகள் சைவ, வைணவ மதத்தவராலும் கொங்கு தனிப்பிரிவாகக் கருதப்பட்டமையைக் காட்டுகின்றன.

பேரறிஞர் மயிலை. சீனி.வேங்கட்சாமி அவர்கள் துளு நாட்டையும் சேர்த்துத் தமிழகம் ஆறு உட்பிரிவுகளைக் கொண்டது என்று கூறுகிறார். இத்துளு நாடு தெற்கு மற்றும் வடக்குக் கன்னட மாவட்டங்களாக இன்று விளங்குகின்றது.[14]

## பெயர்க் காரணம்

கொங்கு நாடு கல்வெட்டுக்களில் கொங்காணம் என்று பேசப்படுகின்றது. இதனைக் கொங்கு மண்டலம் என்று கூறும் வழக்கமும் உண்டு.[15] இந்தப் பகுதி பிற்காலச் சோழர்களின் கீழ் வந்தபோது பின்வருமாறு அழைக்கப்பட்டது. முதலாம் இராசேந்திரன், முதலாம் வீரராசேந்திரன் காலத்தில் இது அதிராசமண்டலம் என்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும் பெயர் கொண்டதை வரலாறு காட்டும்.[16]

தமிழ் நாட்டின் ஏனைய உட்பிரிவுகள் அனைத்தும் கடற்கரை கொண்டு துலங்கக் கொங்கு நாடு மட்டும் கடற்கரை இல்லாத உள்நாடாக அமைந்துவிட்டது. மேலும் இங்கு மழை வளமும் மிகக் குறைவு என்பதைக் “கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்” என்ற தொடர் காட்டுகிறது.

இப்படிப்பட்ட தொன்மையும் தன்மையும் கொண்ட கொங்கு நாட்டின் பெயர் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

## இயற்கைப் பொருள்கள் தந்த பெயர்

இயற்கை அமைப்பில் கொங்கு நாடு மலைகள் நிறைந்த நாடு. எனவே, மலைபடு பொருள்கள் இங்கு மிகுதி. கொங்கு என்ற சொல்லுக்குத் தேன், மலை, உலோகத் தாது, பூந்தாது, மேடுபள்ளம்,

...ARA PUBLIC...

சீதளம், காடு, கருங்காலி, சாம்பிராணி மரம், சந்தன மரம், பாக்கு மரம், அரிய ரத்தினக் கற்கள் என்ற பல பொருள்கள் உண்டு. 'கொங்கு' இப்படிப் பல பொருள் ஒரு சொல்லாக இருந்தாலும் அது தேன், பூந்தாது என்பனவற்றைச் சிறப்பாகக் குறிக்கும். 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகைப் பாடல்[17] இப்பொருளிலேயே வழங்குகிறது. எனவே தேன் மலிந்த நாடு என்ற பொருளில் கொங்கு நாடு எனப்பட்டது என்பர்.

கொங்கு நாட்டின் வடபகுதியான குறும்பு நாட்டின் ஒரு பகுதி கங்க நாடு. இன்றைய கோலார்ப் பகுதி இதுவே. இக்கங்கநாடு வரலாற்றுக் காலத்தில் கொங்குக் காணம் என்ற பெயரைப் பெற்றிருந்தது. இதில் கூறப்படும் கொங்கு என்பது பொன்னைக் குறிக்கும். இந்தக் கொங்குக் காணம் பின்னாளில் கொங்காணம் என மருவி விட்டது. இந்த நிலத்தின் பொன்துகளை வண்டலோடு அடித்து வருவதால்தான் காவிரிக்குப் பொன்னி என்ற பெயரும் ஏற்பட்டது.

எனவே, பொன்நாடு என்ற பொருளே கொங்குநாடு என்பதற்குப் பொருத்தமானது என்பர். மேலும் கொங்குப் பொன், உரைகல் மாற்றில் உயர்ந்தது. இதற்குக் 'கொங்குரை' என்று பெயர் வழங்குவதைப் புதுக்கோட்டைக் கல்வெட்டும் காட்டும்.

"பொற்சுரங்கமுள்ள திறத்தாலும் பொன்னின் உயர்ந்த தரத்தாலும் இந்நாட்டினைக் கொங்கு என்ற சிறப்புப் பெயரால் குறித்துள்ளார்"[18] என்கிறார் சி. கோவிந்தராசனார்.

கொங்குநாடு பசும்பொன்நாடு எனவும் பெயர் கொண்டது. ஒரு நாட்டில் அரிதாகக் கிடைக்கக்கூடிய அல்லது மிகுந்து காணப்படும் பொருள்கள் அந்த நாட்டுப் பெயர்களாதல் இயல்பே. சோழநாடு நீர்நாடு என்றும் சேரநாடு மலைநாடு என்றும் பாண்டியநாடு முத்துநாடு என்றும் வழங்குவதை இங்கு ஒப்பிட்டுக் காணமுடியும்.

'கொங்கு' என்பதற்கு அரிய மணிகள் என்ற பொருள் உண்டு. இந்த நிலப்பகுதியில் அரிய மணிகள் மிகுதியாகக் கிடைத்தன. கொங்குப் படியூரில் கிடைத்த ஏராளமான நீலக்கற்கள் பற்றிப் பதிற்றுப்பத்து பேசுகிறது. இந்தக் கற்கள் உரோமாபுரிக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டன. இந்த வணிகத் தொடர்பைக் கொங்கு மண்டலத்தில் கிடைக்கும் உரோமாபுரிக் காசுகள் கொண்டு எளிதாக நிறுவ முடியும்.

## நில அமைப்பால் வந்த பெயர்

கொங்கு நாட்டின் இயற்கை அமைப்பே இந்த நிலத்திற்கு அப்பெயர் வரக்காரணமாயிற்று என்று கூறும் கருத்துக்களும் உண்டு.

'கொங்கு' என்ற சொல் மேடுபள்ளங்கள் நிறைந்த நில அமைப்பைச் சுட்டும். கொங்குப் பகுதியும் குடகு நாடு போல மேடுபள்ளங்கள் நிறைந்த பகுதியே. எனவே இது கொங்கு நாடு எனப்பட்டது.

> *"மேலும் கொங்கு என்பது சேரநாட்டின் பெயர்களுள் ஒன்று. குடகு என்பதைப் போலவே கொங்கு என்பதும் மேடு பள்ளமான வளைந்த நிலத்தைக் குறிக்கும். இந்த நில அமைப்பின் காரணமாகவே கொங்குநாட்டிற்குக் கொங்கு என்ற பெயர் ஏற்பட்டது என்னும் முறையான கருத்து ஒன்றைப் பல ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்"*[19]

என்கிறார் யா.லட்சுமி நாராயணன்.

குணக்கு என்ற சொல் தாழ்வான பகுதியையும், கிழக்குத் (கீழ்) திசையையும் குறிக்கும். இந்தக் குணக்கே கொங்கு என மருவிவிட்டது என்கிறார் பேராசிரியர். கி. நாச்சிமுத்து அவர்கள். குடகு மற்றும் துளு நாட்டிற்குக் குணக்கில் (திசையில்) குணக்காக (தாழ்வாக) இருந்த நாடு குணக்கு நாடாகிப் பின் கொங்கு நாடாயிற்று என்பது இதன் விளக்கமாகும்.

கொங்கு நாட்டில் மழைக்காலங்களில் இந்தப் பகுதி மக்கள் சாக்குப்பையை (கோணிப்பை) ஒரு வகையாக அமைத்துத் தலைக்குப் போட்டுக் கொள்வர். இதற்குக் 'கொங்காடை' என்று பெயர். இந்த அமைப்புப் போலக் கொங்கு நாடு முக்கோண வடிவமாக அமைந்துள்ளது. எனவே கொங்கு நாடு எனப்பட்டது எனலாம்.

இன்னொரு விளக்கமும் ஈண்டுச் சுட்டப்படுதல் தேவையாகிறது. இந்த நிலப்பகுதி சேர, சோழ, பாண்டிய நாடுகளின் 'கங்கில்' (ஓரத்தில்) இருந்தமையால் இது மூவேந்தர் நாட்டினைத் தொட்ட கங்குநாடு என வழங்கப்பட்டுப் பின்னர் கொங்கு நாடு என்றாயிற்று என்பார் டாக்டர் க.வெள்ளிமலை.[20]

கொண் கானம் என்பது கொங்கம் என்றாகிப் பின் கொங்கு

என்றாயிற்று என்பர் சிலர். 'கொண்' என்றால் 'வீண்' என்பது பொருள். வீணான அதாவது வேளாண்மைக்குப் பயனற்ற மலைப்பகுதியும் காட்டுப்பகுதியும் நிறைந்த நாடு கொண் கான நாடு என்பது இதன் பொருள்.

> *"கொங்கு நாட்டில் பெரும் பகுதி மலைகளாகவும் காடுகளாகவும் பயிர்த்தொழிலுக்குப் பயன்படாத நிலங்களாக உள்ளன. எனவே பயனற்ற காடுகள் நிறைந்த நாடு என்ற பொருளில் கொண்கானம் எனக் குறிக்கப்பட்டு இப்பெயரே கொங்கு என மாறியது என்ற கருத்து ஓரளவு பொருத்தமாகவே தோன்றுகிறது. ஆயினும் நாம் இக்கருத்தையும் உறுதியாகக் கொள்வதற்கில்லை"*[21]

என்கிறார் வீ. இராமமூர்த்தி

## மன்னர்கள் - மக்களால் வந்த பெயர்

நாடாண்ட மன்னர்கள் காரணமாக நிலப்பகுதிகள் பெயர் பெறுதல் ஒருதலை. இந்த முறையில் மன்னர்கள் பெயரே நாட்டுப் பெயராயிற்று என்பர் சிலர்.

தலைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மேலைக் கங்கவம்சத்து முதல் மன்னன் கொங்குணிவர்மன். இவர் முடிசூட்டி ஆண்ட இடம் விஜயஸ்கந்தபுரம் என்பது. இதனை இன்றைய தாராபுரம் என்று கூறுவர். ஆனால் இதனை உறுதி செய்யத் தகுந்த சான்றுகள் இல்லை. இவர் முடிசூடிக் கொண்ட ஆண்டு சகம் 101, அதாவது கி.பி.179. இவன் பெயரே நாட்டுக்காயிற்று என்கிறார் வீ. இராமமூர்த்தி.[22]

இதற்கு மறுதலையாகக் கொங்கன் என்ற சேர மன்னனின் பெயரால் இப்பெயர் ஏற்பட்டது என்கின்றனர். இதற்குப் பேரூர்ப் புராணம் சான்றாக அமைவதை அவர்கள் காட்டுவர். பேரூர்ப்புராண ஆசிரியர் கொங்குப் பகுதியைக் "கொங்குவளநாடு" [23] என்றே பலவிடங்களிலும் சுட்டுகிறார். இதனை ஆண்ட கோக்கோதையாகிய சேர மன்னன் பெயர் கொங்கன் என்பதாம்.

*"கோதை பயில் விற்கொடி குலாவிய புயத்தன்*
*கோதையர் விழிக்கணை குளிக்கும் மருமத்தன்*
*கோதை கமழும் கவிகைக் கொங்கன் என விள்ளும்*
*கோதை நனி ஆண்டதொரு கொங்கு வளநாடு"*[24]

என்பது பேரூர்ப்புராணப் பாடல். (கோதை: அம்பு, பெண்கள், மாலை, மன்னன்)

எனவே, சேர வேந்தன் பெயரே நாட்டுப் பெயராயிற்று என்பது ஒரு சாரார் முடிபாம்.

அரசர்கள் பற்றிய கருத்தினைக் கொள்ளாமல் கொங்கு நாடு என்பது தலைநகரால் அமைந்த பெயர் என்கிறார் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். பழைய கொங்குப் பகுதியின் தலைநகர் கொங்கூர் என்பது எனவும் அந்த ஊர் இன்றைக்குத் தாராபுரத்திற்கு அருகில் உள்ள கொங்கூரே என்பதும் அவர் முடிவு. தலைநகரின் பெயர் நாட்டிற்கு ஆதல் என்ற பொருளில் இது நிறுவப்படுகிறது.

தனிப்பட்ட மன்னர்கள் பெயர் கொண்டு நாடுகளுக்குப் பெயர் அமைதல் என்பது பெரும்பாலும் இல்லை. ஆனால் ஒரு நாட்டிற்குப் பெயர் அந்த மண்ணுக்குரிய மக்கள் காரணமாக அமைதல் பொருத்தமே. எனவே, கொங்கர்கள் என்ற இனமக்கள் வாழ்ந்த நாடு கொங்கர் நாடு என வழங்கப்பட்டுப் பின் கொங்கு நாடு என்றாயிற்று என்பதே பொருத்தம். சேரர் நாடு = சேரநாடு ; சோழர்நாடு = சோழநாடு; பாண்டியர் நாடு = பாண்டியநாடு ; தொண்டையர் நாடு = தொண்டை நாடு என்ற பிற பிரிவுகள் பெயர் பெறுதலும் இந்த இயற்கை நிலையை வலியுறுத்தும். மேலும் இப்பகுதி மக்கள் கொங்கர் என்றே வழங்கப்பட்டமைக்குச் சங்க இலக்கியங்களே சான்றுகளாம்.

அப்படியாயின் சேரர், சோழர், பாண்டியர் என்பன அரசர் குலப் பெயர்கள் அல்லவா? என்றொரு வினாவும் எழுகிறது. மக்களுக்குப் பொதுவாக வழங்கப்பட்ட பெயர்களைப் பிற்காலத்தில் மன்னர்கள் தங்கள் குலப்பெயராகக் கொண்டிருக்கலாமோ என்று இவ்விடத்தில் ஒரு பதிலையும் கூறமுடியும். ஆனால் முடிவாக இதனை முடிவு செய்யச் சரியான அரண்கள் இல்லை.

ஆனால் இயற்கைப் பொருள்கள் காரணமாகவே இப்பெயர் அமைந்தது என்பதே சரி என்பர் சிலர்.

"மக்களால் பெயர் பெற்றது என்பதைக் காட்டிலும்
இயற்கைப் பொருள்களால் பெயர் பெற்றது என்பதே சரி"[25]
என்கிறார் யா. லட்சுமி நாராயணன்.

தமிழகத்தின் தொன்மை சான்ற ஊர்கள் இயற்கைப் பொருள்களால் பெயர் பெற்றுள்ளன என்பது உண்மையே. மருதை, காஞ்சி, தில்லை போன்ற ஊர்களை இதற்குச் சான்று காட்ட முடியும். சிற்றூர்கள் கூட இயற்கைப் பொருள்களாலேயே பெயர் பெறுவதை இன்றுள்ள ஊர்ப்பெயர்கள் கொண்டும் நிறுவலாம்.

ஆனால் தமிழ்நாட்டுப் பெரும் பிரிவுகள் இயற்கைப் பொருள்களால் பெயர் பெறவில்லை. மாறாகச் சேர, சோழ, பாண்டிய, தொண்டை மற்றும் கொங்கு நாடுகள் மக்கள் அல்லது அம்மக்கள் குலத்தின் தலைவராகிய மன்னர்களாலேயே பெயர் பெற்றுள்ளன. மக்கள் அல்லது மன்னர்களாலேயே கொங்குநாடு இப்பெயர் பெற்றது என்பதே இப்போதைக்கு ஏற்கக்கூடிய முடிவாகும்.

இந்த மண்ணின் மக்கள் கொங்கர்கள். இவர்களின் நாடு கொங்குநாடு எனக் கொண்டாலும் இக் கொங்கர்கள் யாவர் என்பதிலும் ஏராளமான கருத்து வேறுபாடுகள் ஆய்வாளர்களிடையே நிலவுகின்றன.

## எல்லையும் பரப்பும்

கொங்குநாடு தனிப்பிரிவாகக் கருதப்பட்டாலும் அது பல்வேறு மன்னர்களின் ஆட்சியின் கீழேயே இருந்துள்ளது. இன்றைக்குக் கொங்கு நாட்டின் உட்பிரிவுகள் எனப்படும் பிரிவுகள் சோழ மன்னர்கள் ஆண்டபோது ஏற்படுத்தியவை என்பர்.

பொதுவாகக் கொங்கு நாட்டின் தென் எல்லை பொதினி (பழனி வைகாவூர்); மேற்கு எல்லை வெள்ளிமலை; கிழக்கு எல்லை குளித்தலை, மதிற்கரை என்றும் வடக்கு எல்லை தலைமலை அல்லது பெரும்பாலை என்றும் கூறப்படுவதே வழக்காக உள்ளது.

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப் பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண்டலைசூழும் காவிரி சூழ் நாடா!
குழித்தண்டலை அளவும் கொங்கு."[26]

என்பது ஒரு தனிப்பாடல், இன்னும் சில பாடல்களில் கொங்கு எல்லைகளைக் கூறுவதில் சில சில வேறுபாடுகள் இருப்பினும் பெருத்த மாற்றங்கள் இல்லை எனலாம்.

ஆனாலும் கொங்கின் மேற்கெல்லை குறித்துப் பேரறிஞர் மயிலை. சீனி.வேங்கடசாமி கூறும் கருத்து ஊன்றிக் காணத்தக்கது. அவர் கொங்கின் வடஎல்லை கன்னட நாட்டில் பாய்கிற காவிரி ஆறுவரை அதாவது ஸ்ரீரங்கப் பட்டினம் வரை பரந்திருந்தது என்கிறார். இதற்குச் சான்றாகச் சில செய்திகளையும் அவர் கூறுகிறார்.

கி.பி.850 இல் ஆண்ட நிருபதுங்க அரசன் என்பான் தான் எழுதிய கவிராஜ மார்க்கம் என்ற கன்னட இலக்கண நூலில் பழங்கன்னட நாட்டின் தென் எல்லை மைசூரில் பாய்கிற காவிரி ஆறு என்று கூறுகிறான். எனவே ஸ்ரீரங்கப் பட்டினத்திற்குத் தெற்கே கன்னட நாடு இல்லை என்பது தெளிவாகிறது. இந்தச் சான்றால் கொங்குநாடு ஒருகாலத்தில் இன்றைய கன்னட நாடளவும் பரவி இருந்து பின்னொரு காலத்தில் பரப்பால் சுருங்கிப் போனதை அறியமுடிகிறது.

## பழமையும் பெருமையும்

கொங்கு மண்டலம் பழமையும் பெருமையும் உடையது. இந்த மண்ணின் பல பகுதிகளில் காணப்படும் முதுமக்கள் தாழிகள், பழைய மட்பாண்டங்கள், கல்வட்டங்கள் இதன் பழமையைக் காட்டுகின்றன.

இங்கே கிடைக்கும் உரோமாபுரி நாணயங்கள், கடற்கரையும் துறைமுகமும் இல்லாத இந்த நாடானது பண்டைக்காலத்தில் மேலை நாட்டோடு கொண்டிருந்த வணிகத் தொடர்புக்குக் கட்டியம் கூறுகின்றன.

இந்த மண்ணை ஆண்ட குறுநில மன்னர்கள் வள்ளல் தன்மையில் வான்புகழ் பெற்றதோடு முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை நேரும் தகுதி கொண்டோராயும் திகழ்ந்திருந்தனர்.

சங்க இலக்கியப் புலவர் சிலர் இத்தரையின் உரிமைக்காரர்களாக இருந்து தமிழ்ப்பணி செய்துள்ளனர்.

நூற்றாண்டுகளாக இருந்து வரும் இந்த மண்ணின் பண்பாடும் வரலாறும் ஆட்சி மற்றும் மதம் போன்றவற்றால் தனித் தன்மை கெடாது நிலை பெற்று வாழ்ந்திருப்பதை இன்றும் உணர முடியும்.

## சான்றாதாரங்கள்


1. தனிப்பாடல்
2. புறநானூறு : 373
3. பதிற்றுப்பத்து : 22
4. பதிற்றுப்பத்து : 22
5. அகநானூறு : 253
6. நற்றிணை: 10
7. சிலப்பதிகார்ம் : 23
8. சுந்தரர் : ஊர்த்தொகை
9. சுந்தரர் : அவினாசிப் பதிகம்
10. சுந்தரர் : அவினாசிப்பதிகம்
11. சேக்கிழார் : சேரமான் பெருமாள் நாயனார் புராணம்
12. சேக்கிழார் : ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்
13. த. இரமணி : கொங்கு நாட்டுச் சமயநிலை (கட்டுரை) ப.74 கொங்கு நாட்டியல் - பாரதியார் பல்கலைக்கழகம் - கோவை : 1988
14. கொங்கு நாட்டு வரலாறு - என்.சி.பி.எச். சென்னை : 1974
15. சி. கோவிந்தராசன் : கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் (கட்டுரை) கொங்கு நாட்டியல் - பாரதியார் பல்கலைக்கழகம் - 1988, ப.1
16. சி.எம்.ஆர். கொங்கு நாட்டுவரலாறு. ப. 176
17. குறுந்தொகை : 2
18. கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் (கட்டுரை), கொங்குநாட்டியல் : ப. 3
19. கொங்கு நாட்டு வரலாறு : ஸ்டார் பிரசுரம் - சென்னை : 1985,ப. 13
20. சங்ககாலக் கொங்குநாடு (கட்டுரை) கொங்குக் கட்டுரை மணிகள் - கோபி கலைக் கல்லூரி வெளியீடு - கோபி. ப.2
21. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் - லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி - திருச்சி - 1977. ப. 6
22. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் - லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி - திருச்சி - 1977. ப. 6
23. பேரூர்ப்புராணம் : திருநாட்டுப்படலம் : 1
24. பேரூர்ப் புராணம்.
25. கொங்கு நாட்டு வரலாறு : ப. 8
26. தனிப்பாடல்.


* * *

# 2. கொங்கு நாட்டார் தமிழ்ப் பணி காப்பியப்புலவர்கள்

பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதி கொங்கு நாடு என வழங்கப்பட்டது. அப்பண்டைய கொங்கு நாடு இன்றைய கோவை, ஈரோடு, நீலகிரி, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களையும் பழனி மற்றும் கரூர்ப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

கொங்கு நாடு என்ற பெயர் கொங்கு அதாவது தேன் மிகுதியாகக் கிடைப்பதனால் வந்த பெயர் என்பர். மலைபடு பொருட்கள் கொங்கு என்ற பெயரால் வழங்கப்படுதலின் மலைவளப் பொருட்களால் செழித்த நாடு ஆதலின் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். கொங்கர் என்ற இனத்தவர் இந்த நாட்டை ஆண்டதால் அவர் பெயரால் இப்பகுதி கொங்கு நாடு எனப்பட்டது என்றும் சிலர் கருத்துரைக் கின்றனர். பிற நாடுகளாகிய சேர, சோழ, பாண்டிய நாடுகளின் கங்கில் (எல்லை ஓரத்தில்) இருந்தமையின் இது கொங்கு நாடெனப்பட்டது என்று கருத்துரைக்கின்றவர்களும் உண்டு. இயல்பாகவே இந்நாடு நீர்வளம், நிலவளம் குறைந்தது எனினும் வழிவழி இந்த நாட்டின்கண் புலவர்கள் பலர் தோன்றித் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர்.

சங்க காலத்தில் இருந்த அந்திகந்தரத்தனார் (அந்தியூரைச் சார்ந்தவர்), பெருந்தலைச் சாத்தனார் (பெருந்தலையூரைச் சேர்ந்தவர்) தொடங்கிச் சிறப்பொடு பொருந்திய புலவர்களாக முப்பது பேரைச் சங்க காலக் கொங்குப் புலவர்களாகப் புலவர் குழந்தை பட்டியலிடு கின்றார்.[1] இவர்களுக்குப் பிறபட்டும் இன்றும் இந்த நாட்டில் தமிழறிஞர்கள் பலர் தோன்றியுள்ளனர். இவருள் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், நிகண்டுகள், இலக்கணங்கள், உரைகள் எனப் பல்வேறு வகைகளில் தமிழுக்கு ஆக்கம் தேடியவர்கள் அடங்குவர். தமிழகத்தின் வேறு பகுதிகளில் காணப்படாத இலக்கிய வகைகளை எழுதிய புலவர்கள் சிலர் கொங்கு நாட்டுக்குச் சிறப்பினைத் தேடித் தந்துள்ளனர். சான்றாகத் "தாய்மகள் ஏசல்" என்ற சிற்றிலக்கிய வகை கொங்கு நாட்டில் மட்டும் காணப்படும் ஒன்றாகும். இப்புலவர் கூட்டத்தின் வரலாறு தனியாக விரிவாக ஆராய்வதற் குரியது. புலவர் இரா.இளங்குமரன் இன்றைய கொங்குப் புலவர்களுள் ஒன்பது பேரைப் பற்றிக் "கொங்கு நாட்டுப் புலவர்கள்" என்றொரு நூல் செய்துள்ளார். ஆனால் அஃது ஓர் அறிமுக நூலாக மட்டுமே அமைந்துள்ளது.[2]

இக்கொங்கு நாட்டுப் புலவர் குழுவில் காப்பியம் பாடிய புலவர்கள் பற்றிய செய்திகளை அறிமுகப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்பியம், புராணம், இதிகாசம் என்ற இலக்கிய வகைகள் ஒரே தன்மையனவாகக் கொள்ளப்படினும் அவற்றிடையே நுட்பமான சில வேறுபாடுகளும் உள்ளன.

> *"புராண இலக்கியங்கள் பெருங்காப்பிய வகையைச் சார்ந்தன. வடமொழியிலுள்ள புராண நடை வேறு; தமிழ்மொழியிலுள்ள புராண நடை வேறு. வடமொழி யிலே உள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன தமிழ்ப்புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வட மொழியில் காவியங்கள் தனியே இயங்குவன."*[3]

இருப்பினும் இந்த மூன்று பிரிவுகளையும் சார்ந்த பெரு நூல்களைக் காப்பியம் என்றே கொள்ளும் மரபு தமிழிலக்கியத்தில்

உண்டு. பெரிய புராணத்தைக் காப்பியம் என்று கூறும் முறைமையை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

ஆனால் தமிழில் உள்ள புராணங்கள் அனைத்தும் காவியப் பாங்குடையன எனக் கூறமுடியாது. அவை தனித்த இலக்கண அமைப்பில் வருவன. எனவே, தலபுராணங்கள் பல தனியான ஆய்வுக்குரியன. கொங்கு நாட்டில் மட்டும் ஏறத்தாழ இருபத்தேழு தலபுராணங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் கச்சியப்பரின் பேரூர்ப்புராணமும் சைவ எல்லப்ப நாவலரின் தீர்த்தகிரிப் புராணமும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாம்.

கொங்கு நாட்டுப் புலவர்கள் செய்த காப்பியங்களுள் தகடூர் யாத்திரை தொன்மையானது. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்கதை சிறப்பானது. பின்னர்த் தோன்றிய பக்தமான்மியம் பக்தி சார்பானது. அண்மைக் காலத்திய இராவணகாவியம் இராமகதையை எதிர்த்துப் புரட்சி செய்த புதுமையுடையது. திருவள்ளுவர் காவியம் பொதுமையறம் வலியுறுத்த வகுக்கப்பட்டது.

இவையன்றி வாய்மொழிக் கதைவடிவிலான அண்ணன்மார் சாமிகதையும் இராமனின் வரலாற்றை உடுக்கையடிப் பாடலாக ஆக்கியுள்ள தக்கை இராமாயணமும் சிறப்பானவையாகக் கொள்ளத் தகும் பெருநூல்களாக மிளிர்கின்றன.

இந்தப் பெருநூல்களுள் தகடூர் யாத்திரை இந்த நாட்டில் நடந்த போர் ஒன்றைப் பின்னணியாகக் கொண்டது. ஆனால் இந்த நூல் முழுமையும் கிடைக்கவில்லை. அண்ணன்மார் சாமி கதை இந்த மண்ணைப் பற்றிய கதை. இது கொங்கு நாட்டில் நடந்த வரலாற்றுக் கதைக் காப்பியம். பேரூர்ப்புராணம் இந்த நாட்டின் பெருமை மிக்க தலமாகிய பேரூரைக் குறித்த தலபுராணம். பிறவெல்லாம் கொங்கு நாட்டுப் புலவர்கள் பாடிய காவியங்களேயன்றி இந்த மண்ணிற் குரியவை அல்ல. கதைத் தலைவர்களும் கதை நிகழ்ச்சிகளும் தமிழகத்தைச் சாராது வடநாட்டுக் குரியவையாக அமைந்துள்ளன. திருவள்ளுவர் காவிய நிகழ்ச்சிகள் வெளிநாடுகளிலும் நடைபெறு கின்றன.

## தகடூர் யாத்திரை

தருமபுரி என்று இன்று வழங்கப்படும் ஊரின் பழைய பெயர் தகடூர் என்பதாகும். இத்தகடூர் கொங்குக் குறுநில வேந்தனும் கடையெழு வள்ளல்களில் ஒருவனுமாகிய அதியமான் என்பானின் தலைநகராகும். இவன் சேரன் பெருஞ்சேரலிரும்பொறைக்குத் தம்பி முறைமை யுடையவன். இச்சேரன் தகடூர் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றான். எனவே தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்று பாராட்டப்படுகின்றான். இந்தப்பங்காளிப் போரைக் கருவாகக் கொண்டு பாடப்பட்டதே தகடூர் யாத்திரை என்ற நூலாகும். இந்த நூலுக்குப் பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தும் மூலமாக இருந்திருக்கக்கூடும்.

வடமொழியில் ''யாத்திரை'' என்னும் சொல் படையெடுத்துச் செல்லும் ''மேற்சேறல்'' என்னும் பொருளைக் கொண்டது. ஆனால் பின்னாளில் இச்சொல் கடற்பயணம், கூத்து, திருவிழா, பிரயாணம் ஆகிய பொருள்களிலும் வழங்கியது. இப்பொருள்களோடு தகடூர் யாத்திரை என்ற சொல்லின் பொருள் பொருந்திவாராமையால் சிலர் இந்த நூலைத் ''தகடூர் மாலை'' எனத் திருத்தவும் முயற்சி செய்தனர். இதனை வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது நூலில் தெரிவித் துள்ளார்.[5]

தொல்காப்பிய உரைகாரர் நச்சினார்க்கினியர் இதனைத் தொடர் நிலைச்செய்யுள் என்கிறார்.[6] 'தொன்மை' என்னும் வனப்புக்குச் சான்றாக இதனைக் காட்டும் உரையாசிரியரான பேராசிரியர் இதில் உரைநடை மிகுந்து வந்திருந்ததைச் சுட்டுகிறார். ''பாட்டு வருவது சிறுபான்மையாகலின் அவை தகடூர் யாத்திரை போல்வன''[7] என்பது அவர் குறிப்பு. இதில் பிறபாடை, தழுவிவந்த பகுதிகளும் இருப்பதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார்.[8]

இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. புறத்திரட்டில் தொகுக் கப்பட்டுள்ள 44 பாடல்களும் உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டியுள்ள பாடல்களும் சேர்ந்து 49 பாடல்கள் கிடைத் துள்ளன. இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, ஆகிய இருயாப்புகளையும் கொண்டது.

இதன் ஆசிரியர் வரலாறு, இது தோன்றிய காலம் முதலியன குறித்துத் தெரியச் சான்றுகள் இல்லை. நூல் முழுமையும் கிடைக்காமையின் நூல் அமைப்பு, அது தரும் செய்திகள் குறித்தும் அறிய முடிவதில்லை. ஆயினும் இதன் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டு என்கிறார் வையாபுரிப் பிள்ளையவர்கள்.[9]

கிடைத்துள்ள பாக்களைக் கொண்டு பார்க்கையில் அரிசில் கிழார், பொன்முடியார் முதலிய சங்கப்புலவர்களும், சில அரசர்களும் அதியமானின் படையைச் சேர்ந்த பெரும்பாக்கனும், சேரனின் படைத்தலைவன் நெடுங்கேரளனும் இந்த நூலில் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

இந்நூலாசிரியர் கவிநயம் மிக்க பாடல்களை எழுதும் திறனுடையவர். இதனை நெடுங்கேரளன் இறந்தபோது அவன் தாய் புலம்பிய,

*"எற்கண் டறிகோ? எற்கண் டறிகோ?*
*என்மக னாதல்எற்கண் டறிகோ?*
*கண்ணே கணைமூழ் கினவே; தலையே*
*வண்ண மாலை வாளிவிடக் குறைந்தன*
*வாயே பொருநுனைப் பகழிமூழ்கலிற் புலால்வழிந்து*
*ஆவ நாழிகை யம்புசெறித் தற்றே !*
*நெஞ்சே வெஞ்சரம் கடந்தல; குறங்கே*
*நிறங்கரந்து பலசரம் நிறைந்தன; அதனால்*
*அவிழ்பூ அப்பணைக் கிடந்தோன்*
*கவிழ்பூங் கழற்றின் காய்போன் றனனே"*[10]

என்ற பாடல் கொண்டு அறியலாம்.

## கொங்கு வேளிர்

கொங்கு நாட்டாரின் தமிழ்ப்பணிக்குப் பெருமை சேர்க்கும் 'பெருங்கதையைச் செய்தவர் கொங்கு வேளிர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. பிறந்தநாடு மற்றும் குலத்தால் இவர் பெயர் பெற்று இவர் கொங்கு வேளிர் என வழங்கப்படுகிறார். இவர் விசயமங்கலம் என்ற ஊரினர். விசயமங்கலத்தில் உள்ள சமணத் தீர்த்தங்கரரின்

கோவிலாகிய சந்திரபிரபாத் தீர்த்தங்கரரின் கோயிலுள் இவரது சிலை காணப்படுகின்றது. எனவே இவர் சமணசமயம் சார்ந்தவர். ஆய்வாளர்கள் இப்புலவரது காலத்தைக் கி.பி.7 ஆம் நூற்றாண்டு என முடிவு செய்துள்ளனர்.

கொங்கு மண்டல சதகம் இவரது பெருமையைக் கீழ் வரும் பாடலால் புகழ்கிறது.

*''நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்*
*கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி*
*மேதக்க சொல்சங் கத்தார் வெள்கவே கொங்கு வேள்அடிமை*
*மாதைக் கொண்டுத் தரஞ்சொன் னதுவுங் கொங்கு மண்டிலமே''*[11]

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும் என்பது போன்று வேளிரின் வீட்டு வேலைக்காரியும் சங்கப் புலவரின் ஐயங்களை நீக்கினாள் எனின் வேளிரின் புலமைத்திறத்தைக் கூறலும் இயலுமோ? இவர் செய்த பெருங்கதை வடமொழிக் காப்பியமாகிய 'பிருகத் கதா'வின் தமிழ் வடிவம். எனவே இவர் வடமொழிப் புலமையும் நிரம்பியவர் எனலாம். மேலும் இவர் இடைச்சங்கப் புலவர்களால் செய்யப்பட்ட பல செய்யுள் இலக்கணங்களை ஆராய்ந்து நூல் செய்தார் என அடியார்க்கு நல்லாரால் சிறப்பிக்கப்படுகிறார்.[12]

பெரிய கதைகளை வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கும் புதிய மரபைத் தொடங்கி வைத்த புரட்சியாளர் கொங்கு வேளிர். இவரது வழியிலேயே பின்வந்த காப்பியங்கள் அனைத்தும் வடநாட்டுக் கதையை மூலமாகக் கொண்டன. இதில் விலக்காக அமைவது பெரிய புராணம் மட்டுமே.

குணாட்டியார் முதன் முதலில் ''பிருகத்கதா'' என்ற பெயரில் இக்காவியத்தைப் பைசாச மொழியில் எழுதினார். இதனைக் கங்க மன்னன் துர்விநீதன் அதே பெயரில் வடமொழியில் செய்தான். இந்த வடமொழிக் கதையை அதே பெயரைத் தமிழ்ப்படுத்திக் கொங்கு வேளிர் செய்தார். இக்காப்பிய நாயகர்கள் உதயணனும் அவனது மகன் நரவாணதத்தனுமாவர். இவர்கள் வட இந்தியாவில் வாழ்ந்த மன்னர்கள். இவர்கள் குறித்த நூல்கள் வடமொழியில் பல உள்ளன. தமிழில் பெருங்கதை, உதயண குமாரகாவியம், வச்சத் தொள்ளாயிரம் என்பன

இவர்களைப் பற்றிய நூல்களாகும். இம்மூன்றனுள் பெருங்கதை காப்பியத் தகுதி படைத்தது. உதயண குமாரகாவியம் ஐஞ்சிறு காப்பியத்தில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. வச்சத்தொள்ளாயிரம் முழுமையும் கிடைக்காத நூலாக உள்ளது.

பெருங்கதை உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகதகாண்டம், வத்தவகாண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்று ஆறு காண்டங்களைக் கொண்டதாதல் வேண்டும். ஆனால் இப்போதுள்ள பெருங்கதையின் முதற்காண்டத்தின் முதற்பகுதியும், நரவாணகாண்டத்தின் பிற்பகுதி மற்றும் துறவுக் காண்டமும் முழுமையாகக் கிடைக்கவில்லை. மேலும் கிடைத்துள்ள பகுதிகளில் சிற்சில இடங்களும் சிதைந்துபோய் உள்ளன.

இக்காப்பியம் அகவற்பாவால் ஆனது; அந்தாதித் தொடை அமையப் பெற்றது; உரையாசிரியர்கள் பலரும் மேற்கோளாகக் காட்டும் பெருமை பெற்றது; நூற்றுக்கு மேற்பட்ட கதாபாத்திரங்களையும், ஏராளமான நிகழ்ச்சிகளையும் உடையது. இந்நூலுள் பல கதைகள் ஒன்றுக்குள் ஒன்றாய்க் கட்டுக் கோப்புடன் கூறப்பட்டுள்ளன. கொங்குவேளிரின் கதைபுனை திறனுக்கு இது சான்றாக அமைகின்றது.

இக்காப்பியம் வடநாட்டுக் கதையாயினும் தமிழ் மரபுகள் மாறாவண்ணம் ஆசிரியர் இதனைச் செய்துள்ளார். சான்றாக உதயணன், வாசவதத்தை திருமணத்தைக் களவுவழி வந்த கற்பு மணமாக (தமிழ் அகப்பொருள்) வேளிர் அமைக்கின்றார். வடநாட்டுக் கதைக்குத் தமிழ் அக மரபை முதன்முதலில் கொங்கு வேளிர் ஏற்றிப் புதுமை படைக்கப் பின்வந்த காப்பியங்களில் திருத்தக் தேவரும், கம்பரும் இதனைத் தழுவிக் கொள்வதைக் காண்கிறோம்.

பல்வேறு இடங்களிலும் வடபுலம் தமிழகமாவதைக் காண்கிறோம். கொங்குநாட்டுப் பண்பாடுகளும் இதில் மிளிர்கின்றன.

> *"அந்நாளய நாகரிக வாழ்வின் சிறப்பெல்லாம்,*
> *வகையெல்லாம் இந்த நூலில் விளங்குவது போல்*
> *வேறெந்தத் தமிழ் நூலிலும் விளங்குவதில்லை"*[13]

என்று பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சொல்லும் மதிப்புரை இக்காப்பியப் பெருமைக்குக் கட்டியம் கூறுகிறது.

## எம்பெருமான் கவிராயர்

கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் கம்பரின் இராமகாதையை எளியோரும் ஏற்கும் வண்ணம் நாட்டார் இசைப்பாட்டில் தக்கை இராமாயணமாகச் செய்தவர் எம்பெருமான் கவிராயர். இவர் பத்தர்பாடி என்ற ஊரினராக இருத்தல் வேண்டும். இந்த ஊர் சங்ககிரி துர்க்கத்திற்கு அருகில் இருந்த ஊராக இருக்கக் கூடும். காரணம் இப்புலவர் சங்ககிரியில் கச்சேரி அதிகாரம் செய்து வந்தவர். பின்னர் உயர் பதவி பெற்று மதுரைக்கு மாற்றலாகிச் சென்றார். அங்கே அப்பகுதியைச் சேர்ந்த அழகர் கோயிலில் தம் குலப் பெண்ணாகிய (இடையர்குலம்) பூங்கோதை என்பாரை மணந்தார். மீண்டும் சங்ககிரி வந்த இவர் இந்தத் தக்கை இராமாயணப் பனுவலைச் செய்தார். இவர் தம் மனைவியார் பூங்கோதையாரும் கல்வி நலம் வாய்ந்தவர். வடமொழிப் பயிற்சியும் வேதாந்த ஞானமும் நிறைந்தவர். இப்பெண்மணி அத்வைத ஞானநூல் ஒன்றும் இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. எம்பெருமான் கவிராயர் தக்கை இராமாயணம் பாடத் துணையாக இருந்து ஆதரித்தவர் நல்லதம்பிக் காங்கேயன் என்பவர். இப்புரவலர் திருப்பணிகள் பல செய்தவர். மேலும் சிறந்த கலை இரசிகரும் ஆவார். இவர் தூண்டுதலே தக்கை இராமாயணம் உருவாகத் துணையாயிற்று. இவரது காலம் கி.பி.1600ஐ ஒட்டியது. எனவே கவிராயர் கி.பி.17 ஆம் நூற்றாண்டினர் எனலாம். இந்த நூல் சங்ககிரி வரதராசப் பெருமாள் திருக்கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கம்பரைப் போன்றே கவிராயரும் தம்மை ஆதரித்த புரவலரை நன்றியுடன் தமது நூலில் போற்றியுள்ளார்.

தக்கை என்பது ஓர் இசைக்கருவி. இது கொங்கு நாட்டில் பெருவழக்கில் இருந்த ஒன்று. இசைத்துறையில் இக்கருவி அகப்புற முழவில் அடக்கப்படுகின்றது. கொங்கு நாட்டுப் பிரபந்தங்களில் திருச்செங்கோட்டுப் பள்ளு, குருச்சேத்திர நாடகம், அரிச்சந்திர நாடகம் ஆகியவற்றுள் தக்கை அடித்துப் பாடும் பாடல்கள் சில உள்ளன. பனை எழுபது என்ற நூலும் தக்கையடிப் பாடல்களைக் கொண்டது. கொங்கு நாட்டு இன்னொரு சிற்றிலக்கியமான கபிலகதை நூறு தக்கைப் பாடல்களால் ஆனது. இதன் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு ஆகும். கி.பி.17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாட்டார் இலக்கிய வகையில்

உருவான இத்தக்கை இராமாயணம் தமிழுக்குப் புதுமை சேர்த்த பெருமை கொண்டது. பாமரரை நோக்கிச் செய்யப்பட்ட இந்த இசைக்காவியம் புதிய அமைப்பை இலக்கிய உலகில் தோற்றுவித்துள்ளது. கதாகாலட்சேப முறையில் வில், உடுக்கை போன்ற கருவிகள் துணை கொண்டு கதைகள் கூறப்படுவன போன்றே தக்கையைத் துணையாகக் கொண்டு பாடப்படும் இராமகதையே தக்கை இராமாயணமாகும். கம்பனின் பத்தாயிரம் பாடல்கள் இந்த நூலில் 3250 பாடல்களாகச் சுருக்கப்பட்டுள்ளன. இந்த நூலுள் கம்பன் பாடல்கள் அடி பிறழாமல் முழுமையாக அப்படியே வருமிடங்களும், சொற்களும் தொடர்களும் மாறாமல் வருமிடங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இவ்வாசிரியர் தம் கவித்திறனுக்கு ஓரிரு சான்றுகளே போதும். சீதையின் பேரழகு,

*"நற்பொருளைச் செழுந்திருவை நாரியார்க்கெல்லாம் அரசைப்*
*பொற்பொலிவை இன்னமுதப் புலன் சுவையைப் பூமணத்தைச்*
*சொற்பொருளை அயன் முதலோர் துதித்து நல்லோர்க் குவமை*
*சொல்லும்*
*இற்பொலிவைப் புகழ என்றால் யாரை வேறுவமை சொல்வேன்"*[15]

என்று போற்றப்படுகிறது. "அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்" என்ற கம்ப சித்திரம் தக்கையில் *"மாது தன்னை வள்ளல் கண்டான்; வள்ளலையும் மாது கண்டாள்"*[16] என்று பாடப்படுகிறது.

*"இது போலும் இலக்கிய வகை இவர்க்கு முன்னும்*
*இல்லை; பின்னும் உண்டாகவில்லை. இவர் படைப்பை*
*இசைத்தமிழ்க் காப்பியம் எனலாம்"*[17]

என்று இதன் பதிப்பாசிரியர் கூறுவது நடுநிலையான ஆய்வுக் கூற்றே எனலாம்.

### கந்தசாமி சுவாமிகள்

"பக்த மான்மியம் என்ற பக்திக் காவியம் பாடிய இச்சான்றோர் கோவைக்கு அடுத்த சரவணம்பட்டியில் கலியுகம் 4994 நந்தன ஆண்டில் (கி.பி.1928) வேளாளர் குலத்தில் அவதரித்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கடசாமிக் கவுண்டரும், குட்டியம்மையும் ஆவார்கள்.

இவர் அருள் நிறைந்த இராமானந்த சுவாமிகளைச் சரணடைந்து அவரையே குருவாக ஏற்றுத் தீட்சையும் பெற்றுக்கொண்டார். தம் குருவின் ஆணைப்படி பாடிய இந்தப் பக்த மான்மியத்தின் ஒவ்வொரு கதி முடிவிலும் ''இராமானந்தப் பெயர் கொடு எனது இதயத்திலங்கும் பெருமாளே'' எனத் தம்குருவை வழிபடல் இவரது குருபக்திக்குச் சான்றாகும்.

இப் பக்தமான்மியம் ஒரு தழுவல் நூலாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன் மிதிலாபுரியில் அருளப் பெற்ற ''பக்த மாலா'' என்பது இதன் மூல நூலாகும். அந்நூலுள் வைணவம், சாக்தம், சைவம் சார்ந்த பக்தர்களின் சரிதம் கூறப்படுகின்றது. இம் மூன்று சமயப் பக்தருள் வைணவ பக்தர்களின் வரலாற்றை மட்டும் பக்த மான்மியம் உரைக்கின்றது.

பக்தமான்மியம் என்றால் பக்தரது பெருமை என்பது பொருளாம். இப்பக்தர் பிராசீனபக்தர் எனப்படுகின்றனர். பிராசீனம் என்றால் பழமை. எனவே பழங்காலத்திலிருந்த பக்தரது மகிமையை உணர்த்துவது இந்நூலின் கருத்தாம். இந்நூலுள் ஒவ்வொரு அடியாருடைய வரலாறும் 'கதி' என்று அழைக்கப்படுகின்றது. 'கதி' என்பதற்குப் பலபொருள் இருப்பினும் படலம், பிறப்பு, பரம கதி, மோட்சம் என்ற பொருள்கள் இவ்விடத்தில் கொள்ளத்தகும் பாங்கில் அமைந்துள்ளன.

பெரியபுராணத்தில் சேக்கிழார் நாயன்மார்களின் பக்தி வரலாற்றைப் பாடியது போன்று இப்பக்தமான்மியத்தில் ஸ்ரீகந்தசாமி சுவாமிகள் வைணவ அடியார்களின் வரலாற்றைப் பாடியுள்ளார். சேக்கிழார் ஒவ்வொரு நாயன்மார் புராணத்தின் இறுதிப் பாட்டிலும் அடுத்த நாயன்மாரைச் சொல்லி அவரது வரலாற்றைச் சொல்லப் போகிறேன் என்று பாடுவார். ஆனால் பக்த மான்மியத்தில் இம்முறை சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. இந்நூலின் ஒவ்வொரு கதியின் முதற் பாடலிலும் சென்ற கதியில் இன்னவரைப் பாடினேன்; இனி இவரைப் பாடப்போகிறேன் என்று நூலாசிரியர் உரைப்பார். இதுவே இவ்விரு நூல்களுக்கிடையேயான வேறுபாடாம்.

பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், சந்திரதத்தர் வரலாறு,

பிராசீனபக்தர் தொகை என்ற நான்கு பகுதிகளும் முதலில் அமைய அடுத்து நாபதாசர் தொடங்கி வருணனை இறுதியாக 98 கதிகள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. விருத்தப்பாவால் இயன்ற இது 7367 பாடல்களைக் கொண்டது. சிரவணபுர கௌமார மடம் இந்நூலைப் பதிப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் தோன்றிய இராமானுசர் தவிர இக்காவியம் கூறும் வைணவ பக்தர்கள் அனைவரும் வட நாட்டைச் சார்ந்தவர்களே. இராமாயணம், பாரதம், குரு பரம்பரை, அரிசமய தீபம், பக்த விஜயம், பக்த லீலாமிர்தம் முதலிய நூல்களில் கூறப்பட்ட செய்திகள் இதில் இடம் பெறுகின்றன. இத்தோடு சில புதிய செய்திகளையும் ஆசிரியர் சேர்த்துள்ளார். சான்றாக இராமாயணம் மற்றும் பாரதம் சொல்லாத சில செய்திகளை இவர் முறையே வீடண கதியிலும் விதுரமங்கை கதியிலும் கூறியுள்ளார்.

இந்நூல் வைணவ பக்தர்களைக் கூறினும் சமய பேதத் தன்மையற்றது. இந்நூலின் முதற்பாடல் பொதுக் கடவுள் வாழ்த்து என்றே குறிக்கப்படுகின்றது. இச் சான்றோர்கள் சாதி, மொழி, இனம் முதலிய குறுகிய வட்டங்களைக் கடந்து வாழ்ந்தவர்கள்.

இந்நூலாசிரியர் இந்நூலன்றி இரத்தினாசலக் கடவுள் யமக அந்தாதி, மருதாசல யமக அந்தாதி, சந்தப்பதிகம், அவிநாசிப் பிரபந்தங்கள் முதலியன செய்துள்ளார். இவற்றுள் சில இன்னும் அச்சில் வரவில்லை.

## புலவர் குழந்தை

வால்மீகியின் இராமாயணம் தமிழில் பல்வேறு முறைகளில் செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட இராமகாதையின் எதிர் நூலாக இராவண காவியம் செய்தவர் புலவர் குழந்தையவர்கள். இவர் கோவை மாவட்டம் ஓலவலசு என்னும் ஊரில் 01.07.1906 ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தம் பெற்றோர்கள் முத்துசாமிக்கவுண்டரும் சின்னம்மையாரும் ஆவர். தமது 10ஆம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்த இவர் 1934இல் சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு முடியப் பவானி அரசினர் உயர் நிலைப்பள்ளியில் 29 ஆண்டுகள்

தமிழாசிரியராகப் பணி புரிந்தார். ஓய்வுக்குப் பின்னரும் அங்கேயே வாழ்ந்து வந்தார்.

1925 ஆம் ஆண்டு பெரியாரின் தன்மான இயக்கத்தில் சேர்ந்து பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தவராக ஆனார். இவரைக் ''கருப்புச்சட்டைக்காரர்'' என்றே அனைவரும் அழைத்தனர். இவர் பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணா, புரட்சிக்கவி பாரதிதாசன் ஆகியவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். .1938, 1948 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கு கொண்டார். 1946 முதல் 1950 வரை 'வேளாளன்' என்ற திங்கள் இதழை நடத்தி அதில் விதவை மணம், சீர்திருத்தமணம், கலப்புமணம், பெண்ணுரிமை ஆகியனவற்றை ஆதரித்து எழுதினார். இவர் கொள்கைப் பிடிப்புடையவராதலின் தம் மக்களுக்குச் சமத்துவம், சமரசம் என்று பெயரிட்டழைத்தார்.

பெரியாரின் கோட்பாடுகள் மீது இவருக்கிருந்த பிடிப்பு இவரை 'இராவணகாவியம்' பாட வைத்தது. இதன் சிறப்புப் பாயிரத்தைப் பாரதிதாசன் பாடியுள்ளார். ஆராய்ச்சி முன்னுரையை அண்ணா அவர்களும், ஆராய்ச்சி அணிந்துரையைக் கலைஞர் கருணாநிதி யவர்களும் எழுதியுள்ளனர். 1946இல் ஈரோடு வேலா பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. ஆனால் இந்நூல் 02.06.1948இல் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டது. இருப்பினும் 17.05.1971இல் அத்தடை நீக்கப்பட்டது.

இராவணகாவியம் ஐந்து காண்டங்களை உடையது. தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரிகாண்டம், போர்க்காண்டம் என்பன அவை. 57 படலங்களையும், 3100 விருத்தப்பாக்களையும் கொண்டது இந்நூல். மற்ற இராமகாதைகளில் இராமபிரான் உயர்வாகவும், தெய்வமாகவும் போற்றப்பட இந்த இராவணகாவியத்தில் இராவணன் சிறந்தவனாகவும், சான்றோனாகவும் உயர்த்தப்படுகின்றான். இருப்பினும் கதை முடிவு இராவணன் உயிர் துறப்பதிலேயே முடிகின்றது.

இராமாவதாரச் சிறப்பையும் பெருமையையும் மக்கள் பல நூற்றாண்டுகளாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர். ஆனால்

திராவிட இன உணர்ச்சி மற்றும் ஆரியப் பகை காரணமாக இராமனைப் பழித்து எழுதப்பட்ட இக்காவியத்தின் கதைப் பொருள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாமலேயே போய்விட்டது. இருப்பினும் இந்நூலின் கவியழகு அனைவரையும் ஈர்க்கும் ஆற்றலுடையதாக உள்ளது.

புதிய துறைகளில் தமிழ் வளர வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர் புலவர் குழந்தையவர்கள். காவியத் தொடக்கத்தைத் தமிழ் வாழ்த்தாகப் பாடியுள்ளார் இவர். பாரதி போல்

*''அற்றையநூல் களைப்போற்ற லோடமையாது*
*அந்நூல்கள் அமைவோடு ஆய்ந்து*
*கற்றவையின் கருத்துணர்வோடு ஐந்திணையின்*
*இயற்கையொடு கலந்து நல்லோர்*
*இற்றைய நாட் கேற்றபடி இலக்கியமும்*
*இலக்கணமும் இசையும் கூத்தும்*
*பொற்றகைய பலப்பலவாம் புதுநூல்கள்*
*செய்துமொழி போற்றல் வேண்டும்''*[18]

என்றும் ஆசைப்படுகிறார்.

புலவர் குழந்தை இக்காவியம் போகச் செய்யுள் நூல்கள் ஆறும்,[19] உரைநடை நூல்கள் பதினாறும் செய்துள்ளார். மேலும் உரையாசிரியராகவும் விளங்கியுள்ளார். இவரது சில சிறந்த நூல்கள் (ஆடிவேட்டை, நல்லதம்பிச் சர்க்கரை தாலாட்டு, திராவிட மகா காவியம்) இன்னும் அச்சில் வரவில்லை.

## அ. கிருஷ்ணசாமி நாயுடு

இவ்வறிஞர் கோயமுத்தூர்ப் பூளைமேட்டில் இருந்து ஆசிரியப் பணியும், தமிழ்ப்பணியும் செய்தவர். பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்கற்ற இவர் ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆகிய மொழிகளிலும் வல்லவர். சிறந்த கவிஞரும், சொற்பொழிவாளரும், ஆய்வாளருமாய்ப் பெயர் பெற்ற இவர் திருவள்ளுவர் காவியம் பாடிய பெருமைக்குரியவர்.

*''அன்பார் அனுப்பபட்டி, அ.கிருஷ்ணசாமிநாயுடு*
*இன்பார் பலகலைதேர் எண்வடுகன் – நண்பாரும்*

*பண்பூற வள்ளுவர் காவியம் பாடினான்*
*எண்பூளை மேட்டில் இருந்து"*[20]

என்ற பாடல் இதனைத் தெரிவிக்கும்.

திருவள்ளுவர் காவியம் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டது. சேர நாட்டு வள்ளுவ நாட்டில் பிறந்த குறளாசான் குமரி முதல் இமயம் ஈறாகப் பல இடங்களுக்கும் சென்று நன்னெறி புகட்டியதோடு ரோம் நகரம் சென்று அறங்கூறி வள்ளுவர் நெறி நிறுவித் தாயகம் மீள்வது ஈறாக அவரது வாழ்வைக் கற்பித்துக் கூறுவது இந்நூல்.

கங்கைக்குப் பொன்னி என்று பெயர் சூட்டியது, காசியில் ஆரியரிடை இருந்த சாதி வேறுபாடுகளையும், ஆ வேள்விகளையும் ஒழித்து அடயோகிகளைக்கண்டு சமுதாயத் தொண்டு செய்ய வற்புறுத்தியது, இயற்கைத் துறவறம் பேணச் சொல்வது, ரோம் நகரில் மூடநம்பிக்கைகளை நீக்கியது, கிறித்தவர்கள் புலால் உண்ணக்கூடாது என்பதை ஏசுவைக் கொண்டே சொல்லச் சொன்னது, தாயகத்தில் குடியாட்சி மற்றும் பொதுப்பண்ணைகளை உருவாக்கச் சொல்வது, பொருள்களைப் பொதுவுடமையாக்குதல் ஆகியனவெல்லாம் வள்ளுவர் செயல்களாக இக்காவியம் கூறுகிறது.

ஆன்ற சமத்துவம், ஆர் சகோதரத்துவம், ஏன்ற சுதந்திரம் என்ற இம்மூன்றை வலியுறுத்திப் பூவுலகில் பொதுவுடைமை வாழ்வால் தேவுலக வாழ்வை அமைக்கக் கூறல் இந்த நூலின் நோக்கமாகும்.

இக்காவியக்காரர் சமுதாய உணர்ச்சி நிரம்பியவர். அனைத்து வளர்ச்சிகளுக்கும் தடை மக்கட்பெருக்கமே எனத் தெளிந்து

*"நூற்றாண்டின் பின்னொரு நூறுக்கு நூறாகக்*
*கூறாண்ட மக்கள் குவிந்திடுவர் தூறாண்ட*
*காடுமலை யன்றிக் கடைநில மாக்கிடனும்*
*ஊடுணவு போதாது உயிர்க்கு"*[21]

என எச்சரிக்கிறார். ஆனால் அதே வேளையில் மக்கட் பெருக்கத்தைத் தடுக்கச் செயற்கை முறைகளை விரும்பாது மன அடக்கமே வழி எனக் கூறுகிறார். பெண்ணுக்கு 20 வயதையும்,

ஆணுக்கு 25 வயதையும் திருமண வயதாகக் கூறும் இவர் குழந்தைப் பேற்றுக்கிடையில் ஆறு ஆண்டுகள் இடைவெளி இருக்க வலியுறுத்துகிறார். மேலும் பிறக்கும் குழந்தையும் காந்திபோல் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

வெண்பா யாப்பில் ஆன இக்காப்பியத்தில் குறள் கருத்துக்கள் நிரம்பி வழிகின்றன. கல்விக் காண்டம், யாத்திரைக் காண்டம், முப்பால் காண்டம், உரிமைக்காண்டம், அமைதிக்காண்டம் என ஐந்து காண்டங்களையும், 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும் கொண்டது இக்காவியம். இதன் முதல் பதிப்பு 1958 இல் வெளி வந்தது.

மேற்குறித்த இக்காப்பியங்கள் போகக் கச்சியப்பரின் பேரூர்ப் புராணமும், சைவ எல்லப்ப நாவலரின் தீர்த்தகிரிப்புராணமும் கொங்கு நாட்டுப் பெருநூல்களே.

தமிழகக் காப்பியப் புலவர்கள் வரிசையில் கொங்கு நாட்டுக் காப்பியப் புலவர்கள் நூல் புனைவதில் புதுமையும், புரட்சியும் செய்துள்ளதை மேலே குறிப்பிட்ட காப்பியங்கள் வழி அறியமுடிகிறது.

## சான்றாதாரங்கள்


1. புலவர் குழந்தை, கொங்குநாடு
2. புலவர் இரா.இளங்குமரன், கொங்கு நாட்டுப் புலவர்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1979.
3. மீனாட்சிசுந்தரம்பிள்ளை த.ச.பேரூர்புராணம். முகவுரை திருவாடுதுறை ஆதீனம் - திருவாடுதுறை : 1967:ப: 7.
4. புறத்திரட்டு:776.
5. காவியகாலம்: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை : ப: 171.
6. தொல்காப்பியம்: புறத்திணையியல்: 17 உரை.
7. தொல்காப்பியம்: பொருளியல்: 485 உரை.
8. மு.கு.நூல். உரை.
9. காவியகாலம்: ப: 171.
10. புறத்திரட்டு: 1405.
11. கார்மேகக் கவிஞர்: கொங்குமண்டல சதகங்கள்: (பதி) தமிழ்க் கல்லூரி பேரூர்: 1986 பாடல்:99.

12. அடியார்க்கு நல்லார்: சிலம்பு உரை.
13. சமணத்தமிழ் இலக்கிய வரலாறு: கலைக்கதிர் கோவை: ப:95.
14. 14(அ), ஏட்டுச்சுவடியில் மட்டும் உள்ள நூல்கள்.
15. தக்கை இராமாயணம்: கைக்கிளைப் படலம்.
16. மு.கு.நூல். 4.
17. மு.கு.நூல். ஆய்வுரை: ப:49.
18. இராவணகாவியம்: அரசியற்படலம்: 41, வேலா பதிப்பகம்: ஈரோடு 1948.
19. கன்னியம்மன் சிந்து, அரசியலரங்கம்,காமஞ்சரி, புலவர் குழந்தை பாடல்கள், நெருஞ்சிப்பழம், திருநணாச் சிலேடை வெண்பா.
20. திருவள்ளுவர் காவியம் - பாயிரம்.
21. மு.கு.நூல். மகவு குறைப்புப் படலம் 69.

* * *

# 3. கொங்குச் சிவத்தலங்கள்

தமிழ்மொழியும் பல்வேறு சமயங்களும் இரண்டறக் கலந்து ஒன்றை ஒன்று வளர்த்துள்ள தன்மை மொழி வரலாற்றில் ஒரு தனித்துவமான கூறாகும். கி.பி.முதல் நூற்றாண்டிற்கு முன்னரே வடநாட்டுச் சமணம், பௌத்தம், வைதீகம் ஆகிய மதங்கள் தமிழகத்துள் வந்தன. கி.பி.3 ஆம் நூற்றாண்டு தொடங்கிக் கி.பி.6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தமிழ் இனம் சாராத களப்பிரர்கள், பல்லவர்கள், நாட்டை ஆண்டதோடு முறையே பௌத்த, சமண மதங்களுக்கு ஆதரவு நல்கினர்.

தமிழ்மொழிப் புறக்கணிப்பு, தமிழ்க்கோவில்கள் ஒதுக்கப்படல், இசை, நாடகம் முதலிய கலைகள் வெறுக்கப்படல், பெண்மை தாழ்த்தப்படல், கடுந்துறவு வற்புறுத்தப்படல் போன்ற கோட்பாடுகள் இவர்களால் மக்கள் மனதில் பதியவைக்கப்பட்டன. களப்பிரர் காலத்தில் பௌத்தமும், பல்லவர் காலத்தில் சமணமும் மன்னர்களின் மதமாக இருந்ததால் மக்களின் மதமாகவும் திணிக்கப்பட்டன.

இந்த இன, மொழி, பண்பாட்டு நலிவை - நசிவை மீண்டும் உயிர்ப்பித்துக் கொண்டு வர எண்ணியதன் விளைவு பக்தி இயக்கமாக உருவாயிற்று. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் இந்த

இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கிச் சைவம், வைணவம் என்ற இரண்டையும் காத்ததோடு தமிழ், இசை, கலைகள் இவற்றையும் காத்தனர்.

பக்தி இயக்க முன்னோடிகளான இவர்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து 9 ஆம் நூற்றாண்டு இறுதிவரை வாழ்ந்தவர்கள். ஒவ்வோர் ஊராக இவர்கள் த்த்தமக்கு ஏற்றவாறு சென்று சைவ, வைணவப் பெருமை பேசி மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தினர்.

இந்த முறையில் சைவர்களுள் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் சிவபெருமான் உறையும் தலங்க்ளுக்கு நேரில் சென்று அவ்வூர்ச் சிறப்பு, அந்த இறைவனின் பெருமை ஆகியவற்றைச் சிறப்பித்து இசைத் தமிழ்ப் பனுவல்கள் பலவற்றை யாத்துள்ளனர். அங்ஙனம் அவர்களால் பாடப்பெற்ற சைவத் திருத்தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் என்ற பெருமைக்குரியனவாகச் சைவ மரபில் போற்றப்படுகின்றன. அங்ஙனம் நேரில் சென்று பாடாது அவர்தம் பாடல்களில் வைத்துப் புகழப்பட்ட தலங்கள் வைப்புத்தலங்கள் என்ற பெயரால் சுட்டப்படுகின்றன.

இங்ஙனமாகப் பாடல் பெற்ற கோயில்கள் தமிழகப் பகுதியில் இருநூற்று எழுபத்தைந்து என்ற எண்ணிக்கையில் உள்ளன. இவை அனைத்தும் மூவர் முதலிகள் மூவரும், மாணிக்கவாசகரும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய பாவலர்களும் போற்றித் துதித்தவை ஆகும்.

இத்தலங்களை நாடுகளின் அடிப்படையில் பின்வருமாறு காணலாம். தொண்டை நாட்டுத் தலங்கள் 32; சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ளவை 63; தென்கரையில் உள்ளவை 128; பாண்டி நாட்டுக்குரியவை 14; கொங்கு நாட்டில் 7 தலங்கள்; வடநாட்டுத்தலங்கள் 5; துளுநாட்டுத்தலம் 1; மலைநாட்டுத்தலம் 1 ; இலங்கைத் தலம் 2; மணிவாசகர் பாடிய தலங்கள் 7; திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியவர்கள் போற்றிய கோயில்கள் 14; புதிய தலம் 1.[1]

இந்த எண்ணிக்கை வெறும் எண்கள் மட்டுமன்று ; தமிழக வரலாற்றின் ஒரு பகுதியைக் காட்டும் மூலங்களாகவும் உள்ளன. இது குறித்துப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் சுட்டும் கருத்து நினைக்கத்தக்கது.

''திருஞானசம்பந்தர் தோன்றிய காலத்தில் சோழ நாட்டில் மட்டும் சிறப்புமிக்க கோயில்கள் 190க்குக் குறையாமலும் தொண்டை நாட்டில் 32ம், நடுநாட்டில் 22ம், பாண்டிநாட்டில் 14ம், கொங்கு நாட்டில் 7ம், மலைநாட்டில் ஒன்றும் இருந்தன என்று தெரிகிறது. பாடல்பெற்ற கோயில்கள் இவை என்றால் திருமுறைகளில் வைப்புத்தலங்கள் என 250 இடம் பெற்றுள்ளன. இக்கோயில் கணக்கே ஒரு சில உண்மைகளை அறிவிக்கக் கூடியனவாக உள்ளன. சோழநாட்டில் 190 கோயில்கள் உள்ளன. இறைவனே 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளின' ஊர் மதுரையாகும். அந்த மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிநாட்டில் ஏன் 14 கோயில்கள்? தொண்டை நாட்டில் ஏன் 32 மட்டும்? பாண்டி நாடு, தொண்டைநாடு என்ற இரண்டும் களப்பிரர் நேரடித் தாக்குதலுக்கு இலக்கானவை. ஆனைமாமலை முதலிய இடங்களில் ஆயிரக்கணக்கான சமணர்கள் தங்கி வாழ்ந்ததாலும் நெடுமாறன் போன்ற பேரரசர்கள் இவர்கள் (சமணர்கள்) பக்கம் இருந்ததாலும் சிவன் கோயில்கள் அருகிவிட்டன.''[2]

தொண்டை நாட்டிலும் சமணச் செல்வாக்கால் சிவன் கோயில்கள் அருகிவிட்டன.

இதே கருத்தைக் கொங்கு நாட்டிற்கும் ஓரளவு பொருத்திக் காட்ட முடியும். சந்திரகுப்த மௌரியன் காலத்தில் அவனது குரு பத்திரபாகு மகத நாட்டில் பஞ்சம் வரப்போவதையறிந்து பல ஆயிரம் சமணர்களோடு தென்னாடு புறப்பட்டார். அங்ஙனம் வந்த அவர் எருமை நாட்டு (மைசூர்) வெள்ளைக் குளத்தில் (சரவணபெலகொளா) தங்கினார். அவரது கூட்டம் கொங்கு நாடு வழியாகத் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பரவியது. இது வரலாற்றுச் செய்தியாகும்.

கொங்கு நாட்டில் ஏழாம் நூற்றாண்டளவில் சமணர்கள் பெரும் செல்வாக்கோடு இருந்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில்தான்

பெருங்கதை எழுதப்படுகிறது. மேலும் விஜயமங்கலம், சீனாபுரம், திங்களூர், அரச்சலூர், ஆறு நாட்டார் மலை எனப்பல இடங்களிலும் சமணர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். இதனால் கொங்குப் பகுதி இந்த இடைக்காலத்தில் சமணச் செல்வாக்கில் இருந்தது என்பது ஒரு தலை.

இன்னொன்று கொங்கில் மிகப்பெரும் கோயில்கள் இல்லை. காரணம் வானம் பார்த்த பூமியான இந்த மண்ணில் சிறு சிறு குழுக்களாக வாழ்ந்த மக்கள் கூட்டம் தத்தம் குல தெய்வங்களாகிய பெண் தெய்வங்களைக் கிராம அளவில் தத்தமக்குரிய சடங்கு, பூசை முதலிய மரபுகளோடு வழிபட்டு வந்தமையாகும். ஆகம நெறிக்கு இங்குச் சற்றும் இடம் இல்லை. எனவே பெண் தெய்வக்கோயில்கள் - அம்மன் கோயில்கள் - குறிப்பாக மாரியம்மன் கோயில்கள் கொங்கு நாட்டு ஒவ்வோர் ஊரிலும் சிறப்பாக வழிபடப்படுவதைக் காண முடிகிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிப் பத்தினிக்குக் கோட்டம் அமைத்துக் கொண்டாடிய விழாவில் கொங்கிளங்கோசர் கலந்து தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழாவோடு சாந்தி செய்த சிலம்புச் செய்தியையும் இங்கு இணைத்துக் காணின் புதிய செய்திகள் கிடைக்கும்.

மேலும் கொங்குச் சீமையில் சிவத்தலங்கள் குறைவாக இருப்பதற்குப் பேராசிரியர் மே.அ.பாலமுருகன் சுட்டும் கருத்தும் இங்கு எண்ணத்தக்கது.

> ''*பிற்காலச் சோழர்களின் காலத்தில் தமிழகத்தின் பிற பகுதிகளில் சமணர்களின் செல்வாக்குக் குறைந்து சைவர்களின் எழுச்சி ஏற்பட்டபோது கொங்கு நாட்டிலும் இம்மாற்றம் நிகழ்ந்தது. கொங்கு நாட்டில் பிற்காலச் சோழர் காலத்தில் ஆற்றங்கரைப் பகுதிகளில் சைவக் கோயில்கள் எழுந்தன. உழைப்பு மிகுந்து ஓய்வு குறைந்த கொங்கு நாட்டில் தமிழ்நாட்டின் பிற பகுதிகளோடு ஒப்பிடும் பொழுது பெருங்கோயில்களின் எண்ணிக்கை குறைவுதான். நாட்டுப்புறக் கலைகளும், நாட்டுப்புறச்*

*சிறுதெய்வங்களும் இங்குச் செல்வாக்குப் பெற்றது போல் நுண்கலைகளும் பெருந்தெய்வ வழிபாடும் சிறக்கவில்லை.*"[3]

கொங்குச் சூழ்நிலை இவ்வாறாயினும் இங்கும் மூவர் முதலிகள் பாடிய தலங்கள் ஏழு உள்ளன. அவை கொங்கேழ் தலங்கள் எனப்படுகின்றன. இவை ஏழுபோக் வைப்புத்தலங்களான பேரூர், மன்னியூர், குரக்குத்தளி, சேவூர் என்பனவும் கொங்குச் சிவத்தலங்கள் வரிசையில் சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாக உள்ளன.

## திருவெஞ்சமாக் கூடல்

இத்தலம் கருருக்குத் தெற்கில் குடகனாற்றின் கரையில் அமைந்துள்ளது. அமராவதியாற்றின் கிளையான ஒரு சிற்றாறு குடகனாற்றோடு சேருமிடத்தில் அமைந்துள்ளதாலும் வெஞ்சமன் என்ற வேடுவ மன்னன் வழிபட்டதாலும் இது வெஞ்சமாக் கூடல் என்ற காரணப் பெயரைப் பெற்றது. ஆனால் பேச்சுவழக்கில் இவ்வூர் வெஞ்சமாங்கூடல், வெஞ்சமாங் கூடலூர் என்று வழங்கப்படுகிறது. கொங்குநாட்டு 24 உட்பிரிவுகளுள் இது வெங்கால நாட்டைச் சார்ந்தது.

குடகனாற்றின் கிழக்குக் கரையில் உள்ள இத்திருத்தலம் ஏறத்தாழ 1200 ஆண்டுக்காலப் பழமைகொண்டது. ஆனால் ஒரு சூழலில் குடகனாற்று வெள்ளம் இக்கோயிலின் கற்களை வெகுதொலைவு அடித்துச் செல்லக் கோயில் பாழ்பட்டுப் போனது. இந்த ஊரும் அழிந்துவிட்டது. ஆனால் சிவஅன்பர்கள் 05.05.1982இல் திருப்பணி தொடங்கி 26.02.1986 அன்று குடமுழுக்குச் செய்து புதுக்கோயிலை ஆக்கியுள்ளனர்.

சுந்தரரின் தேவாரம் இத்தலத்திற்கு உண்டு. அருணகிரிநாதரின் திருப்புகழும், வள்ளலாரின் திருவருட்பாவும் இத்தலத்தின் சிறப்பைக் காட்டுவன.

சுந்தரரின் பாட்டைக் கேட்க வேண்டும் என்ற பெருவிருப்பால் சிவபெருமான் தன் இரு குழந்தைகளையும் ஒரு கிழவியிடம் ஈடுகட்டிப் பொன்பெற்றார் என்பது கொங்கு மண்டல சதகச் செய்தி.

அங்ஙனம் கிழவியாக இருந்து பொன் கொடுத்தவள் உமாதேவியார் ஆவார்.

*"கிழவேதி வடிவாகி விருத்தையைக் கிட்டி என்றன்*
*அழகாகும் மக்கள் அடகுகொண்டு அம் பொன் அருள்தி என்று ஏற்று*
*எழுகாதலால் தமிழ் பாடிய சுந்தரர்க்கு ஈந்த ஒரு*
*ம்முழுவேந்திய விகிர்தே சுரன் வாழ் கொங்கு மண்டலமே"*[4]

என்பது கார்மேகக்கவிஞர் பாடல். இதே செய்தியைத் திருவெஞ்சமாக் கூடல் புராணமும் பேசுகிறது.

இந்திரன் தனது சாபம் நீங்கப் பூசித்தது இத்திருக்கோயில் என்ற கருத்தும் உண்டு. இத்தல இறைவன் விகிர்தேசுவரர், கல்யாண விகிர்தேசுவரர், விகிந்த நாகேஸ்வரர், விகிந்தர் என்ற பெயர்களாலும் இறைவி விகித்தவல்லி, பனிமொழியார் என்றும் அழைக்கப் படுகிறார்கள்.

## திருக்கருவூர்த் திருஆநிலை

ஆன்பொருநை எனப்படும் அமராவதிக் கரையில் அமைந்துள்ள இத்தலம் இன்று கரூர் என வழங்கப்படுகின்றது. வரலாற்றில் இவ்வூர் கி.மு. முதல் நூற்றாண்டிலேயே உரோமானியர்களோடு தொடர்பு கொண்டிருந்தது. இதற்கு இங்குக் கிடைக்கும் உரோமானியக் காசுகளே சான்று. மேலும் சோழர்களின் ஐந்து தலைநகரங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இங்கிருந்து ஆண்ட மன்னன் புகழ்ச்சோழன் என்பவர். சிவகாமி ஆண்டார் என்ற சிவனடியார் இறைவன் வழிபாட்டுக்குப் பூக்குடலை ஏந்திவரப் புகழ்ச்சோழன் பட்டத்து யானை அதைப் பிடுங்கிச் சிதைக்கிறது. இதைக்கண்ட எறிபத்தர் என்ற நாயன்மார் அந்தப் பட்டத்து யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்துகிறார். செய்தி கேட்டுப் புகழ்ச்சோழன் சினந்து அவ்விடம் வருகின்றான். ஆனால் உண்மை தெரிந்து எறிபத்தரிடம் தன்னையும் கொல்லுமாறு வேண்டுகிறான். இது பெரியபுராணச் செய்தி. இத்தலத்தில் வழிபட்டு முக்தி பெற்றவர்கள் எறிபத்தரும், புகழ்ச்சோழரும் ஆவர்.

திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவா இந்தத் தலத்திற் குரியவர். இந்தச் சைவ அடியார்க்காக இறைவன் சற்றுச் சாய்ந்து காட்சி தந்தார். எனவே இங்குள்ள லிங்கம் சற்றுச் சாய்ந்த நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்குள்ள ஆவுடையார் சதுரமானதாக உள்ளதும் குறிப்பிடத்தக்க ஒன்றே. இக்கருவூர்த்தேவரின் சமாதி கோயிலுள் உள்ளது.

இக்கோயிலின் இன்னொரு சிறப்பு இரண்டு அம்மன் சந்நிதிகள் இருப்பதாகும். இது பற்றிய கருத்துரைகளும் உள்ளன. இதில் ஒன்று அனைத்துக் கோயில்களிலும் இயல்பாக அமைக்கப்படும் இறைவியின் திருக்கோயில் போன்று அமைக்கப்பட்டதாகும். இன்னொன்று, ஆண்டவர் கோயிலூர் என்ற ஊரில் வாழ்ந்த பெண்ணொருத்தி இந்த இறைவனைக் கணவனாக வரித்து (ஆண்டாள், மீரா போன்று)மணந்து கொண்டதால் அப்பெண்ணுக்கு அமைக்கப்பட்டது என்பதாகும்.

ஆனால் பின்வரும் கருத்து ஏற்புடைய ஒன்றாக இருக்கிறது. மாலிக்கபூர் படையெடுப்பின்போது அம்பாள் திருமேனி எடுத்து ஒளித்து வைக்கப்பட்டதாகவும், பின்னர் அது கிடைக்காமல் போகப் புதியது நிலை நிறுத்தப்பட்டது எனவும், ஆனால் இதன் பின்னர் பழைய திருவுருவும் கிடைக்க அதனையும் நிலைநிறுத்தினர் எனவும் கூறப்படும் செய்தியை ஒதுக்க இயலாது எனலாம்.

இத்தலமும் வெங்கால நாட்டகத்து உள்ளது.

திருஞான சம்பந்தர் தேவாரமும் அருணகிரி பாடிய ஏழு திருப்புகழும் வள்ளலாரின் அருட்பாவும் இத்தலத்தின் சிறப்புக்குக் கட்டியம் கூறுகின்றன. மேலும் இத்தலம் பற்றி 21 சருக்கமும் 1129 பாடல்களும் கொண்ட தலபுராணம் உள்ளது. ஆனால் அதை எழுதியவர் பெயர் தெரியவில்லை. படைப்புக் கடவுள் பிரம்மன் நித்திரை செய்து கொண்டிருந்தபோது காமதேனுவைப் படைக்க வரம் பெற்ற தலம் என்று இதற்குப் புராணக் கருத்து ஏற்றப்படுவது உண்டு. இத்தல இறைவன் பசுபதி, பசுபதிநாதர், பசுபதீஸ்வரர் என்ற பெயர்களாலும் அம்பிகை சௌந்தர்ய நாயகி, கிருபா நாயகி என்ற திருப்பெயர்களாலும் வழிபடப்படுகிறார்கள்.

## திருப்பாண்டிக் கொடுமுடி

மேல்கரை அரைய நாட்டைச் சேர்ந்த இவ்வூர் காவிரியாற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. மலயத்துவச பாண்டிய மன்னன் கையானது உறுப்புக் குறைபாடுடையதாக இருக்க அந்தக் குறையை இத்தலத்தில் வழிபட்டுப் போக்கிக் கொண்டான். எனவே கொடுமுடியோடு பாண்டிப் பெயரும் சேர்ந்து திருப்பாண்டிக் கொடுமுடி என்றாயிற்று. இந்தப் பாண்டியன் இக்கோவிலில் திருப்பணிகள் பல செய்துள்ளான். இன்னும் நரசிம்ம பல்லவன், தேர்மாறன், நரசிங்க முனையரையர் ஆகியோரும் இங்குத் திருப்பணிகள் செய்துள்ளனர். சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டும் இங்கு உள்ளது.

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நடந்த வலிமைப் போட்டியில் ஆதிசேடன் மேருவின் ஆயிரம் சிகரங்களை எடுத்துச் சுற்றினான். அப்போது ஒரு சிகரம் ஐந்து மணிகளாக உடைபட்டுச் சிதறி வீழ்ந்தது. அப்படி வீழ்ந்ததில் வைரமணி கொடுமுடியாக உருப்பெற்றுள்ளது. பிறவற்றுள் சிவப்பு திருவண்ணாமலையாகவும், மரகதமணி ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட் போக்கியாகவும், நீலமணி பொதிகையாகவும் ஆனதாகப் புராணம் கூறுகிறது. எனவே கொடுமுடி என்பது காரணப் பெயராக அமைகிறது. இங்கு மலை - மலைச் சிகரமே இறைவன் வடிவாகக் காட்சி தருகிறது.

அகத்தியர் காவிரியாற்றைத் தனது கமண்டலத்தில் அடைத்து வர அதைக் காகம் இந்த இடத்தில்தான் கவிழ்த்தது எனக் கூறும் புராணக் கருத்தும் இந்த ஊருக்கு உண்டு.

மும்மூர்த்திகளுக்கும் இங்குத் திருக்கோயில் இருப்பதும் தேவாரம் பாடிய மூவர் பாடல்களை இத்தலம் பெற்றிருப்பதும் இச்சிவாலயத்தின் தனிச் சிறப்புக்களாகும்.

இத்தல இறைவன் கொடுமுடி நாதர் என்ற தமிழ்ப்பெயராலும் மகுடேஸ்வரர் என்ற வடமொழிப் பெயராலும் வழங்கப்படுகிறார். இறைவி பண்மொழியம்மை, பண்மொழி நாயகி என்ற தமிழ்ப் பெயர்களாலும் திரிபுர சுந்தரி, மதுர பாஷிணி என்ற வடமொழிப் பெயர்களாலும் வழங்கப்படுகிறார். கல்வெட்டில் இறைவன் 'மலைக்கொழுந்தீசர்' எனப் போற்றப்படுகிறார்.

அருணகிரியின் திருப்புகழும் வள்ளலாரின் அருட்பாவும் போகத் தலபுராணமும் இதற்கு உண்டு.

## திருக்கொடி மாடச் செங்குன்றூர்

கொங்கு நாட்டின் ஒரு நாடாகிய கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் ஊர் இதுவாகும். இவ்வூர் மலை சிவந்த நிறம் கொண்டதால் செங்கோடு எனப்பட்டது. எனவே காரணப் பெயர். இளங்கோவடிகள், 'சீர்கெழு செந்திலும் செங்கோடும்' என்ற தொடரில் இதனைச் செங்கோடு என்கிறார். இன்று இத்தலம் திருச்செங்கோடு என வழங்கப்படுகிறது.

உயரமான இடத்திலிருந்து பார்க்க இம்மலை நாகம் போன்று காட்சி தருவதால் இதற்கு நாகமலை, நாகாசலம், நாககிரி என்பனவும் பெயர்களாக உள்ளன. இம்மலையில் உள்ள முருகனை 'நாகாசல வேலவா' என்று திருப்புகழ் பாடுகிறது. மேலும் உரசகிரி என்ற பெயரும் உண்டு. இக்கோயிலுக்குச் செல்ல 1200 படிக்கட்டுக்கள் உள்ளன. இந்தப்படிக் கட்டுக்களில் பாம்பு உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக ஓரிடத்தில் 20 அடி நீளமுள்ள பாம்பு வடிவமான வழி ஒன்று உள்ளது. இங்குள்ள 60 ஆம் படி மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது. இந்தப்படியில் செய்யப்படும் சத்திய மானது நீதிமன்றத்திலும் செல்லுபடியாகும் தகுதியுடையது என்ற நம்பிக்கை பொதுமக்களிடையே உள்ளது. பாம்புக்கும் இந்த ஊருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு ஆய்வுக்குரிய ஒரு செய்தியாகும்.

திருஞானசம்பந்தரின் தல யாத்திரையில் கொங்கு நாட்டில் முதன்முதலாகப் பாடப்பட்ட பெருமை இத்தலத்திற்குண்டு. அவர் தமது யாத்திரை முடித்து மீண்டு வருகையில் இந்தப் பகுதி மக்கள் நளிர் சுரத்தால் பீடிக்கப்பட்டுத் துயரப்பட அவர்கள் துயர் போக்க 'அவ்வினைக்கு இவ்வினை' என்ற பதிகம் பாடி நோய் நீக்கினார் என்பது வரலாறு.

கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரத்தில் இத்தல முருகன் போற்றப்படுகின்றார். இவ்வூர்த்தல புராணத்தை வீரகவிராஜ பண்டிதர் என்பவர் பாடியுள்ளார்.

முதலாம் இராஜராஜன், சுந்தரபாண்டியத்தேவர், மைசூர் கிருஷ்ணராஜ உடையார் ஆகியோர் காலக் கல்வெட்டுக்கள் இத்தலத்தில் உள்ளன.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் அர்த்தநாரீஸ்வரர் என்ற பெயர் கொண்டவர். இறைவி பெயர் பாகம் பிரியாளம்மை என்பதாம். இப்பெயர்களால் உமையம்மை தவமிருந்து இறைவனின் இடப்பாகம் பெற்றார் என்ற புராணச் செய்தி இத்தலத்திற்கு உருவாயிற்று.

இறைவடிவம் பாதி ஆண், பாதி பெண் வடிவத்தில் - அதாவது ஒரு புறம் மார்பகமும் ஒரு புறத்தில் மார்பகம் இல்லாமலும் இருப்பதால் இதனைக் கண்ணகி வடிவம் எனக் கூறும் கருத்தும் உண்டு. மதுரையைத் தன் கொங்கைத் தீயால் எரித்த அப்பத்தினி தன்னந் தனியளாய் மலை மீது ஏறிக் கோவலனுடன் சேர்ந்தாள் என்ற சிலம்புச் செய்தியை இந்த ஊருடன் இணைத்துக் காட்டுவர். இதனால் இக்கருத்து உருவாயிற்று. இதுவும் ஆய்வுக்குரியதே.

இந்த ஊரில் குணசீலர் என்ற புலவர் வாழ்ந்ததாகவும் அவருக்கு முருகன் மாடு மேய்க்கும் சிறுவனாக வந்து தன்னைக் குணசீலரின் கடை மாணாக்கன் எனக் கூறிக்கொண்டான் எனவும் கூறும் செவிவழிச் செய்தியும் இந்த ஊர்ச் சிறப்பு உரைக்கும்.

மேலும் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் இம்மலையில் உண்டு. எனவே வைணவ மதம் சார்ந்த பெருமைக்கும் இவ்வூர் சிறப்பு இடம் தருகிறது.

மலை உச்சியில் உள்ள 'மலடிகல்' என்பதைச் சுற்றிவரின் கருவாய்க்காத பெண்கள் தாய்மைப் பேறடைவர்' என்பது இங்குள்ள நம்பிக்கை. ஆனால் கையளவே அகலமுள்ள சிறு வழியில் அக்கல்லைச் சுற்றுவது பேராபத்தானது என்பதால் இப்போது அப்பழக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் சிங்கவன்மன் என்பானுக்கிருந்த புலியுருவம் நீக்கப்பட்ட தலம் இது என்பதும் ஒரு புராணச் செய்தியாகும்.

### திருநணா

வடகரை நாட்டைச் சேர்ந்த இவ்வூர் இன்று பவானி என்று

வழங்கப்படுகிறது. இதற்குப் பவானி முக்கூடல், பவானி கூடல் என்பன வேறு பெயர்கள். காரணம் இத்தலம் காவிரி, பவானி மற்றும் கண்ணுக்குப் புலனாகாத அமிர்த சரசு என்ற மூன்று நதிகளும் கூடுமிடத்தில் அமைந்துள்ளதாகும். வரதிகாசிரமம், தென்கயிலை, தட்சிணப்பிரயாகை என்ற பெயர்களும் இவ்வூருக்கு உண்டு. பராசரர் என்ற முனிவர் வழிபட்டதால் இதற்குப் பராசரசேத்திரம் என்ற பெயரும் உண்டு. மேலும் குபேரன், விசுவாமித்திரர் ஆகியோரும் இங்கு வழிபாடியற்றியவர்கள் என்பது புராணம்.

இத்தலத்தில் வந்து வழிபடுவோர்க்கு எந்தத் தீமையும் நண்ணாது என்பதால் இது திரு நண்ணாவூர் என்றும் திருநணா என்றும் பெயர் பெற்றது என்பர்.

இத்தலம் பற்றிச் செவிவழியாக வழங்கப்படும் வரலாற்றுச் செய்தி ஒன்று உண்டு. 19ஆம் நூற்றாண்டில் கோவை மாவட்ட ஆட்சியராக இருந்த திரு.காரோ(**W. Garo**) என்பவர் ஆட்சிப் பொறுப்பு நிமித்தம் பவானி வந்து ஆய்வாளர் மாளிகையில் தங்கியிருந்தார். அன்றிரவு இடி மின்னலுடன் கடுமழை பெய்து கொண்டிருந்தபோது ஒரு சிறு குழந்தை துரையை எழுப்பிக் கையைப் பிடித்து வெளியே கூட்டிப் போனது. மறுவிநாடி அக்கட்டடம் இடிந்து தரைமட்டம் ஆனது. அதிர்ச்சியடைந்த துரை தன்னை எழுப்பிய குழந்தையைக் கூப்பிட்டுக் கொண்டு பின் செல்ல அக்குழந்தை கோயிலுள் சென்று மறைந்து விட்டது.

தன்னைக் காத்தவள் அந்தப் பவானித்தாய் என உணர்ந்த துரை கோயிலுள் சென்று அம்மனை வழிபட விரும்பினார். ஆனால் பிறமதத்தவர் (கிறித்தவர்) உள் புகக் கோயில் மரபு இடம் கொடாமையின் அவர் அந்நெறியை மீற மனமின்றி வெளி மதிலில் துளையிட்டு அம்மனைத் தரிசித்து மகிழ்ந்தார். மேலும் அந்த அம்மனுக்குத் தந்தத்தாலான ஊஞ்சலையும் பரிசாக நல்கினார். இந்தச் செய்தியைச் சிவகளை. மு. சுப்பையா எழுதிய 'கொங்கு நாட்டுக் கோயில்கள்' என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

இக் கோயிலுள்ளேயே திருமால் ஆலயமும் உண்டு. சம்பந்தர் தேவாரமும் அருணகிரி திருப்புகழும் இந்தத் தலத்திற்குப் பெருமை

சேர்ப்பன,

*"... ... ... ... ... ... ... ... துஞ்சலெனும்*
*இன்னல் அகற்ற இலங்க பவானிக் கூடல்*
*என்னும் நணாவின் இடை இன்னிசையே."*

என்ற அருட்பா இத்தலத்தின் இரண்டு பெயர்களையும் குறிக்கிறது.

இத்தல இறைவன் சங்கமேஸ்வரர், சங்கமுக நாதேஸ்வரர் என்பது. இறைவி வேதநாயகி, வேதாம்பிகை எனப்படுகிறாள்.

இக்கோயிலின் திருப்பணிகளை ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் கூகலூர்க் காந்தி எனப்படும் அமரர் சுப்பண்ண கவுண்டர் செய்து முடித்தார். அருட்செல்வர் நா. மகாலிங்கம் இங்குப் பலவகையான திருப்பணிகளைச் செய்து வருகிறார்.

## திருமுருகன் பூண்டி

இது கொங்கு ஆறை நாட்டுத் தலமாகும். அவினாசிக்கு அருகில் உள்ள இத்தலத்திற்கு மாதவி வனம் என்பதும் ஒரு பெயர். அகத்தியர், மார்க்கண்டேயர், துர்வாசர் ஆகியோர் வழிபட்டதோடு சூரபன்மனைக் கொன்ற பாவம் நீங்க முருகப் பெருமானும் இத்தலத்து ஈசனை வழிபட்டுப் பாவம் போக்கிக் கொண்டார் என்பர்.

சேரநாட்டு திருவஞ்சைக் களத்தில் சேரமான் பெருமாள் நாயனாரைக் கண்டு பொருள் பெற்று வரும் சுந்தரரோடு விளையாடல் விரும்பிய ஈசன் கள்வர்களை அனுப்பிப் பொருளைப் பறித்துக் கொண்டார் என்பதும் மீண்டும் தந்தார் என்பதும் இத்தலத்தோடு சுந்தரரைத் தொடர்புபடுத்தும் நிகழ்ச்சிகளாகும். இதற்கு ஏற்றாற்போலப் பொருளைப் பறி கொடுத்து வாடிய முகத்துடன் உள்ள சுந்தரர் சிலையும் பொருளைப் பெற்றபோது மகிழ்ச்சியுடன் உள்ள சுந்தரர் சிலையும் கோயிலுள் உள்ளன.

இறைவன் முருகநாதர், இறைவி ஆலிங்கபூஷண ஸ்தனாம்பிகை, ஆவுடை நாயகி, மங்களாம்பிகை என்று திருநாமம் பெறுகிறாள்.

இத்தலத்திற்குச் செட்டிபாளையம் வாசுதேவ முதலியார் பாடிய தலபுராணம் மற்றும் அருணகிரியின் திருப்புகழ்ப்பாடல்கள் உண்டு.

குலோத்துங்க சோழன், வீரராசேந்திரத்தேவர், விக்கிரம சோழன், வீரநஞ்சராய உடையார் ஆகியோர் இக்கோயிலுக்கு நெல்லும், நிலமும் அளித்த செய்திகளை இங்குள்ள பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## திருப்புக்கொளியூர்

அவினாசி என்று வழங்கப்படும் புக்கொளியூர் கொங்கு நாட்டு ஆறை நாட்டைச் சார்ந்தது. பிராட்டியார், பிரமன் ஆகியோர் வழிபட்ட தலம் இது. தட்சிண காசி என்பது இதன் மறுபெயர். மேலும் ஒரு கற்பகாலத்தில் உலகம் அழியப் பிரம்மனும், விஷ்ணுவும் வந்து ஒடுங்கிய தலம் என்று இதன் பெருமை கூறுவர்.

ஆனால் இந்த ஊர் இன்று அழிந்து வெட்டவெளியாக உள்ளது. தற்போதுள்ள ஊர் புதிதாகத் தோன்றி வளர்ந்த ஒன்றாம்.

சுந்தரர் பாடிய தலம் என்பது மட்டுமன்று ; அவரால் முதலை உண்ட பாலனை வரவழைத்த அற்புதம் நடந்த தலம் என்ற பெருமையும் இதற்குண்டு. தற்போதுள்ள கோயிலுக்குப் பக்கத்தில் ஓர் ஏரி உள்ளது. அந்த ஏரிக்கரையில் சுந்தரரின் சிலை உள்ளது. இந்தச் சான்று மேற்சொன்ன வரலாற்றை உறுதி செய்வதாக உள்ளது.

இத்தல இறைவன் அவினாசியீச்சுரர், அவிநாசிலிங்கேஸ்வரர், அவினாசி ஈஸ்வரர், அவினாசி நாதர், பெருங்கேடிலியப்பர் என்ற பெயர்களால் போற்றப்படுகிறார். அம்மையின் திருநாமங்களாகப் பெருங்கருணையம்மை, பெருங்கருணை நாயகி, கருணாம்பிகை என்பன வழங்குகின்றன.

இளையான் கவிராயர் என்பவர் அவினாசித்தலபுராணம் பாடியுள்ளார். இத்தல இறைவி மீது பாடப்பட்ட சதகம், யமக அந்தாதி, பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களும் உள்ளன. மாணிக்கவாசகரும், திருநாவுக்கரசரும் தமது பாடல்களில் இந்த இறைவனைக் குறிப்பிட்டுப் போற்றுகின்றனர். அருணகிரிநாதரும் இத்தலம் பற்றித் திருப்புகழ் பாடியுள்ளார்.

வீரராசேந்திரன், குலோத்துங்க சோழன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், கோனேரின்மை கொண்டான் என்ற சோழ, பாண்டிய மன்னர்களும் நாயக்க மரபில் அச்சுததேவராயரும் செய்த திருப்பணிகள் கூறும் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

1695 இல் வாழ்ந்த சிக்கதேவராய உடையார் காலக் கல்வெட்டுக்கள் சுற்றுச் சுவர்களிலும் சந்நிதித் தூண்களிலும் உள்ளன.

இந்தக்கருத்துக்களை ஒட்டுமொத்தமாகக் காணின் இந்தத் தலங்களின் பொதுக்கூறு அவை பெரும்பாலும் ஆற்றங்கரைகளில் அமைந்துள்ளன என்பதாகும். இவை பற்றிப் புராணச் செய்திகள் பல்கியுள்ளன என்பது இத்தலங்களுக்குள்ள பொதுவான அம்சமாகும். இறைவன், இறைவி பற்றிய ஓரிரு தமிழ்ப் பெயர்கள் தவிரப் பெரும்பாலான பெயர்கள் வடமொழிப் பெயர்களாக ஆக்கப்பட்டுள்ளமை வேதநெறி இங்கு வலுவடைந்திருந்ததைக் காட்டுகிறது. அனைத்துத் தலங்களும் தலபுராணம் பெற்றுள்ளன. எனவே உண்மை வரலாற்றை அரிதிற் காண வேண்டியுள்ளது. கொங்கில் இவ்வேழும் 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை' என்றாற்போன்று எண்ணிக்கை குறைவானதால் தேவாரப் பாடல்கள், திருப்புகழ், திருவருட்பா என நிறையப்பாடல்களுக்கு உரிமையுடையனவாக ஆகிவிட்டன.

திருமால் கோயில்களும் சிவக்கோயில்களும் பேதமின்றிப் போற்றப்பட்டுள்ளன. கல்வெட்டுக்கள், திருப்பணிகள் அனைத்துக் கோயில்களிலும் முறையே வெட்டப்பட்டும், செய்யப்பட்டும் உள்ளன.

பெருமைக்குரிய பேரூர் இந்த ஏழ்தலங்களில் சேர்க்கப்படாமை வியப்பான ஒன்று.

சைவம் வளர்த்த – வளர்ந்த நிலையில் கொங்கு நாட்டிற்குமுரிய பங்களிப்பு இத்தலங்களால் நடைபெற்றுள்ளது என்பதனை இத்தலச் செய்திகள் காட்டுகின்றன.

## *சான்றாதாரங்கள்*

1. திருமுறைத் தலங்கள் பு.மா.ஜெய செந்தில் நாதன், வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை - 2001
2. பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை, 1999, பக்.129-130
3. கொங்கு நாட்டியல் தமிழ்த்துறை வெளியீடு, கோபி கலை அறிவியல் கல்லூரி, கோபி - 1997.
4. கார்மேகக் கவிஞர், கொங்குமண்டலச் சதகம்: 9.

* * *

# 4. கொங்குநாட்டு ஊர்ப் பெயர்கள்

## பெயரிடும் மரபு

இறைவன் படைப்பிலும் இயற்கையின் படிநிலை வளர்ச்சியிலும் மிகச்சிறந்த உயிரினம் மனித இனம். மனிதன் தோன்றி வளர்ந்த நிலையில் தன்னைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருள்கட்கும் பெயரிட்டு வழங்கினான். அத்தோடு அடையாளப்படுத்த வேண்டித் தனக்கும் பிறமனிதர்களுக்கும் தான் வாழும் பகுதிகளுக்கும் பெயர் சூட்டி அழைத்தான். இந்த நிலையில் மனித குலம் பெயரிடும் உத்தியைக் கையாண்டு அறிவியல் சிந்தனை கொண்டு விளங்கியது. இங்ஙனம் சூட்டப்பட்டுக் காலங்காலமாக வளர்ந்து வரும் ஊர்ப்பெயர் களைப் பற்றி ஆராயும்போது அந்த நாட்டு வரலாறு, நாடாண்டவர் வரலாறு தெரிவது ஒருபுறம் இருக்க அப்பகுதி மக்களின் பண்பாடு, மொழியியல், வாழ்வியல் பற்றிய செய்திகளும் தெரியவருகின்றன. காரணம் இந்த ஊர்ப் பெயர்கள் வரலாற்று மூலங்களாக அமைவதோடு வரலாற்றோடு நேரடித் தொடர்புடையன வாகவும் உள்ளன. மேலும் இன்று வரை அவை பெரும்பாலும் மாறாது நிலைபேறுடையனவாக அமைகின்றன. எனவே, இவற்றைப் பழமையின் எச்சங்களாகக் கொண்டு ஆய்வு செய்வது சுவை தருவதோடு பயன் தருவதாகவும் இருக்கிறது.

நாடோடிகளாய் - காட்டுமிராண்டிகளாய்க் காடு, மேடுகளில் அலைந்து திரிந்த வாழ்க்கை மாறி நிலைத்து ஓரிடத்தில் குழுவாக-கூட்டமாக வாழத்தொடங்கிய பின்னரே மனிதர்கள் தாங்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குக் குறியீடுகள் சூட்டி இருத்தல் வேண்டும்.

## ஊர்ப்பெயர்களின் அமைப்பு

பொதுவாக ஊர்ப்பெயர்களில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. அவற்றுள் முன்னது சிறப்புக் கூறாகவும் பின்னது பொதுக் கூறாகவும் அமைகின்றது. முன்னைய சிறப்புக்கூறே பிற ஊர்களிலிருந்து அதனை வேறுபடுத்துகிறது. சான்றாகக் கொங்குநாட்டின் பல ஊர்களில் பாளையம் என்ற பொதுக் கூறு அமைந்து முன்னுள்ள சிறப்புக் கூறு குறிப்பிட்ட இடத்தைக் காட்டுவதை அறியலாம். (கொங்கர்பாளையம், காவேரிபாளையம், கரட்டடிபாளையம்).

வழிவழியாக வழக்கில் நிலவி வரும் ஊர்ப்பெயர்களுள் சிலவற்றிற்கு நாம் காரணம் காண முடிகின்றது. ஆனால் சில பெயர்களுக்குக் காரணம் காண முடியவில்லை. இருந்தாலும் தொன்மைக்கால ஊர்கள் பெரும்பாலும் அந்த ஊர்களின் இயற்கைப் பொருள்களாலேயே (மரங்கள், செடிகள், கொடிகள், பூக்கள், மலைகள், நீர்நிலைகள்) வழங்கப்பட்டமையை வரலாறு காட்டுகிறது. மிகப் பெரிய நகரங்களும் (காஞ்சி, தில்லை, மருதை) சிறு சிறு ஊர்களும் (புளியம்பட்டி, வேலம்பாளையம்) மரப்பெயர் கொண்டு வழங்கப் படுகின்றன. மரங்கள் போலவே பிற இயற்கைப் பொருள்களும் ஊர்ப்பெயருக்கு மூலங்களாக உள்ளன. சான்றாக வானியாற்றின் மேற்குக்கரையில் அமைந்த ஊர் மேல்வானி (மேவானி); கீழ்க்கரையில் அமைந்த ஊர் கீழ்வானி (கீவானி); வானியாற்றங்கரையிலிருந்து குடிபெயர்ந்து புதுக்குடியமைந்த இடம் வானிப்புத்தூர் என்பனவற்றைக் காட்டலாம். இப்படியே பிறவற்றிற்கும் சான்றுகள் உள.

அந்தந்த இடத்தில் நிறைந்தோ அல்லது சிறந்தோ விளங்கும் இயற்கைப்பொருள்களால் ஊர்ப்பெயர்கள் வழங்கப்படும் நிலை காலப்போக்கில் மாறுதல்களை அடைந்தது. பின்னர் வந்த சமுதாய அமைப்பால் மன்னர்கள், வள்ளல்கள், குறுநில மன்னர்கள், மன்னர்களின் விருதுப்பெயர்கள் ஆகியனவும் குடியிருப்புப்

பெயர்களாயின. சமயம் வாழ்வில் ஓரங்கமாக நிலைபெற்ற போது தெய்வப்பெயர்களும் ஊர்களுக்காயின. சிலபல ஊர்களின் பெயர்களுக்குப் புராணக் கதைகளும் புனைந்துரைக்கப்பட்டன. இன்னும் பிற்பட்ட நிலையில் சாதிகளின் பெயர்கள் தாங்கிய ஊர்ப்பெயர்கள் உருவாயின. கொங்கு நாட்டில் முதலியார், பள்ளியர், சானார், கவுண்டர், கம்மாளர், சேடர், நாகர், ரெட்டி, நாயக்கர், ஒட்டர், வேட்டுவர், வலையர், வெள்ளாளர், நாவிதர், உடையார், குயவர், பூலுவர், வடுகர், இடையர் என்ற பெயர்களோடு சேர்ந்த பாளையங்கள் உள்ளதைக் காணலாம்.

இயற்கைப் பொருள்களை ஊர்ப்பெயராக அமைக்கும் தமிழ் மரபு ஓர் அமைப்புமுறை கொண்டதாக இருப்பது அவர்தம் கூர்ந்த பகுத்தறிவுக் கண்ணோட்டம் கொண்டது. நில இயல்புகளின் அடிப்படையில் நானிலப்பாகுபாடு போன்றே அந்தந்த நிலத்தில் அமையப்பெற்ற ஊர்ப்பெயர் முடிவுகளும் தனித்தன்மை கொண்டவையாய் உள்ளன.

மலையும் மலைசார்ந்த குறிஞ்சி ஊர்கள் குன்றம், குறிச்சி, கோடு, மலை, பாறை என்ற முடிவுகளையும், காடும் காடு சார்ந்த முல்லைப்பகுதிக் குடியிருப்புக்கள் காடு, பட்டி, பாடி, வனம் என்ற இறுதிகளையும், வயல்சார்ந்த மருதப்பகுதி இருப்பிடங்கள் கா, குடி, சேரி, புரம், வயல் என்ற முடிபுகளையும், கடற்பகுதியான நெய்தல் அமைவிடங்கள் பாக்கம், பட்டினம் என்ற பின் ஒட்டுக்களையும் கொண்டிருக்கும். பாலைப் பகுதி ஊர்கள் குறும்பு என்று முடியும். அதாவது ஊர்ப்பெயர் ஈறுகொண்டு அந்த ஊரின் நிலத்தன்மையை அறியலாம்.

கொங்குநாடு பெரிதும் குறிஞ்சி, முல்லை நிலப்பகுதியானதால் அந்தந்த நிலத்திற்குரிய பின்ஒட்டுக் கொண்டுள்ள ஊர்ப்பெயர்களை மிகுதியும் காணமுடிகிறது. அதே சமயம் நெய்தல் நில ஊர் முடிவுகள் இல்லாமையையும் தெரிய முடிகிறது.

## இலக்கணம் தரும் ஊர்களின் பெயர் முடிவுகள்:

திவாகர நிகண்டு ஊர்ப்பெயர் முடிவுகளாகக் கீழ்க்கண்ட வற்றைப் பட்டியலிடுகிறது.

*''பாக்கம், பட்டினம், பதி, நகர், சும்மை*
*பூக்கம், சேரி, புரம், முட்டம், பூண்டி*
*அகரம், குடியே, குறிச்சி, கோசரம்,*
*அகலுள், இருக்கை, நொச்சி, வேலி*
*குப்பம், பாடி, குறும்பு, பாழி*
*சிறுகுடி, தண்டை, உறையுள், எயிலொடு*
*வாழ்க்கை உட்படுத்து இருபத் தேழும்*
*நாடில் ஊரென நவின்றிசி னோரே'*

என்பது சூத்திரம். ஆனால் இந்த ஊர்ப்பெயர்களோடு நத்தம், பாளையம், வலசு, மங்கலம், பட்டி முதலிய முடிவுகளும் இன்று வழக்கில் வந்து சேர்ந்துள்ளன.

## பண்டைய சேரிகளும் இன்றைய வழக்காறும்

ஊர்ப்பெயர்கள் பலவாயினும் மக்கள் வாழுமிடங்கள் பெரும்பாலும் சேரி, பேட்டை என்ற முடிவுகளோடு அமைந்தன. மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழும் இடம் சேரி எனப்பட்டது. இம்முறையில் அந்தணச்சேரி, வேளாளச் சேரி, வலையர் சேரி என்று பழைய குடியிருப்புக்கள் பெயர் பெற்றதை இலக்கியங்கள் காட்டுகின்றன. அதே போன்று வெளிநாட்டவர் சேர்ந்து வாழுமிடங்களும் சேரி எனப்பட்டன. 'யவனச்சேரி' என்ற சங்கச் சொல் இதனைக் காட்டும். உதயணன் தங்கி இருந்த இடம் 'குஞ்சரச் சேரி' என்று அழைக்கப்பட்டதைப் பெருங்கதை காட்டும்.

ஆனால் இன்று சேரி என்பது தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் குடியிருப்பைக் குறிக்கும் சொல்லாகிப் பொருளில் தாழ்வு நிலை பெற்றுள்ளது. மொழியியல் ஆய்வுக்கு இத்தகையமாறுதல்களைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் பயன்படுகின்றன.

## சமயத் தாக்கம் கொண்ட ஊர்ப்பெயர்கள்

சமயம் மனிதவாழ்வின் பிரிக்க முடியாத அங்கமானபோது ஊர்களுக்குத் தெய்வப் பெயர்கள் இடப்பட்டன; மேலும் அந்த ஊர்களுக்குப் புராணக்கதைகளும் எழுதப்பட்டன. இன்னும் வடவர் ஆதிக்கத்தால் தூய தமிழ்ப் பெயர்கள் வடமொழிப் பெயர்களாக ஆக்கப்பட்டன. இதற்கு, தில்லை, சிதம்பரம் ஆனதும், புளியவனம்

திண்டிவனமாக மாறியதும், திருமயிலாடுதுறை மயூரமானதும் சான்றாகும்.

இன்னும் சில பெயர்கள் அவற்றின் சமயத் தகுதியைக் காட்டுகின்றன. தேவ தானம் என்றால் சிவன்கோயிலுக்கு அளிக்கப் பட்ட இடம் என்பதை அச்சொல் காட்டும். சைன, பௌத்தப் பள்ளிக்குத் தரப்பட்ட இடம் பள்ளிச்சந்தம் என்றும் வைணவக் கோயில் களுக்குக் கொடுக்கப்பட்டவை திருவிடையாட்டம் என்றும் அழைக்கப் பட்டன. அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட இடம் பிரம்மதேசம் எனப்பட்டது. அந்தணர்க்கும் கோயில்களுக்கும் வழங்கப்படும் நிலப்பகுதி தேவதானப் பிரம்மதேசம் என்று கூறப்பட்டது. அந்தணர் குடியேறிய இடங்கள் சதுர்வேதி மங்கலம், அகரம், அகரச்சீமை, அகரப் பிரம்மதேசம் எனப்பட்டன.

கொங்கு நாட்டில் சமயத்தாக்கம் கொண்ட ஊர்கள் உள. அந்தியூர், தாராபுரம் ஊர்களுக்கருகில் பிரம்மதேயம் எனப்படும் இடங்கள் உள்ளன. இதே போன்று அவிநாசி திருமுருகன் பூண்டிக்கருகில் ஒரு சதுர்வேதிமங்கலம் இருந்துள்ளது. இதனைத் தென்னிந்தியக் கோயில் சாசனத்தால் (1185) அறியமுடிகிறது.

இதேபோன்று மங்கலம் என்ற சொல்லிறுதி கொண்ட சத்தியமங்கலம், கோமங்கலம், குடிமங்கலம், எண்ணமங்கலம், விஜயமங்கலம், காரிமங்கலம், தாரமங்கலம், மங்கலம் என்ற ஊர்களும் கொங்கு மண்ணுக்குரியவையே.

தொண்டை நாடு, சோழநாடு போன்று சைவ, வைணவக் கோயில்கள் நிறைந்த ஊர்கள் கொங்கில் மிகுதியாக இல்லை. ஆயினும் தேவாரம் பெற்ற ஏழு ஊர்கள் 'கொங்கு ஏழ்தலங்கள்' என்ற தொடரால் சுட்டப்படுவதை வழக்காற்றில் காணமுடிகிறது. அவை திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர் ஆநிலை, திருக்கொடி மாடச் செங்குன்றூர், திருப்பாண்டிக்கொடுமுடி, திருப்புக் கொளியூர் அவினாசி, திருமுருகன் பூண்டி, திரு நணா என்பனவாகும். இவை இன்று பெயர்ச்சுருக்கம் பெற்று விளங்குகின்றன. திருநணா என்ற பெயர் இன்று மறைந்துபோய் அது பவானி (பூவானி) என்று அழைக்கப்படுகிறது.

பெயர்களைச் சுருக்கிக் கூறுவது பேச்சுவழக்கு நடைமுறையாகி எழுத்திலும் நிலைபெற்றுவிட்டது. ஊர்ப்பெயர்கள் அங்ஙனம்

சுருங்கும்போது சில உண்மைகளும் அதில் மறைந்து போகின்றன பின்னர் ஆய்வு செய்தே நாம் விளக்கம் காணவேண்டியுள்ளது. கோவன்புத்தூர் அல்லது கோசர் புத்தூர் இன்று கோயம்புத்தூர் என மருவிக் கோவை எனச் சுருங்கிவிட்டது. சூரனூர் என்பது சூலூராகிவிட்டது. 'ஒற்றைக்கல் மந்து' உதகமண்டலமாகி ஊட்டி எனச் சுருக்கம் கொண்டுள்ளது. இப்படிச் சுருங்கியுள்ள ஊர்ப் பெயர்களை ஆய்வு செய்யின் பழைய உண்மைகள் கிடைக்க வாய்ப்புக்கள் உண்டு.

## கொங்கின் தலைமை ஊர்கள்

கொங்கு நாடு என்பதன் பெயர்க்காரணத்தைக் கூறவரும் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் இது 'கொங்கூர்' என்னும் தலைநகரால் அமைந்த பெயர் என்பர். இந்தக் கொங்கூர், தாராபுரம் அருகில் உள்ள ஊராகும்.

இந்தக் கொங்கூர் போலத் தாராபுரமும் பண்டைப் பெருமை கொண்டது. இதற்கு விராடபுரம் என்று பாரதத்தோடு இணைந்த பெயரும் ராஜராஜபுரம் என மன்னனோடு இணைந்த வேறு பெயர்களும் வழங்கி வந்துள்ளன.

கொங்கின் ஒரு பகுதியின் தலைநகரமாக அமைந்த பெருமை தருமபுரி (பழைய தகடூர்) அருகில் அமைந்த அதமன் கோட்டையைச் (அதியமான் கோட்டை) சாரும்.

பிற்பட்ட காலங்களில் சத்தியமங்கலம் கோட்டை, அந்தியூர்க் கோட்டை, சங்ககிரிக் கோட்டை முதலியனவும் தலைநகரங்களாக இருந்த பெருமையை வரலாறு காட்டுகிறது.

## கடை எழு வள்ளல்களின் ஊர்கள்

சங்ககாலந் தொட்டுப் போற்றப்படும் கடை எழு வள்ளல்களும் பிற கொடையாளர்களும் கொங்குப்பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை இங்குள்ள ஊர்கள் சான்றாக நின்று காட்டுகின்றன.

கொங்கின் தென் எல்லை பொதினி. இஃது இன்று பழனி என்றாகிப் புராணச் சிறப்புப் பெற்றுள்ளது. இந்தப் பொதினியை ஆண்டவன் ஆய்குல - ஆவியர்குலப் பேகன். இவனே மயிலுக்குப் போர்வை ஈந்து கொடைமடம் கொண்டவன். இவனது மரபினரான ஆவியர் குடியால் தோண்டப்பட்ட வையாவிக் குளம் இன்று வையாபுரி

குளமாகப் பெயர் பெற்று விட்டது. இந்த ஆவியர் குடியிருப்பு ஆவினன்குடி. இன்று திருவாவினன்குடியாகிவிட்டது. வையாவிக் கோப்பெரும் பேகனைப் பழனியும் அதற்கருகுள்ள ஆய்க்குடியும் இன்னும் ஆய்பாளையங்களும் நினைவூட்டுகின்றன.

குமணன் (முதல் ஏழு வள்ளல்களுள் ஒருவன்) வாழ்ந்த முதிரமலை இன்று திருமூர்த்தி மலையாக உடுமலைப் பேட்டை வட்டத்தில் உள்ளது. ஔவைக்கு நெல்லிக்கனிதந்த அதியமான் கோட்டை இன்று தருமபுரியாக மாறிவிட்டது. கொல்லிமலை வல்வில் ஓரியின் பெயரை ஓரிசேரிப்புதூர் நிலை நிறுத்துகிறது. காரியின் பெயர் காரிமங்கலத்தால் இன்றும் நினைக்கப்படுகிறது. ஆனைமலை (உம்பல் காடு) அருகில் உள்ள நன்னூர் சங்க இலக்கியம் பேசும் பெண்கொலை புரிந்த நன்னனைக் குறிக்கிறது என்பர். அப்பகுதியில் உள்ள மாசாணி அம்மன் நன்னனால் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கோயிலே என்பாரும் உளர்.

முல்லைக்குத் தேரீந்த பாரியின் பெயரால் அமைந்த ஊர் பாரியூர். இதில் மிகப்பழமை வாய்ந்த சிவன் கோயிலும் வீரபாண்டியன் காலக்கல்வெட்டுகளும் உள்ளன. பாரியின் பறம்புமலை அந்தியூர் வனச்சரகம் சார்ந்த பர்கூர் என்பதையும் அவனது ஊர் பாரியூர் என்பதையும் முற்றாக ஒதுக்குவதற்கு இல்லை.

## பழைய கொங்கு முல்லை நிலமே

ஊர்ப்பெயர்கள் அந்தந்த நில இயல்புகள் காட்டும் தன்மை கொண்டவை. இந்த நாடு தெற்கே பழனி மலை தொடங்கி மேற்கே முதிரமலை, உம்பல்காடு, வெள்ளிமலை என வளைந்து பின் நீலமலை, தலைமலை என அமைந்து வடக்கே கொல்லிமலையளவும் மலைப்பகுதி சூழ்ந்த காட்டுப்பகுதியாகும். இந்த நிலவியல் இப்பகுதி மக்களின் வாழ்வியலைக் காட்டும்.

காடு என்பது முல்லை ஊர்களின் பிற்கூறு. இதே போன்று பட்டி, தொட்டி, பாடி, வனம் என்பனவும் இறுதியாக அமையும். பட்டி ஆடுகளை அடைக்கும் இடம்; தொட்டி (தொழுவம்) மாடுகளை அடைக்கும் இடம்; கொங்குப்பகுதி 'ஆகெழு கொங்கர்' என்று

கால்நடை கொண்ட மக்களால் நிரம்பியது எனச் சங்க இலக்கியம் கூறும். பட்டி விகுதி கொண்ட ஊர்கள் கொங்கில் மிகுதி.

பாடி என்பதும் ஆநிரைகள் நிறைந்த ஊரினைக் குறிக்கும். ஆனால் 'பாடி' என்பது படை வீரர்கள் தற்காலிகமாகத் தங்குமிடங்களையும் குறிக்கும். கொங்குநாட்டில் காராப்பாடி, கவுந்தப்பாடி, எடப்பாடி (இடையர்பாடி), மயிலம்பாடி, பூதப்பாடி என்பன கொண்டு கொங்கு முல்லை நிலம் என்பதை நிறுவலாம்

## பாளையங்கள்

பாளையங்கள் என்று முடிகின்ற ஊர்கள் கொங்கில் மிகுதியானவை. தமிழகத்திலன்றி ஆந்திரம், கர்நாடகம், கேரளம், இலங்கைப்பகுதிகளிலும் இந்த ஈற்றுடன் முடிவுறும் ஊர்கள் உள்ளன. தமிழ், தெலுங்கு, கன்னட மொழியிலுள்ள பாளையம் என்பது படையோடு தொடர்புடைய பொருளைக் கொண்டுள்ளது. பாளையம் என்பதற்குச் சேனை, படைகள் தங்குமிடம் (பாசறை), குறுநில வேந்தர்கள் ஆண்ட பகுதி, மலைகளால் சூழப்பட்ட கிராமம் என்ற பொருள்கள் உண்டு. இருப்பினும் பாளையம் என்ற சொல் வழக்கு கி.பி.13 ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குகிறது. விஜய நகரக் கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்களில் பல இச்சொல் கொண்டே முடிகின்றன.

ஈரோடு, கோவை என்று பிரிக்கப்படாத பழைய கோவை மாவட்டத்தில் இருந்த 7000 ஊர்களில் 2888 ஊர்கள் பாளையம் என்ற முடிவைக் கொண்டவை. இது ஏறத்தாழ 40 விழுக்காட்டுக்கு மேல் என்பதை முனைவர். கி.நாச்சிமுத்து தெரிவிக்கின்றார். கொங்குப் பகுதியில் பாளையங்கள் திடீரெனப் பெருகியதற்கு இந்தப் பகுதியில் கன்னடர்களும், தெலுங்கர்களும் குடியேறியதே காரணம் என்பர்.

## பிற இனத் தாக்கமும், ஊர்ப் பெயர்களும்

இன்றைய கர்நாடகம் பழைய கொங்குப் பகுதியாகவும் பண்டைத் தமிழகத்தின் பகுதியாகவும் இருந்தது. கர்நாடகத்திலிருந்து கொங்கு நாட்டு வழியாகத்தான் பிற தமிழகப் பகுதிகளுக்குச் செல்ல முடியும். எல்லை அருகில் உள்ள நாட்டுப்பகுதி ஆதலின் கொங்குச் சீமையைக் கங்கவம்சத்தாரும் பிற்காலத்தில் உடையார்களும் ஆண்டனர். அவர்கள் காலத்தில் கர்நாடக மக்கள் கொங்கின் வட

பகுதியான செம்மண் சீமையில் குடியேறினர். கர்நாடகத்தில் 'ஹள்ளி' என்று முடியும் ஊர்கள் மிகுதி. அதேபோன்று இங்கும் கொங்கல்லி, மாட்டல்லி, மாரண்டஹள்ளி, சிக்கல்லி என்ற ஊர்கள் உள்ளன. இன்னும் கன்னடச்சொற்களே ஊர்ப்பெயராக இருப்பதையும் காண முடிகிறது. சிக்கரசம்பாளையம் (சிக்க ராஜா - சின்ன அரசன்), தொட்டம்பாளையம் (தொட்ட - பெரிய), பெத்தாம்பாளையம் (பெத்த-பெரிய) ராயர் பாளையம் (ராயர் - ராசர் - அரசர் - உடையார் வம்ச அரசர்கள்) என்ற ஊர்களைக் காண்க.

தெலுங்கர்கள் தங்கள் பூர்வபூமி போன்று கரிசல் மண் பார்த்து இந்த மண்ணில் குடியேறினர். வடுகபட்டி பாளையங்கள், ரெட்டிபட்டி பாள்ளயங்கள், நாயக்கன்பாளையங்கள், பொம்மன்ப்ட்டி, கெஞ்சனூர் போன்ற ஊர்கள் தெலுங்கு மக்களின் ஆதிக்கம் காட்டுகின்றன.

## பிற

கொங்கு நாட்டு மக்கள் வாழுமிடங்கள் சாதிப் பெயர்களோடு வழங்கியமை முன்னர்க் காட்டப்பட்டது. கொங்கு மண்ணின் இருப்பிடங்கள் பெயர் பெறும் முறைகளில் சிலவருமாறு: கொங்கு வேளாளர்களின் கூட்டப்பெயரோடு இணைந்து செம்பூத்தான் பாளையம், மணியன்பாளையம், காடபாளையம், காடையூர் போன்ற ஊர்கள் உள. அந்தந்தப்பகுதி மக்களின் குலதெய்வங்கள் பெயர் கொண்ட வாழிடங்களும் உண்டு. அத்தனூர் குலவிளக்கம்மன் கோயில், காகத்தலையம்மன் கோயில் என்பன சில சான்றுகள். இராமாயணப் பாத்திரங்களோடு சேர்ந்த வாலிபாளையம், வாலி கண்டபுரம், சுக்கிரீவர்கோயில், அனுமன்பள்ளி என்ற ஊர்களும் உண்டு. புலவர்களை நினைவுகூர்ந்து பொலவபாளையம்(புலவர் பாளையம்), பொலவக்காளிபாளையம் (புலவன்காளிபாளையம்) என்ற ஊர்களும் இங்கு உண்டு. புதுக்குடியேற்ற ஊர்கள் வலசு என்ற பெயர் பெறுவதற்கு ஒப்ப இங்குப் பூசாரிவலசு என்பன போன்றவை இருக்கின்றன.

சில ஊர்ப்பெயர்கள் மருவி வழங்குவதால் அதன் சிறப்பு, வரலாறு முதலியன தெரிவதில்லை. ஆனால் ஆய்ந்து பார்க்கையில் அதன் பெருமைகள் புலனாகின்றன. இன்றைய கணக்கன்பாளையம் ஒருகாலத்தில் நாணயங்கள் அச்சிடும் 'அக்கசாலை நல்லூ'ராக இருந்துள்ளது. நம்பிப்பேரூர் நம்பியூராக, முடச்சிஊர் மொடச்சூராக,

செட்டிப்பிள்ளான் அப்பன் ஊர் கோபிசெட்டிபாளையமாக, பெரும் பழன நல்லூர் பெருமாநல்லூராக - இப்படிப் பல ஊர்களின் மூலம் மாறி வழங்குவதை வரலாறும் கல்வெட்டும் காட்டுகின்றன.

## முடிவுரை

கொங்கு நிலப்பகுதி 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த 24 நாடுகளிலும் உள்ள ஊர்ப்பெயர்களைத் தனித்தனியாக எடுத்து ஆராய்ந்தால் இந்த மண்ணின் வரலாறு, பண்பாடு, வாழ்வியல், மொழியியல், வழக்காறுகள் ஆகியன தெரிய வாய்ப்புண்டு. இத்தகைய ஆய்வுகள் நாட்டுப்புறவியலில் பயன்பாட்டோடு கூடியனவாகச் சிறப்பிடம் பெறும். அத்தகைய ஆய்வை விடுத்து ஓரளவு சில செய்திகளை மட்டுமே இக்கட்டுரை அறிமுகப் படுத்தியுள்ளது.

* * *

# 5. அந்தியூர்

## கொங்கு நாடும் பிரிவுகளும்

பண்டைக் காலந் தொட்டே தமிழகம் பல்வேறு உட்பிரிவு களைக் கொண்டதாக அமைந்திருந்தது. சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு எனப் பேரரசர்கள் ஆட்சி நடத்திய நிலப் பகுதியோடு கொங்கு நாடும் தொண்டை நாடும் தனி நாடுகளாக எண்ணப்பட்டு வந்தன. 'தமிழ் மண்டிலம் அய்ந்து' என்ற திருமந்திரத் தொடர் கொண்டு தமிழக உட்பிரிவுகள் அய்ந்தாக எண்ணப்பட்டதை நிறுவ முடியும்.

தமிழகத்தின் ஓர் உட்பிரிவான கொங்கு நாடும் சிறுசிறு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மீ கொங்கு (மேற்குப் பகுதி), மழ கொங்கு (கிழக்குப் பகுதி), தென் கொங்கு, வட கொங்கு எனக் கொங்கு நாடு நான்கு மண்டிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த நான்கு மண்டிலங்களிலும் எழுபத்தொன்பது வள நாடுகள் இருந்தன. இந்தக் கொங்குப் பிரிவுகளும்கூட வரலாற்றுக் காலம் முழுவதும் ஒரே சீராக இல்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கது. காரணம் கொங்கு ஒரு கால கட்டத்தில் இருபத்து நான்கு நாடுகளைக் கொண்டிருந்தது. 'கொங்கு இருபத்து நான்கு நாடுகள்' என்ற தொடரால் இதனை அறிய முடியும்.

வானி எனப் பதிற்றுப்பத்து போற்றும் இன்றைய பவானி நதியின் வடபுறம் அமைந்துள்ள நிலப்பகுதி வடகரை நாடு என வழங்கப்பட்டது. இவ்வடகரை நாட்டில் இருபத்து நான்கு ஊர்கள் அடங்கி இருந்ததைப் பின்வரும் பாடல் காட்டும்.

''அந்தியூரும் பட்டிலூரும் குறிஞ்சி பீலாம்பட்டி சம்பை வானி
ஆப்பக்கூடலினொடு கீழ்வானி மூங்கில் நகரான
மூகப்பானூரும்
பைந்தரு விளங்கும் கருவல்வாடி தன்னொடுபகர் அம்மாப்பேட்டை
பொன்னிப்
பழ நதிக்கரை நெரிஞ்சிப்பேட்டை வளவயல் பர எண்ண
மங்கலமுடன்
செந்திரு விளங்க வளர்கோட்டை, பூதப்பாடி சேருநல்லூர் உலகடம்
செழிய கன்னப்பிலி பருவாச்சி பிரமியம் சீர்கெட்டியின் சமுத்திரம்
வந்தனை செய்யும் பெரியர் தங்கு பூனாச்சியும் ஊர் சென்னம்பட்டி என்ன
மாகவிஞர் சாற்றும் இருபத்து நான்கு ஊர்களும் வடகரை நன்னாடு
தானே.''

இந்த இருபத்து நான்கு ஊர்களுக்கும் தலைநகராக அதாவது வடகரை நாட்டுக்குத் தலைநகராக அமைந்திருந்தது அந்தியூர் என்ற ஊராகும். இந்தத் தலைமைச் சிறப்பானது மிக அண்மைக் காலம் வரை இந்த ஊருக்கு அமைந்திருந்தது. அந்தியூர், வட்டத் தலைமையிடமாக இருந்ததைப் பாளையப்பட்டுக்களின் வம்சாவளியைக் காட்டும் முதல் தொகுதி, ''அந்தியூர் தாலூக்கா சரம்பள்ளி கணக்குப்பிள்ளை கைப்பீது'' என்று குறிப்பிடுவதில் அறியலாம். இன்னும் இவ்வூர் வட்ட ஆட்சித் தலைமையிடமாக அமைந்திருந்ததைக் 'கொங்குச் சீமை கோயம்புத்தூர் சில்லா அந்தியூர் தாலூக்கா பவானி கிராமம்' என்று குறிப்பிடும் பதிவேடுகள் வழியாகவும் நிறுவலாம்.

இப்படிப் பண்டைக் காலம் தொட்டு அண்மைக் காலம் வரை ஆட்சித் தலைமையிடமாக அமைந்த அந்தியூரின் வரலாறு கொங்கு நாட்டு வரலாற்றின் சிறப்புடைய பகுதிகளுள் ஒன்றாகும்.

### அந்தியூர் - பெயர்க் காரணம்

பழமையும் சிறப்பும் வாய்ந்த ஊர்களின் பெயர்கள் பற்றிய ஆய்வுகள் இன்பம் தருபவை. இவ்வூர்கள் பல வரலாற்றிலும் இடம்

பெற்றவை. சில புராணங்களிலும் இடம் பிடிப்பவை. எப்படியாயினும் ஆய்வுக் கண்கொண்டு ஊர்களின் பெயர்களை ஆய்வது என்பது ஆய்வில் ஒருவகை.

மக்கள் வாழும் பகுதியின் பெயர்கள் பெரும்பாலும் இரட்டைச் சொல் கொண்டு அமையும். அவற்றுள் முன்னது அவ்வூர் பற்றியும் பின்னது அவ்வூர் பற்றிய முடிவுச் சொல்லையும் கொண்டமையும். கொங்கு ஊர்ப் பெயர்கள் ஊர், வலசு, நத்தம், பாளையம் போன்ற முடிவுகளோடு அமைகின்றன. 'ஊர்' என்பது பொதுச் சொல்லாயினும் 'ஊர்' என்ற இருப்பிடப் பெயரின் முடிவுச் சொல் தனிப்பொருள் உடையது.

அதாவது 'ஊர்' என்பது மக்கள் நிலை கொண்டு உயிர் வாழும் இடப்பகுதியைக் குறிப்பதாகும். இலக்கிய வழக்கில் 'பதியெழு அறியாப் பழங்குடிகள் வாழும் இடம்' என இதற்கு விளக்கம் தர முடியும்.

அந்தியூர், அந்தி என்ற முதற் சொல்லையும் ஊர் என்ற முடிவுச் சொல்லையும் உடையது. ஊர் என்ற இதன் முடிவு இந்தப் பகுதி மக்கள் புலம்பெயராமல் இந்த இடத்திலேயே நிலைத்து வாழும் தன்மையினர் என்பதைக் காட்டும். எனவே மிகப் பழைய ஊர் அந்தியூராம். இருப்பினும் அந்தியூர் என்ற பெயரின் விளக்கம் யாது? இவ்விளக்கம் பலவாறாக ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

கொங்கு நாடு பல்வேறு மன்னர் பரம்பரையால் ஆளப்படினும் சேரரின் செல்வாக்கு ஈண்டு மிகுதி. சங்கச் சேர மன்னன் அந்துவன் பொறையன் (கி.பி. 92 - 112) கொங்கு நாட்டை ஆண்ட சேரருள் ஒருவன். அந்துவன் பெயரால் அமைந்ததே அந்தியூர் என்பது ஒருசாரார் கருத்து. இதற்கு அரணாக அந்தியூரைச் சுற்றிலுமுள்ள கொங்கு வேளாளரில் அந்துவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதி என்பதையும் அவர்கள் எடுத்துரைப்பர்.

சங்கக் குறுநில வேந்தருள் அத்தி என்பவன் குறிப்பிடத்தக்கவன் ஆவான். அந்த மன்னன் பெயரால் இப்பகுதி அந்தியூர் (அத்தியூர் > அந்தியூர்) என வழங்கப்படுகிறது என்பர் ஒரு சிலர். கடையெழு வள்ளல்களுக்கு முன்பு வாழ்ந்த இடை ஏழு வள்ளல்களில் இருவர்

அந்திமான், சந்திமான் என்பவர்கள். இவருள் முதலாமவர் பெயரால் இவ்விடம் அந்தியூர் என்று பெயர் பெற்றிருக்கலாம். இரண்டாம் வள்ளல் பெயரை அந்தியூருக்கு அருகில் உள்ள சந்திபாளையம் என்ற ஊர் பெற்றுள்ளது எனலாம். இப்படி ஒரு கருத்தையும் கூறுவாருண்டு.

ஆனால் பாளையம் என்ற சொல் வழக்கு மிகவும் பிற்பட்டது என்பதை ஈண்டு எண்ணிப் பார்க்க வேண்டும். நாடாண்டவர்களின் பெயர்களே இந்த ஊர் இப்பெயர் பெற்றதற்குக் காரணம் என மேற்கூறியவை நிறுவுகின்றன.

அத்தி என்ற சொல்லுக்கு மரம், யானை, எலும்பு, கொலை, பாதி, கடல் என்ற பொருள்கள் உண்டு. தில்லை மரங்கள் நிறைந்த இடம் தில்லை என்றாற்போல அத்தி மரங்கள் நிறைந்த இடம் அத்தியூர் என்றிருந்து பின் மெலிந்து அந்தியூராகி இருக்கக்கூடும் என்பர். இப்படியே அத்தி என்றால் யானை. யானை மிகுந்துள்ள பகுதி அத்தியூர் என்று பெயர் பெற்றுப் பின் அந்தியூர் என்றானது என்று கூறுவாரும் உண்டு. ஆனால் அத்தியூர் என்று வடகரை நாட்டு வடபகுதி மலைகளில் சில ஊர்கள் உள. ஆனால் அவை அந்தியூர் என்று வழங்கப்படுவதில்லை என்பதையும் ஈண்டு நினைவில் கொள்ளல் வேண்டும்.

மைசூர் மன்னர்களின் ஆட்சி வடகொங்கில் நடந்த வரலாறு உண்டு. எனவே கன்னடத் தாக்கம் இங்கு மிகுதியும் உள்ளது. அந்தி என்ற கன்னடச் சொல்லுக்குப் பன்றி என்ற பொருள் உண்டு. எனவே அந்தி (பன்றி) என்ற கன்னடச் சொல்லோடு 'ஊர்' என்ற முடிவுச் சொல் சேர்ந்து அந்தியூர் என்றாயிற்று என்பர். இதற்குச் சான்றாக அந்தியூர் வராக நதியின் கிழபுறம் அமைந்திருந்தது என்ற புராணக் குறிப்பைச் சுட்டுவர். வராகம் என்றால் பன்றி என்று பொருள். ஆனால் வராகம் தமிழ்ச்சொல் அன்று. கன்னட மொழி கொங்கு வடபகுதியில் செல்வாக்கு அடைந்தது பிற்பட்ட காலத்தே தான். மிகத் தொன்மை ஊரான இதற்குக் கன்னடச் சொல்லால் பெயர் வந்துள்ளது என்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதன்று.

இந்தக் காரணங்கள் இயற்கைப் பொருள்கள் அடிப்படையில் இந்த ஊர்ப் பெயரை நிறுவ முயலுகின்றன.

கொங்கு நாடு பெரும்பாலும் முல்லை நிலப பகுதியாகும். ஆடு, மாடு மேய்த்தல் இம்மக்களின் தலையாய தொழில். தங்கள் ஊருக்கு வடக்கே உள்ள காட்டுப்பகுதியிலும், மலைப் பகுதியிலும் பகலில் கால்நடைகளை மேய்த்து வந்து மாலையில் - அந்தியில் அவற்றை இவ்விடத்தில் நிறுத்தியதால் இப்பெயர் பெற்றது என்பார் பூங்குன்றன் அவர்கள். இக்கருத்து ஏற்புடைய ஒன்றாக உள்ளது எனலாம்.

அந்தியூர் என்ற இதன் தொன்மைப் பெயரைத் திப்புசுல்தான் (கி.பி. 1797 - 1798 இல்) 'அகமதாபாத்' எனப் பெயர் மாற்றம் செய்தான். ஆனால் அவனது வீழ்ச்சிக்குப் பின் மீண்டும் அந்தியூர் என்ற பழைய பெயர் நிலை நிறுத்தப்பட்டது. இதனைக் கோவை மாவட்டம் பற்றிய சென்னை மாநில அரசு அறிக்கையில் காணலாம்.

## அந்தியூரை ஆண்டவர்கள்

அந்தியூர் சங்க காலம் முதற்கொண்டே முதன்மை பெற்ற ஊராக இருந்துள்ளது. சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட சேரர்கள் அந்தியூர் அமைந்துள்ள வடகரை நாட்டையும் ஆண்டுள்ளனர்.

சேரருள் செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை ஆகியோர் வடகரை நாடாண்ட கொங்குச் சேரர்கள் ஆவர். முடிவேந்தர் போன்றே வேடர்களும் இப்பகுதியில் ஆட்சி செய்துள்ளனர். வேடர் தலைவனான கண்டீரக்கோப்பெருநற்கிள்ளி என்ற வள்ளலும் இப்பகுதியை ஆண்டுள்ளான். இவனால் ஆளப்பட்ட தோட்டி மலை இன்றைய பருகூர் மலையின் ஒரு பகுதியாகும்.

சங்க காலத்திற்குப்பின் ரெட்டிகுல மன்னர், கங்கர், குறுநில மன்னர்கள், இராட்டிரகூடர், பிற்காலப் பாண்டியர், ஒய்சாளர், விசயபுர மன்னர்கள், மதுரை நாயக்கர்கள், ஐதர்அலி, திப்புசுல்தான் என்போரும் முடிவாக ஆங்கிலேயரும் அந்தியூரை ஆட்சி புரிந்தனர்.

அந்தியூரில் உள்ள அழகரசப் பெருமாள் கோயில், பத்ரகாளியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் உள்ள மீன் சின்னங்கள் இந்த ஊருக்கும் பாண்டியருக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

அம்மன் கோயில் வெளிப்புறத்தில் சேரன் கணைக்கா லிரும்பொறை சிறையிலிருக்கும் தோற்றம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

அந்தியூர் உள்ளிட்டுக் கெட்டி முதலிகள் (கட்டி முதலிகள்) ஆண்ட பகுதியைக் கி.பி. 1641 இல் கண்டீவ நரச உடையார் கைப்பற்றி அரசாண்டார். இவருக்குப்பின் 1659 இல் தேவராச உடையார் பட்டம் பெற்றார். இவர் மதுரைச் சொக்கநாதருடன் போரிட்டு அந்தப் போரில் கிடைத்த பொருள் கொண்டு கோயில் திருப்பணிகள் செய்துள்ளார். மேலும் அந்தியூர் ஏரியையும் செப்பனிட்டார். இன்னும் தேவராஜா கோயில் என்ற சிவாலயமும் இவரால் கட்டப்பட்டது. 'தேவராஜா கோயில்' என்ற கல்வெட்டுத் தொடர் இதனைக் காட்டும்.

இவ்வூரின்மீது மைசூர் மன்னரின் ஆதிக்கம், மொழி ஆதிக்க மாகவும் இருந்திருக்கிறது. அந்தியூர்க் கோயில்களில் காணப்படும் கன்னட மொழிக் கல்வெட்டுக்கள் இதற்குச் சான்றாகின்றன.

திருமலை நாயக்கர் காலத்தில் அந்தியூர்க் கோட்டை பழுது பார்க்கப்பட்டது என்பது வரலாற்றுச் செய்தி. இம்மன்னரின் அந்தியூர்த் தொடர்பின் சிறப்பைப் பத்ரகாளியம்மன் கோயில் கிழபுறம், திருமலை நாய்க்கர், தம் தேவியரோடு இருப்பது போன்று அமைக்கப்பட்டுள்ள சிலை கொண்டு உணர முடியும்.

திப்புசுல்தான் கி.பி. 1798 இல் அந்தியூரில் சமாபந்தி நடத்தினான். திப்புவின் வீழ்ச்சிக்குப்பின் அந்தியூர்க்கோட்டையும் வீழ்ந்தது. பின்னர் ஆங்கிலேயர்கள் காலத்தில் அது வட்டத் தலைநகராக இருந்தது.

18-10-1800 இல் டாக்டர் புக்கானன் என்ற வரலாற்று ஆசிரியர் அந்தியூருக்கு வருகை தந்து அவ்வூர் பற்றிய குறிப்புக்களை வரைந் துள்ளார். அதில் அவர் அந்தியூரைச் சுற்றியுள்ள ஏழு ஏரிகள் பழுதடைந் துள்ளதாகக் குறிப்பிடுவது ஒரு முக்கியமான செய்தியாகும்.

## அந்தியூர்க் கோட்டையும் கோயில்களும்

மன்னர்கள் ஆட்சி செய்த தலைநகராக இந்த ஊர் இருந்ததால் இவ்வூரில் மூன்று சுற்றுக்கள் கொண்ட பெரிய கோட்டை ஒன்று

இருந்தது. "இப்பெருங்கோட்டை 1 1/2 கி.மீ. நீளமும் அகலமும் கொண்டது. மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்தில் இருந்த அரண்மனை, அத்தாணி மண்டபம், அந்தப்புரம், அலுவலகங்கள் ஆகியன அழிந்துவிட்டன. செல்வக் கடுங்கோ வாழியாதனுடன் தொடர்புடைய செல்லீசுவரர் கோயில், அழகரசப் பெருமாள் கோயில், வீரபத்திரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றும் உள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும் கல்வெட்டுக்களும் உள்ளன." இவை தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்பித்துள்ள வாழ்வியல் களஞ்சியம் முதல் தொகுதி தரும் செய்திகளாகும்.

இக்கோட்டையின் அரணாக வராக நதி விளங்கியது. ஆனால் இன்று அது வற்றிய ஓடையாகச் சாக்கடை நீர் செல்லும் கால்வாயாகத் திகழ்கிறது.

இந்தக் "கோட்டைப் பகுதியில் ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், உரோமபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், உடைவாள்கள், பழமைமிக்க எலும்புத் துண்டுகள், பலவகையான நாணயங்கள், அகல்விளக்குகள், மட்பாண்டங்கள், மண்ணில் சுடப்பட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்றும் காணக் கிடக்கின்றன" என்று இக்கோட்டையின் வரலாற்று மூலப்பொருள்களைப் பற்றியும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியம் விளக்குகிறது.

இன்றைய நிலையில் அந்த மண்கோட்டை ஆங்காங்கே சிற்சில மண்திட்டுக்களாகச் சிதறிவிட்டாலும் அப்பகுதி முழுவதும் புதிய குடியிருப்புக்கள் தோன்றிவிட்டாலும், புதிய சிறுசிறு கோயில்கள் உருவாக்கப்பட்டு விட்டாலும் மக்கள் இந்த இடத்தைக் கோட்டை என்றே அழைத்து அதனது இழந்த பெருமையை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பத்திரகாளியம்மன் கோயில், செல்லீஸ்வரர் திருக்கோயில், அழகரசப் பெருமாள் கோயில் என்ற மூன்றும் இக்கோட்டையின் உட்புறத்தே அருகருகே உள்ளன. காவல் தெய்வமாகிய முத்து முனியப்பனுக்கும் அம்மன் கோயிலை ஒட்டிக் கிழபுறம் கோயில் அமைந்துள்ளது.

இங்கு எழுநதருளியுள்ள ஈசன் திருநாமம் செல்லீஸ்வரா என்பதாம். இறைவி செல்லீஸ்வரி என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் கன்னடக் கல்வெட்டுக்கள் இருப்பது ஏற்கெனவே சுட்டப்பட்டது. இத்திருநாமங்கள் இந்த நகரை ஆண்ட செல்வக் கடுங்கோ வாழியாதனின் பெயரோடு - இலங்குபவை என்பர். அவ்வாறாக இக்கோயில் - 300 ஆண்டுக் காலப் பழமை கொண்டதாயினும், கோயில் தோற்றம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகும். இங்கே உள்ள சிவலிங்கம் பராசர முனிவரால் நிறுவப்பட்டது என்ற புராணக் கருத்தும் சிந்திக்கத்தக்கது.

பத்திரகாளியம்மன் கோயில் இப்பகுதியில் செல்வாக்குப் பெற்ற ஒன்றாகும். இக்கோயில் திருவிழாவில் 'பூமிதித்தல்' என்னும் 'குண்டம் இறங்குதல்' விழா சிறப்பானதாகும். அறுபது அடி நீளம் கொண்ட இக்குண்டம் முதலில் எருமைக் கடா பலியிட்டுத் தொடங்கப்பட்டது. ஆனால் தற்போது பலியிடும் வழக்கம் இல்லை. இக்குண்ட நிகழ்ச்சியைக் கேலி செய்தும், அம்மனின் சக்தியை நிரூபிக்கச் சொல்லியும் ஓர் ஆங்கிலேயன் குண்டத்தில் அரக்கைக் கொட்டி அந்த அரக்குக் குழம்பு கொதிக்கிற போது அதில் நடக்கக் கட்டளையிட்டான் என்றும், குண்டம் மிதிக்கும் வீர மக்கள் (குண்டம் இறங்குவோருக்குப் பெயர்) தடுமாறிய வேளையில் ஒரு பல்லி வாக்குச் சொல்லி அக்குண்டத்தில 60 அடியும் ஊர்ந்து சென்றது என்றும் அதன் பின்னர் வீர மக்கள் வழக்கம் போல் குண்டம் இறங்கினர் என்றும், இதன்பின் அந்த ஆங்கிலேயனுக்குக் கண் பார்வை போய்விட்டது என்றும் அவன் மனம் திருந்தி அம்மனை வேண்டப் பார்வை மீண்டும் கிடைத்தது என்றும் இத்தெய்வ அருள் பற்றி ஒரு செவிவழிச் செய்தி அனைவராலும் சொல்லப்படுகிறது.

இவ்வம்மன் கோயில் முன்புறத்தில் ஐந்து வீரர்கள் தங்கள் தலையை வாளால் அரிந்து காளிக்குக் காணிக்கையாக்கும் அற்புதமான சிற்பங்கள் உள்ளன. 'நவகண்டம்' கொடுத்தல் என்று அழைக்கப்படும் இந்த வகைக் கற்சிலைகள் கொங்கு நாட்டில் அரியனவாகும். எனவே இந்த அந்தியூர்க் கற்சிலைகள் தனிச் சிறப்புடையனவாகக் கொள்ளப் படுகின்றன. இவை போன்று கணைக்கால் இரும்பொறையின் சிற்பமும், திருமலை நாயக்கரின் கற்சிலைகளும் இக்கோயிலில் அமைந்து வரலாறு கூறுகின்றன.

இக்கோயிலுக்குக் காணி உரிமை இநதப் பகுதியை ஆண்டு வந்த வடகரையாளருக்கு மட்டும் உண்டு. இவ்வடைகரையாளாகள் கொஙகு வோளாளர் குடிகளில் தனியிடம் பெறும் ஒரு கூட்டததவராவர்

## கல்வெட்டுச் செய்திகள்

அந்தியூர்க் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் சில பல செய்திகள் பரவிக் கிடக்கின்றன. சிவன் கோயிலில் கொங்குப் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ராஜகேசரிவர்மன் என்ற வீரபாண்டித் தேவர் (கி.பி. 1265-1285) காலக் கல்வெட்டுக்கள் இரண்டு காணப்படுகின்றன. மேற்குச் சுவர்க் கல்வெட்டானது வடகரை நாட்டுக் கம்மாளருக்கு வீட்டுக்குக் கதவு, ஜன்னல் வைத்துக் கொள்ளவும் விழாக் கொண்டாடவும் நல்ல கெட்ட காரியஙகளுக்கு இரட்டைச் சஙகு ஊதுதல், பறையடித்துக் கொள்ளுதல் ஆகிய உரிமைகள் தந்ததையும் பேசுகிறது.

வடக்குச் சுவர்க் கல்வெட்டு இம்மன்னரின் 11 ஆவது ஆட்சி யாண்டைச் சேர்ந்தது. இது அந்தியூர் நாட்டுக் காமிண்டனிடம் 10 பணம் பெற்றுக் கொண்டு இரண்டு சிவப்பிராமணர் செல்லீசுவரம் உடைய நாயனார் திருக்கோயிலுக்கு விளக்கு ஏற்றிவைக்க ஒப்புதல் தந்ததைச் சொல்லுகிறது.

மூன்றாம் கல்வெட்டு உம்மத்தூர் வம்சம் மகாமண்டலேசுவர வீரநஞ்சராய உடையார் (கி.பி. 1489 - 1511) காலத்தைச் சார்ந்தது. இதில் ஊர்ப்பேராளர்கள் ஐந்து பேர் சேர்ந்து மேற்படி கோயிலுக்கு ஒரு பூமியைத் தானமாகக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாகப் பொன்னாங்கட்டியார் என்பவருக்குச் சமாதியமைக்கச் சிறு இடத்தைப் பெற்றது பற்றிய செய்தியைக் கூறுகிறது. இப்பெரியவா பெயர் பொன்நாண்கட்டி வேங்கடநாதன் என்பதாம். இவர் இறந்ததைக் கல்வெட்டு 'யோகம் ஆனார்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றது. சமாதி அடைந்த ஊர்ப் பொதுமக்களுடன் பாசறை வேட்டுவரில் குறும்பன் என்பவனும் ஒருவன் என்பதும் ஒரு செய்தியாகும்.

இக்கல்வெட்டுக்கள் சாதி வேற்றுமைகள் தளர்ந்து மனிதநேயம் மலர்கின்ற காலச் சூழலை எதிரொலிக்கின்ற தன்மையினைக் காட்டுகின்றன.

## இலக்கியங்கள்

சஙக இலககியஙகளில காணபபடும அநதி இளஙகீரனாா (அநதில இளஙகீரனாா) அநதி கநதரததனாா எனற இருவரையும இநத ஊரைச சோநத புலவாகள எனபா செனற நூறறாணடில வாழநத காஜனைக கவிராயா எனற புலவா வடபதரகாளியமமன ஊஞசல எனற பிரபநதததைப படைததுளளாா

அநதியூருககு வடககான பாகூா மலை பறமபு மலையேயாம எனறும இஙகு தான பாரியும கபிலரும வாழநதனா எனறும பறமபு பறறிய வருணனைப பகுதிகள பாகூா மலைககே பொருநதும எனறும சில ஆயவாளாகள கருததுரைககினறனா இதனை ஏறபின கபிலரையும அநதியூாப பகுதியோடு சமபநதபபடுதத முடியும

தொனமைமிகக இவவூரின வரலாறறுச செயதிகளுள சிலவே ாணடுக கூறபபடடுளளன இபபகுதி மககளின சமுதாய வரலாறு தனியாக ஆயபபடின பணபாடடுச செயதிகள பலவும கிடைககும வாயபபுகள உளளன

### சான்றாதாரங்கள்


1 ம இராசசேகர தஙகமணி அநதியூா வாழவியல களஞசியம தஞசைத தமிழப பலகலைக கழகம 1986 ப 341

2 த ப சுபபிரமணியம தவிடடுபபாளையம காணியாளா பததிரகாளியமமன திருககோயில அநதியூா தகவலகள பல தநதவா)


* * *

## 6 புலமை போறறிய புரவலாகள

உணமை நிகழவுகளைக கால அடிபபடையில பதிவு செயவது எனபது வரலாறறுச செயதியாகும ஆனால தமிழகததைப பொறுததமடடில இவவுணாவு - வரலாறறைப பொதிய வைதது எழுதுவது எனபது அணுவளவுகூட இலலாமல போயவிடடதால தொனமைககாலததின சரியான வரலாறறினை எழுத இயலா இடாபபாடு நிலைபெறறுவிடடது மனனாகளின காலம - புலவாகளின காலம - அவாகள முறையே நாடடாணட காலம பாடிய காலம எனபன எலலாம இனறும இனனும ஆராயசசிககுரிய பொருளகளாகவே போயவிடடன எனவே வாத - பிரதிவாதஙகள பலகிப பெருகிய நிலையில கால ஆயவு மொழியியல - கலவெடடியல போனற அடிததளஙகளில நிறுவபபடடும நிறுவபபடாமலும ஓயாத ஆயவுச சணடைகளாகத தமிழ உலகில தொடாகதையாக நிலவுவதைக காண முடிகிறது

சேர சோழ பாணடியா எனற பரநதுபடட நிலபபரபபாணட மூவேநதாதம - வலலரசாதம வரலாறுகளே முறைபபடுததப படவிலலை எனபது தமிழக அவல நிலை எனறால குறுநில மனனாகள வேளிாகள இவாகளைப பறறிய வரலாறறைக கூறவேணடியது தேவையறறதாகவே உளளது

இவர்தம் ஆட்சி பற்றிய கருத்துக்கள் முழுமையாகத் தெரியா விடினும் அறிவுக்கும் ஆட்சிக்கும் உள்ள தொடர்பு பற்றிய விழுமியக் கூற்றினை அய்யமற்ற - அணுவளவும் அய்யமற்ற நிலையில் இவர்கள் பேணிக்காத்துள்ளனர். அதனொடு இத்தொடர்பு உலகத்தின் பிற இன மக்களுக்கு வழி காட்டும் நெறியாகச் சிறப்புப் பெறுகிறது என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

எந்த நாட்டில் அறிவுத்துறையைச் சார்ந்தவர்கள் சிறப்பிடம் பெறுகின்றார்களோ அந்த நாடு உலகின் தலைசிறந்த சீர்மைகளைப் பெறும் என்பது மறுக்கமுடியாத உண்மை. நாட்டணி கூற வந்த வள்ளுவர் "தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும்" என்று தக்காரைச் சிறப்பிக்கிறார். குடியாட்சிக்காலத்தில் கல்வி பரவலாக்கப்பட்டு அனைவருக்கும் பல்துறைப் படிப்புக்களையும் படிக்கும் வாய்ப்பு உள்ளபோது இந்தத் தத்துவம் எளிதாகப் பெருமை பெற்று விடுதல் என்பது இயல்பே.

ஆனால் போக்குவரத்தும், எளிதான தொடர்பு, மற்றும் சிறுசிறு தீவுகளாக மக்கள் இனக்குழு வாழ்க்கை நடத்திய காலத்தில் முறையாகப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் இல்லாத சூழலில் அறிவுக்கு ஆட்சியாளர்கள் பெருமதிப்புக் கொடுத்து நாடு புரந்தனர். இந்தச் சங்க கால அரசியலமைப்பை நோக்கும்போது நமக்கு வியப்புத் தோன்றாமல் இருக்கமுடியாது.

நீதித்துறையும் நிர்வாகத்துறையும் **(Judiciary, Administration)** இன்று தனித்தனியாக இருக்கும் காலகட்டத்தில் ஆட்சியாளர்கள் தவறு செய்யின் ஒரு சாதாரணக் குடிமகன்கூட நீதிமன்றத்தில் முறையிட்டு நீதிபெறக் களன்கள் உள்ளன. ஆனால் ஆட்சியதிகாரமும், முறை வழங்கும் உரிமையும் அரசன் என்ற ஒருவனிடம் இருந்த கால கட்டத்தில் முறை பிறழ்வுக்கு வாய்ப்புக்கள் நிறையவே இருக்கச் செய்யும். கோவலனுக்குத் தண்டனை அளித்த நெடுஞ்செழியன் இந்த முறை பிறழ்வுக்குச் சான்றாகின்றான்.

அப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் அறிவு நலம் சான்ற புலவர்கள் நீதி, நிர்வாகம் இவற்றின் இறையாண்மை பேணும் செயல்களைச் செய்துள்ளனர். வரிவசூல் செய்வதில் அப்போதைய

கால நிலைமை பேணப்படல்வேண்டும் என்று பொருளாதார மேதையாக ஒரு புலவன் மன்னனுக்கு வழிகாட்டுகிறான். எதிரியின் குழந்தைகளைக் கொல்ல நினைத்த மன்னனுக்கு நன்னெறிகாட்டிப் பழியிலிருந்து காப்பாற்றிய சாணக்கியனாகக் கோவூர் கிழார் பெருமை பெறுகிறார். சொந்த வாழ்வில் - கணவன், மனைவி, அரசன் அரசி வாழ்வில் தலையிட்டுச் சேர்த்து வைக்கும் உளவியல் ஆசான்களாகப் புலவர்கள் பெருமை பெறுகின்றனர். (கபிலர், அரிசில்கிழார், பெருங் குன்றூர்க் கிழார்.) இப்படியாக அரசு நிறுவனத்தில் தவறுகள் நடக்கும் காலங்களில் துணிந்து நேர்மை கூறிய புலவர்களின் வரலாறு தமிழகத்தின் தனிச்சொத்தாக இலக்கியங்களில் பொறிக்கப் பட்டுள்ளது. இந்தச் சிறப்பான சூழல் நிலவியதால்தான்,

> *''ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது*
> *அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்.''* – புறம்
>
> *''கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால்... அவன் கண்படுமே''*
> – புறம்

என்ற அருமையான கூற்றுக்கள் நாட்டில் நிலைநிறுத்தப்பட்டன.

திருமகளும், கலைமகளும் இணைந்திருக்க மாட்டார்கள் என்ற பொதுக் கூற்றிற்கு ஒப்பப் புலவர்கள் - அறிவுடையாளர்கள் வறுமையால் வாடித் திரிந்ததை நம் வரலாறு காட்டுகிறது. பழுமரம் தேடும் பறவை போன்று இந்த அறிவுக்கூட்டம் வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கை கொண்டு புரவலரை நாடிச் சென்று வாழ்க்கையை நடத்தியுள்ளது என்பது சங்க இலக்கியம் காட்டும் புலவர் வாழ்க்கையாக இருந்துள்ளது.

ஆனாலும் வறுமையில் செம்மை என்பதும், பெற்ற பொருளைப் பிறர்க்கென வழங்கியும், தொடர்ந்து ஆற்றுப்படை பாடிப் பொருள் பெறுவதும் புலவர்தம் வாழ்க்கையாக இருந்துள்ளது. இத்தகைய வாழ்க்கையும், வறுமையும் தந்த அறிவுச் சிந்தனைகளே சங்கப் புலவர் பாடல்களாக மலிந்துள்ளன.

வறுமைப் புலவனின் அறிவு வள்ளன்மைக்கு முடிசாய்த்த முடி வேந்தரும், குறுநிலமன்னரும் வேளிரும் தமிழகத்தின் பண்பாட்டைக் காட்டும் செல்வர்களாவர். புலவனுக்குக் கவரி வீசிய காவலனின்

தன்மையினை மோசிகீரனார், ''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' (புறம்)என்பதாகப் பாடுகிறார். தமிழ் - தமிழ்ப்புலவர்கள் அரசுத்தலைவரால் பெற்ற பெருமதிப்பை இது காட்டும்.

தாய்மொழியாம் தமிழ்மொழியை உயிரினும் மேலாகக் கருதிய பெருமை தமிழ்ப் பரம்பரைக்குண்டு. சங்கம் வைத்தாண்ட பாண்டியர்கள் - தமிழ்ப் புலவர்களைப் பேணிய பிறநில மன்னர்கள் - வேளிர்கள் - குறுநில மன்னர்கள் ஆகியோரும் மொழி நலம் - வளம் காத்த சான்றோர்களே. இவர்களின் மேலாக மொழிக்கு என உயிரை விட்ட தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் ''நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்'' என்பதில் நிலைபெற்றுப் போற்றப்படுகிறான்.

தமிழுக்கு மரியாதை, தமிழ்ப்புலவர்களுக்குச் சிறப்புச் செய்தல் என்பதில் கொங்குப் புரவலர்களும் சளைத்தவர்கள் அல்லர். அவர்தம் கொடை மடம் யாரொருவர்க்கும் சளைத்ததுமன்று ; குறைந்ததுமன்று. மானாவாரிப் பூமிக்குரிய கொடையாளிகள் தமிழ்ப்பற்றால் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பேணிய செயல் கொங்குமண்டலப் பெருமை காட்டுவதாக உள்ளது.

கடையெழு வள்ளல்கள் என அழைக்கப்படும் அனைவரும் கொங்குநாட்டின் புரவலர் பரம்பரையினரே. இன்றைய பழனிப் பகுதியில் ஆண்டவன் பேகன். இன்றைய உடுமலை வட்டம் திருமூர்த்தி மலையாகிய முதிரமலையில் இருந்தவன் குமணன். முதல் ஏழு வள்ளல்களில் ஒருவன் தருமபுரி மாவட்ட அதமன்கோட்டையில் இருந்து ஔவைக்கு நெல்லிக் கனி தந்த அதியமான். கொல்லிமலை ஓரி, சேலம் மாவட்டக் கொல்லிமலைக் கொடைஞன். மலையமான் திருமுடிக்காரி காரிமங்கலக் கொடையாளி, பாரி, அந்தியூர்ப்பக்கமுள்ள பர்கூர் மலைப்பகுதியிலோ அல்லது கோபிசெட்டிப்பாளையத்திற்கு அணித்தான பாரியூரிலோ இருந்தவனாதல் வேண்டும். ஆய் அண்டிரன் பழனிமலைப் பக்கமுள்ள ஆய்குடிக்குரியவனாதல் வேண்டும்.

இவர்கள் போக பிற்பட்ட காலங்களில் கொங்குநாட்டு வள்ளல் களாக இருந்து தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் போற்றிப் புகழ்ந்த வள்ளல்கள் பலரைக் கொங்குமண்டல சதகம் போற்றிப்புகழ்கிறது.

இந்தப் புரவலர்களின் சிறப்பும் பெருமையும் மற்றவர்கள்

போன்று பெரிதாகப் பாடப்படவும் இல்லை ; அல்லது வெளிச்ச மிட்டுக் காட்டப்படவுமில்லை. ஆனாலும் இவர்தம் பண்புநலன்கள் எந்தவொரு மிகச் சிறந்த கொடையாளியின் சிறப்புக்கும் எள்ளளவும் குறைந்தன அல்ல என்பதை அவர்தம் செயல்பாடுகள் காட்டி நிற்கின்றன.

## ஔவைக்குப் பொன் இலையில் அன்னம்

ஔவையார் ஒரு சமயம் கொங்குநாட்டுக் குன்றத்தூர்க்கூற்றம் (சங்ககிரிப் பகுதி) ஐவேலி என்ற ஊரில் உள்ள அசதி என்பார் வீட்டில் தங்கினார். வந்தவர் ஔவைப் பிராட்டி என்றறிந்த அந்த இடையர் குலத்தலைவன் அவருக்குப் பொ்ன் இலை பரப்பி அன்னம் பாலித்தான். இதனால் அவன்மீது கோவைப் பிரபந்தம் ஒன்றை ஔவையார் பாடினார். அதற்கு அசதிக்கோவை என்பது பெயர். இதனைத்,

*"தெய்விகமான தமிழ்ப்புலவோர்கள் தினமும் உளம் கொள்*
*பொய் தீர் உரை எம் பிராட்டியார் ஔவை புனைந்து புகழ்*
*செய்கோவை ஏற்ற திறலோன் அசதி செழித்து வளர்*
*மை தாழ் பொழில் திகழ் ஐவேலியும் கொங்கு மண்டலமே"*

-- கொங்கு மண்டல சதகம் : 45

என்று பாடல் கூறுகிறது.

இந்த அசதி, சேனைத் தலைமை பூண்ட படைத்தலைவன் என்பது ஔவை பாடிய அசதிக் கோவையால் தெரிய வருகிறது. இவன் இடையர்குலம் சார்ந்தவன். இவனுடைய ஐவேலிக் கிராமம் இன்று ஊர் நத்தமாகப் போய்விட்டது. இருப்பினும் இன்றைக்கும் அவ்வூரின்கண் இடையர் குலம் சேர்ந்த 200 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆனால் அந்தப் பகுதி இன்று இடையர்பட்டி என்று பெயர் பெற்று விட்டது.

## சவுக்கடிக்கு ஆளான சர்க்கரை

காரையூரில் வாழ்ந்து வந்த ஒரு தலைவர் காரையூர்ச் சர்க்கரை. இவரது முன்னோர் தமிழ் நலம் பேணும் புலவர்களைப் போற்றிப் புரந்தவர்கள். இதனைக் கேள்விப்பட்ட ஒரு புலவர் காரையூர் வந்து சர்க்கரையார் இல்லத்தில் தங்கி விருந்துண்டார். விருந்து முடிந்தபின்

சர்க்கரையார் இல்லத்தில் தங்கி விருந்துண்டார். விருந்து முடிந்தபின் பொன்தட்டில் நல்லாடை முதலியன வைத்து இருகையிலும் ஏந்தி அப்புலவர்க்குக் கொடுத்தார் இவ்வள்ளல். அதைக் கண்ட அப்புலவர் அருகிலிருந்த குதிரைச் சவுக்கை எடுத்துப் பலபடியாக அவரைத் தாக்கினார். அடிபட்ட அப்பெருமகன் புலவர் கையைப் பிடித்து "ஐயா! பிழை ஏதும் நான் செய்யவில்லையே" என்று கெஞ்சினார். அதற்குப் புலவர், "நும் முன்னோர் பெருமை தெரிந்து ஈண்டுவந்தேனேயன்றிப் பொருள் நச்சியன்று. பணம் பெற வந்தவன் என நினைத்தீரோ?" என வெகுட்சி மொழி கூறினர். அதற்குச் சர்க்கரை, "ஐயா! முக்கிய வேலையாக நான் முன்னமே சென்றிருக்க வேண்டும். தங்கள் வருகையால் நான் இங்கு இருக்கிறேன். நான் திரும்பி வரக் காலம் ஆகும் என்பதால் இவ்வரிசைகளைச் செய்தேன் ; மன்னியுங்கள்" எனப் பதில் உரைத்தான். அது கேட்ட புலவர், 'முன்னோர் பெருமை முழுமையாகப் பொருந்தியுள்ள தங்களுக்கு என் சவுக்கடியும் புகழ்தரும்' எனக் கூறிப் பெருமைப்படுத்தினார்.

கொடை கொடுத்தலில் காலந்தாழ்த்தாமலும் தமிழ்ப்புலவரைப் புரப்பதில் பெரு நாகரிகம் கொண்டவர்களாகவும் இருந்த கொங்கு வள்ளல்களின் பெருமைக்கு இச்சர்க்கரை சான்றாகிறார். இவரது புகழைக் கொங்குமண்டல சதகம் கூறுகிறது. ஆனால் இப்புலவர் பெயர் தெரியுமாறு இல்லை.

## கொதிக்கும் நெய்யில் கைவிட்டுச் சத்தியம்

ஆனூர்ச் சர்க்கரை என்பவர் இல்லம் தேடி ஏகாலியர் குலம் சார்ந்த வீரபத்திரன் எனும் புலவர் வந்தார். புலவர் வருகைக்கு மகிழ்ந்த அவர் வரவேற்பு நல்கி இருப்பிடம் தந்தார். பின் தன் வீட்டினுள் சென்று அவருக்கு உணவு பரிமாற ஏற்பாடு செய்ய முனைந்தார். இதற்கிடையில் மனைக்குள் இருந்து வந்தவன் ஒருவன் "ஐயா! தங்களுக்கு அடிசில் படைக்கச் சற்றுக் காலதாமதமாகும்" என்றான். வீரபத்திரர் தன்னைப்பற்றி உள்ளே ஏதோ இழிவுரை நடக்கின்ற தால்தான் இவன் இங்ஙனம் கூறுகின்றான் என வருந்தி வெளியில் புறப்பட்டுச் சென்றுவிட்டார், வந்த சர்க்கரையார் தொலைவில் புலவர் நடந்து செல்வதைப்பார்த்து ஓடோடிச் சென்று காரணம் வினவித் தான்

அப்படிச் செய்யவில்லை என நிரூபிக்கக் கொதிக்கும் நெய்யில் கையை விட்டுச் சத்தியம் செய்தார். அதனாலும் அமைதியடையாத நிலையில் புலவர் "உம் செயல் நடுவுநிலையானது எனில் என் எச்சில் வாயைக் கழுவி விடும்" என்றார். சர்க்கரையார் மகிழ்ந்து எச்சில் கையையும் எச்சில் வாயையும் கழுவி மகிழ்ந்தார்.

இதற்கு மகிழ்ந்த புலவர் அவர்மீது ஒரு பிரபந்தம் இயற்றி அரங்கேற்றி அவர் பெருமை உலகறியச் செய்தார்.

கொங்குப் புரவலர்கள் உயர்நிலை, தாழ்நிலை கருதாது தமிழ்நிலை மட்டுமே கருதுகின்றவர்கள் என்பதற்கு இந்த வரலாறு எடுத்துக்காட்டாக அமைகிறது.

## புரவலரை விற்றல்

ஆனூர்க் காமிண்டன் என்ற வள்ளல் சிவ வழிபாட்டிற்காகத் தலயாத்திரை மேற்கொண்டிருந்தார். இடையில் ஒரு புலவர் அவரைக் கண்டு தம் கடன் அடைக்கப் பொருள்வேண்டி நின்றார். ஊர் திரும்பியதும் அது கொடுப்பதாகப் புரவலர் கூறினார். ஆனால் உரிய காலத்தில் அவர் ஊர் திரும்பாமை கண்டு புலவர் வெகுண்டு தலயாத்திரையில் கரூரில் இருக்கும் அவரைக் கண்டார். கண்டு வெகுண்டு அவரை மடிபிடித்து இழுத்து உம்மை இக்கருவூர்க் கடைத்தெருவில் விற்பேன் என்று உறுதிபட நின்றார். அவருடைய உறுதிப்பாட்டுக்கு மகிழ்ந்த வள்ளல் அவரது கடன் நீங்கப் பொன்னும் பொருளும் கொடுத்தாராம்.

*"ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃது ஒருவன்*
*விற்றுக்கோள் தக்கது உடைத்து"*

என்ற குறளினை இந்த நிகழ்வோடு இணைத்துக்காட்டலாம்.

*"கொடையில் பெரியோய்! உடனே எனக்குக் கொடாமையினால்*
*கடையில் பெற நினை விற்று என் கலியைக் கழிப்பன்*
*என மடியைப் பிடித்து இழுத்தே விலை கூறிய வாணன்*
*மிடி வடியப் பொருள் தந்த காமிண்டனும் கொங்கு மண்டலமே"*

(கொங்கு மண்டலச் சதகம் : 67)

என்கிறது சதகம்.

இதே செய்தியை 'நல்லதம்பி காதல் என்ற பிரபந்தமும் வெகுவாகப் புகழ்கிறது. இந்தப்பாடலில் வரும் 'காமிண்டன்' என்பது பட்டப்பெயராகும். இப்பட்டப்பெயர் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலும் பண்டு வழங்கி வந்துள்ளது என்பதைச் சாசனங்கள் காட்டும். கொங்குப் பகுதியில் 'காமிண்டன்' என்ற பட்டப்பெயர் பரவலாக வழங்கப்படுவது கண்கூடு.

## புலவனின் பல்லக்குச் சுமந்த உலகுடையான்

குறும்புநாடு என்ற கொங்குப் பகுதி இன்றைய விஜயமங்கலப் பகுதியாகும். அந்த ஊரில் வாழ்ந்த படைத்தலைவன் வேளாளர் குடியைச் சார்ந்த உலகுடையான் என்பவன். அவன் தன்மீது அகத்துறைக் கோவை பாடிய புலவர்க்குப் பரிசளித்ததோடு நில்லாது அவர் ஏறிய பல்லக்கையும் சுமந்து மகிழ்ந்தான் என்பது வரலாறு. கொங்கு மண்டல சதகம் 82 ஆம் பாடலால் இது தெரியவருகிறது. ஆனால் இதில் கூறப்பட்ட புலவர் பெயரோ அவர் பாடிய பிரபந்தமோ கிடைக்கவில்லை. இருப்பினும் இவ்வள்ளல் பெயர் அவ்வூர் நாகேந்திர சுவாமி கோயில் புறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ்வள்ளல் படைக்குத் தலைமை தாங்கும் பதவி கொண்டவர். ஆனாலும் அப்பதவியைவிடத் தமிழ்ப் புலவர்க்குப் பல்லக்குச் சுமப்பது பேரின்பம் என நினைத்தது இவர்களின் தமிழ்ப் பற்றைக் காட்டும்.

## தாலியைத் தானமாக்கிய சம்பந்தர்

மதுரைத் திருமலை நாயக்கருக்குக் கப்பம் கட்டாததால் அவர் தளபதி இராமப்பய்யர் வேளிர்கள் பலரையும் சங்ககிரிக் கோட்டையில் சிறை வைத்தார். அவருள் ஆனூர்ச் சம்பந்தச் சர்க்கரையும் ஒருவர். ஆனூர்க்குப் பொருள்வேண்டிச் சென்ற புலவர் அங்கிருந்து சிறையிலிருக்கும் சர்க்கரையைக் கண்டு பொருள்வேண்டி நின்றார். அடிமையாய்ச் சிறைப்பட்டிருக்கும் தன் நிலைக்கு வருந்திய அவர் தன்னைக் காண வந்து சிறைப்புறத்தே இருந்த மனைவியின் திருமாங்கல்யத்தைக் கொடுக்கச் சொல்லி அதனை வாங்கிப் புலவர்க்குக் கொடுத்தார். இந்த அரும் பெரும் செயல் கண்ட புலவன் தளபதியைக் கண்டு செய்தியைச் சொன்னார். தளபதி இராமப்பய்யர்

இந்தக் கொடைகண்டு மகிழ்ந்து அவரை விடுதலை செய்ததோடு அவர் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து வேளிர்களையும் விடுதலை செய்தான். இந்தச் சம்பவம் கி.பி.1623 முதல் 1699 ஆம் ஆண்டு வரை இருந்த காலகட்டத்தைச் சார்ந்தது.

*''கொங்கில் ராமப்பயன் அதிகாரக் குரூரத்தினால்*
*கங்குல் இராப்பகல் சர்வ சங்காரம் செய்காலத்திலே*
*சிங்கநல் சம்பந்தச் சர்க்கரை தேவி திருக்கழுத்தின்*
*மாங்கல்யம் தனைத் தந்தான் தமிழ்க்கவி வாணருக்கே''*

என்ற ஒரு தனிப்பாடல் இதனைக் காட்டுகிறது. கொங்கு மண்டல சதகமும் இச்செயலைக் கூறுகிறது.

தமிழுக்கு முன் தாலி பெரிதன்று என நினைத்த மொழிப் பற்றுள்ளம் இந்த வரலாற்றில் பொதிந்துள்ளது.

## தாய் முதுகேறிய புலவரைச் சுமக்கச் சொன்னது

தொண்டை நாட்டுச் செங்குன்றை என்ற ஊரில் வாழ்ந்த வள்ளல் எல்லப்பன் என்பவர். இவரிடம் கொங்குப் புலவர் பரிசில் பெறச் செல்ல, பரிசில் தரும்போது இடதுகை நீட்டி அப்பொருளை வாங்கினார் புலவர். அப்போது இந்த அநாகரிகச் செயலை வள்ளல் சுட்டிக்காட்ட அதற்குப் புலவர், ''கொங்குச் சர்க்கரையார் கொடை பெற்றயாம் அவருக்கு நீட்டிய வலக்கையைப் பிறர்க்கு நீட்டோம்'' என்றார். எல்லப்பர் அந்தச் சர்க்கரை வள்ளலின் உண்மையறியத் தமது ஏவலர்களைக் கொங்கு நாட்டு ஆனூருக்கு அனுப்பினார். வந்த ஏவலர்கள் அவரது தோட்டத்தில் பசுமை பூத்துக் குலுங்கி நிற்கும் செடி கொடிகளை அழித்தனர். அது கேட்ட சர்க்கரையார் அவர்களை அழைத்து ''மென்மையான இக்கைகள் வன்தொழில் செய்யலாமா? வேண்டுமாயின் பிற ஏவலர்கள் கொண்டு உங்கள் விருப்பை நிறைவேற்றுவேன்'' என்றார். அதன் பின்னர் அவர் உணவிட்டு உபசரிக்கும் வேளையில், வந்த புலவர்களுள் ஒருவன் அவர்களுக்கு உணவு பரிமாறும் சர்க்கரையின் அன்னையின் முதுகின் மேல் ஏறி அமர்ந்தார். அத்தாய் தன் மகன் முகம் பார்க்க, அவரோ, ''அன்னையே! என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்ற தாங்கள் இத்தமிழ்ப் புலவரைச் சற்று நேரம் சுமக்க முடியாதோ?'' என்று கூறினார். புலவர் கீழிறங்கி அவர் செயல் புகழ்ந்து பலபடியாய்ப் பராட்டினார். பின் தொண்டை

நாடு சென்று எல்லப்பனுக்கு நடந்தது கூறினர். இந்த அருஞ்செயலை- தாயைக் காட்டிலும் தமிழ்ப்புலவன் மேல் என்று நிலைநாட்டிய செயலை,

*"திருந்து புகழ் பெறும் ஆனூரில் சர்க்கரை செந்தமிழோன்*
*வருத்தமுடன் அவனை மேல்ஏறத் தாய் வெகுளாமல் எனைப்*
*பொருத்த முடன் பத்து மாதம் சுமந்து பொறை உயிர்த்தாய்*
*வருத்தம் இதில் என்ன என்றான் அவன் கொங்கு மண்டலமே"*

(கொங்கு மண்டலச் சதகம் : 51)

என்று கார்மேகக் கவிஞர் வரலாறாக்குகிறார்.

## புலித்தூறில் புகுந்து உயிர்விடத் துடித்தவர்

காஞ்சிக் கூவல் நாட்டுப் (கோபி செட்டிபாளையம் பகுதி) பாரியூரில் வாழ்ந்தவர் கொங்கு வேளாளரில் கனவாள குலம் சார்ந்த செட்டிப்பிள்ளான் அப்பன் என்ற வடகரை வேளாளர். கொடுத்துக் கொடுத்து வறுமையுற்ற அவரைக் கண்டு புலவர் ஒருவர் பரிசில் பெற வந்தார். அவருக்கு 'இல்லை' என்று சொல்ல மனமில்லாமல் அவர் பக்கத்திலிருந்த புலித்தூறில் விழுந்து தன்னை மாய்த்துக்கொள்ள நினைத்து விழுந்தார். ஆனால் திருடிய பொருளைப் பகிர்ந்து கொண்டிருந்த கள்வர்கள் புலி வந்தது என அப்பெருஞ்செல்வத்தை அங்கு விட்டுச் சென்றனர். மனம் மகிழ்ந்த அவ்வள்ளல் அதனை எடுத்துப் புலவர்க்குக் கொடுத்து அவர் வறுமை தீர்த்தார். இச்செயலை,

*"கலியின் மெலிந்து புகல் கவிக்கு ஈயக் கையில் இன்மையால்*
*புலியின் நுழைபுக்குக் கள்வர்கள் பங்குப் பொருள் திரளை*
*மலிய எடுத்து அப்புலவனுக்கு ஈந்த வடகரையான்*
*வலியன் கனவாளன் செட்டிப் பிள்ளான் கொங்கு மண்டலமே"*

(கொங்கு மண்டலச் சதகம் : 98)

என்று கார்மேகக் கவி போற்றியுரைக்கிறார்.

இங்கு 'இல்லாமை' என்ற சொல் தமிழ்ப்புலவர்க்கு இல்லாமல் செய்ய தன்னை இல்லாமல் ஆக்கிக் கொள்ள முனைந்த ஒரு பெருங் கொடையுள்ளத்தைக் காணமுடிகிறது. தமிழ்ப்புலவர்க்கு முன்னர் தன்னுயிர் தூசு என்னும் இதயத்தின் இமயம் இங்கே எழுந்து நிற்கின்ற அருஞ் செயல் தெரிகிறது.

மொழிக்கென - புலவர்க்கென - அறிவுத்துறைக்கென அடிபடல், விற்றுத்தரல், கொதிக்கும் நெய்யில் கைவிட்டுச் சத்தியம் செய்தல்

தாயின் முதுகில் புலவன் ஏறினும் பொறுத்துக் கொள்ளச் சொலல், தன்னையே தரும் தானச் செயல் - இவை கொங்குக் கொடையாளிகள் தமிழ் போற்றிய வரலாறாகும்.

புலவர்கள் - தமிழ் அறிவாளிகள் என்ற நோக்கு அங்கிருந்ததே யன்றி அவர்தம் நாடு, சாதி, பொருளாதார நிலை என்பன இப்புரவலர்க்கு அறவே இல்லை.

கொங்கு மண்டலம் நிலப்பரப்பில் மானாவாரிப் பூமிதான். ஆனால், அஃது அறிவுடையவர்களைப்போற்றிய மனவளத்தில் வளநாடு என்பதில் அய்யமில்லை. இதற்கு மேற்கூறிய செய்திகள் கட்டியம் கூறுகின்றன.

* * *

# 7. கொங்கு நாட்டு ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்கள் நிலை

## முன்னுரை

நாட்டுப்புறப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையின் பிரதிபலிப்புகள். கல்வி நலம் சிறக்காத வெள்ளை மனதுடைய கொங்குக் கிராமப்புறங்களின் சமுதாயம் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் அவர்தம் கிராமப்பாடல்களில் பதிய வைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டுப் புறப்பாடல்களில் சிறந்தவை எனப்படுபவை தாலாட்டும் ஒப்பாரியும் ஆகும். தாலாட்டு மகிழ்வின் எல்லை எனில் ஒப்பாரி துயரின் உச்சம். வாழ்வின் தொடக்க நிலை தாலாட்டு; வாழ்வின் முடிவு ஒப்பாரி. இவை இரண்டும் பெண் குலத்தின் படைப்புகள். இவ்விரண்டு இடங்களிலும் உணர்வுகளின் சங்கமங்கள் சொல்லாகத் தோற்றம் கொளினும் ஒப்பாரியில் இருக்கும் சோகத்திற்கு எல்லை காணமுடியாது. இன்னும் சொன்னால் தாலாட்டில் கற்பனை வளம் மிகையாக இருக்கும். ஆனால் ஒப்பாரியில் உண்மை நிலை அப்படியே கவிதையாகிக் கண்ணீர் வடிக்கும். இந்த அடிப்படையில் கொங்கு நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் பெண்களின் நிலையைக் கண்டறிய முற்படுவது இக்கட்டுரையின் நோக்கம் எனலாம்.

'கையறுநிலை' எனச் சங்கப் பாடல்களும், இலக்கண நூல்களும் பேசும் துறையும்,[1] தொல்காப்பியர் அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன் நான்கனுள் ஒன்றான 'இழவும்'[2] ஒருவகையில் ஒப்பாரியை ஒத்தனவே. 'இழவு' என்பதற்கு,

*''தந்தையும் தாயும் முதலாகிய சுற்றத்தாரையும்,*
*இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் இழத்தல்''*[3]

என்று பேராசிரியர் உரை தருகிறார். இதனைப் பொதுமைப்படுத்துவது போல,

''பாதுகாப்பை இழந்தாலும், பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிப் பாடல்களில் சோகம் கொப்பளிக்கிறது''[4] என்கிறார் டாக்டர் சு.சக்திவேல்.

இன்றைய அறிவியல் விஞ்ஞான யுகத்தில் நாட்டுப் புறப்பண்பாடு மிக வேகமாக மாறிப் பழமையை இழந்து கொண்டுள்ளது. எனவே ஒப்பாரி பாடும் பெண்களும் தலைமுறைக்குத் தலைமுறை குறைந்து கொண்டே வருகின்றனர். மேலும் சோகம் என்பதைச் சொல்லித் தீர்த்துத் துன்பத்தை வாய் விட்டுப் புலம்பிப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற உளவியல் நிலையும் இன்றைக்கு நடைமுறையில் இல்லை. ஆனால் சென்ற தலைமுறை மற்றும் முந்திய தலைமுறைகளில் வாழ்ந்த பட்டிக்காட்டுப் பெண்களின் குமுறல்களாக வெளிவந்துள்ள அழுகைப் பாடல்கள் அவர்தம் சமுதாய நிலையை அப்பட்டமாகப் படம்பிடிப்பனவாக உள்ளன.

## பெண் பிறப்பின் கொடுமை

ஏட்டில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்களில் பெண்களின் நிலை பலவாறாகப் போற்றப்படுகின்றது. ''பெண்ணின் பெருந்தக்க யாவுள'' என்று வள்ளுவன் தொடங்கி ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' எனக் கவிமணி வரை பெண்களைப் பெருமையின் சிகரத்தில் ஏற்றாதவர்களில்லை. கூடவே இதிகாச, புராண, காப்பியங்களும் பெண்பிறப்பைப் புனிதப் பிறப்பாகவும் தெய்வத்தன்மை கொண்டதாகவும் புகழ்ந்துரைக்கின்றன. ஆனால் இவை உண்மையா? நடை முறை வாழ்வில் பெண்கள் இப்படியா சிறப்பிக்கப்படுகின்றனர்?

நடை முறை வாழ்வியலில் பெண்ணாகப் பிறத்தல் என்பது கொடுமையிலும் கொடுமை. இதைக்காட்டிலும் மண்ணாகவோ செடியாகவோ பிறந்திருக்கலாம். அவ்வளவு கொடுமையானது இப்பெண் பிறவி. கொங்குப் பெண்ணொருத்தி,

> "*மாரியம்மன் கோவிலண்டை மண்ணாப் பொறந்திருந்தா*
> *மாச மொரு பூசை வரும்-நான்*
> *பொண்ணாப் பொறந்து பெரும் பாவி ஆனேனே*" என்றும்
> "*சீத்தா பொறவியிலே செடியா முளைச்சிருந்தா*
> *செண்டு மல்லி பூத்திருந்தா........*
> *செல்லியம்மன் சந்நதிக்குச் செண்டுமல்லிப் பூ எடும்பா*"

என்றும் குமுறுகிறாள். இந்த வெறுப்புக்குரிய காரணத்தையும் அவளே கூறுகிறாள். பெண்களை அடிமைப்படுத்துவதுதான் சமுதாயத்தின் சட்டம் என்றும் இந்தக் கொடுமை பெண் செத்தால் மட்டுமே நீங்குவது என்றும் கூறுகிறாள். சமுதாயக் கட்டினையும், அடிமைத்தனத்தையும் எதிர்த்து நிற்க முடியாமல் வாழ்வை முடித்துக் கொள்வதே இந்தப் பாவப் பிறப்பிலிருந்து தப்பிக்க வழி என முடிவு கூறும்

> "*பெண்ணடிமைத் தீர்மானம் போய் முடிஞ்சாத் தீருமண்ணே*
> *சண்டாளி தீர்மானம் தலைமுடிஞ்சாத் தீருமண்ணே*"

என்ற வரிகள் பெண்பிறப்பின் துன்பத்தைக் காட்டுகின்றன.

## திருமணத்தில் உரிமையின்மை

பெண்ணாகப் பிறப்பது மட்டும் கொடுமையன்று; பெண்ணாக வாழ்ந்து வீழும் வரையில் அவள் துன்பங்களின் சுமைதாங்கி. உரிமையில்லாத அவள் அடுத்தவரின் அடிமை. தன்னுடைய வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் உயிர் நாடியான அடிப்படை உரிமைகூட அவளுக்கில்லை. இயல்பாக அவளுக்கு எழும் காதல் உணர்வுக்கும்கூட முடிவினைப் பெற்றோரோ அல்லது பிறரோ எடுக்கின்றனர். ஒரு பெண் தான் விரும்பியவனைத் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை; ஆனால் பெற்றோர்கள் தங்களுக்கு வேண்டிய மருமகனைத் தேர்வு செய்து கொள்ள முடியும்.

*''மாமன் மகனுக்கினு மச்சலியும் பொம்பொறந்தே*
*என்னைப் பெத்த அதிகாரி பண்ணுனது*
*மாமன் கிளைய விட்டு மறு கிளையா மாலையிட - என்னோட*
*மனச் சலிப்பும் கொள்ளையப்பா''*

என்று ஒருத்தி புலம்புவதில் சமுதாயக் கொடுமைதானே மேலோங்கி ஒலிக்கிறது! தாயும் தந்தையும் நேர்வழியில் செல்லாது குறுக்கு வழியில் போனதால் ஒரு பெண்ணின் உணர்வுகள் மட்டும் நசுக்கப்படவில்லை; அவளது வாழ்க்கையும் பாழாய்ப் போனது.

*''கோடி சனமிருக்கக் கொத்தோட பூவிருக்க*
*கையேனும் அம்மாளும் (கையேன் : அய்யன்)*
*குறுக்கே தடம் போட்டுக் குயிலாலும் மாலையிட''*

அவள் புகுந்த வீடு செல்கிறாள். ஆனால் அங்கே மனம் இணையாத மணம் ஆனதால் 'அந்நாடும் போர்க்களம்'; காரணம் ''மட்டி மனுசங்கிட்டே, மறுபுத்திக்காரன் கிட்டே, ஈன மனுசன் கிட்டே'' அவளாலே எப்படி வாழ முடியும்?'

ஒரு நிலையில், இப்படிப்பட்ட திருமணத்தையாவது தகப்பன் நடத்தி வைத்தானா என்றால் அதுவும் இல்லை. கன்னிப்பெண் தந்தையை இழந்துவிட்டால் அவள் திருமணமாகாது நிற்கவேண்டிய கொடுமையில் உள்ளாள். இதனை,

*''சிறுசு பெருசாவோ சின்ன மக்க ஓடா கோ*
*சீர் கேட்கும் நாளையிலே சீரழிவும் கொள்ளை இப்போ''*

என்று நாட்டுப்புறக் கவிதை காட்டுகிறது.

சில சமயங்களில் பணக்கார இடமெனப் பொய்சொல்லித் திருமணம் செய்து விட்டுப் பெண்ணை அழைத்துப் போதல் உண்டு. வளமையான இடம் என்று நினைத்து மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றால் சென்ற பிறகுதான் உண்மை தெரிகிறது. ''மெலிசான தாவு'' என்று சொன்னார்கள்; போய்ப் பார்த்தால் அவ்விடம் ''காராப் பொதையுமில்லை; கருகாது தாவும் இல்லை''.

காதலைப் பற்றிப் பண்டைய இலக்கியங்களும், இன்றைய படைப்பிலக்கியங்களும், வெள்ளித் திரைகளும், சின்னத்திரைகளும்

எவ்வளவு பேசினாலும், காட்டினாலும் நடைமுறையில் நாட்டுப் பாடல்கள் காட்டும் கருத்துக்கள் தானே இயங்குகின்றன.

திருமணம் என்பதில் பெண் ஒருத்தியின் உணர்வும் உரிமையும் முடிவும் கலந்துள்ளது என்பதை மறந்து எத்தனை நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுக்கும் பெண்ணை மாட்சியுறச் செய்வோம் எனக் கவிமணி பாடலாம். லிண்டா .கிறிஸ்டி கூறுவது போல, இன்றும் ஆணாதிக்கச் சமுதாயத்தின் முரட்டுத் தனமல்லவா ஆட்சி புரிகின்றது.

''பெண்ணின் திருமணம் என்பது ஆண்களால் தீர்மானிக்கப் படும் ஒரு விஷயம் என்பதை ஆணாதிக்கச் சமுதாயம் வலியுறுத்து கிறது. திருமணத்திற்கான உரிமை (Bond) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாகவில்லை. ஆணுக்கும் ஆணுக்குமிடையே பெண்ணிற்காக ஏற்படுத்தப்பட்ட உரிமைக் கட்டுமானம் ஆகும்' என்பது மானுடவியலார் லெவிஸ்ட்ராசின் கருத்து. ஆணுக்குப் பெண் உடைமையானபோது தந்தை தனது மகளைத் தனது விருப்பப்படி மணம் செய்விக்கும் வழக்கம் ஏற்பட்டது. பெண்ணைப் பொருளாகக் (Object) கொண்ட ஆணாதிக்கச் சமுதாயம் அவளை ஆளுமையோடு செயல்பட விடுவதில்லை.[5]

## இல்லறச் சிக்கல்கள்

பிறப்பாலும் பெரும் பாவியாகித் திருமணத்தாலும் கொடுமைக்கு ஆளான பின்னராவது அவளுக்கு இல்லறம் இனிமை உடையதாக அமைகின்றதா எனில் அதுவுமில்லை. திருமணம் ஆகும் வரையி லாவது அவள் பிறந்த வீட்டுக்குச் சுமை; திருமணம் ஆகிவிட்டாலோ பிறந்த வீடு, புகுந்தவீடு இரண்டிலும் அவள் படும் பாடு பெரும்பாடு.

திருமணமான மகள் தன் தாயும் தந்தையும் உயிரோடு இருக்கும் வரையில் பிறந்த வீட்டில் ஓரளவு உரிமைகளை அனுபவிப்பாள். தாயும் தந்தையும் அவளுக்குப் பற்றுக் கோடாய் அமைகின்றனர். அவளுக்குப் பாதுகாப்பாகவும், பொருளியல் நிலையில் துணையாகவும் அமைகிறார்கள்.

அவள் கேட்டதையெல்லாம் தந்தை வாங்கித் தருவார். மேலும் பிறந்த இடம் வந்து விட்டால் அவளுக்கு நல்ல ஓய்வும் கிட்டுகிறது.

*''பங்குனி மாசத்திலே பார்வதியா நா(ன்) பொறந்து*
*பட்டுன்னு கேட்டுட்டா பட்டு எர நூறு*
*பரு நகையும் முன்னூறு - நா(ன்) பட்டை எடுத்துடுத்தி*
*பருநகையும் மேல் போட்டு நா(ன்) வளந்த இடம் வந்துட்டா*
*பட்டு நனையாது: பரு நகையும் மங்காது''*

இதோடு தந்தை வெளியே போய் வந்தால்,

*''அழுங் குழந்தைக்கு அஸ்கா பொடி தருவா(ர்)*
*ஆரஞ்சுக் கட்டு உடைப்பா(ர்)''*

இந்த மகிழ்ச்சியோடு பெரிய பாதுகாப்பாகவும் உள்ளார்.

*''மின்னோ வளை வளச்சி மேல் வரமாத் தொட்டி க்ட்டி*
*மேல்வரத் தொட்டியிலே மந்திரியும் சாய்ந்திருந்தா - நம்ம*
*மாளி(கை) காவலுண்டு; மைந்தருக்கும் சந்தோசம்''*
*(தொட்டி, தொட்டிக்கட்டு வீடு)''*

தந்தையைப் போன்றே தாயும் சகலமும் செய்வாள். மகளின் தேவையறிந்து அவள் கேளாமலேயே அனைத்தையும் தருவாள். தனக்குச் சீர்வரிசை அனுப்புபவளும் அவளே; இதற்குத் தந்தையும் உடன்படுவார்.

*''வடக்கே மதுரையிலே வடமதுரைப் பேட்டையிலே*
*வண்ணக் கலசம் விக்கி வாய் வைத்த சொம்பு விக்கி*
*வளத்த துரை இருந்தா வளத்த அம்மா தானிருந்தா*
*வாங்கி விலை மதிப்பா வண்டி மேலே பாரம் வைப்பா*
*வாசல் எங்கும் கோலமிட்டே.......''*

இவள் காத்திருப்பாள்.

தாயும் தந்தையும் தவறிவிட்டால் இந்தப் பாதுகாப்பும் அரவணைப்பும் அவளுக்கில்லை. அப்போது அனாதையாய் அவள் பிறந்த வீடு வந்தால் அவளுடைய பட்டும் நனைகின்றது; பரு நகையும் மங்குகிறது. மேலும் அவள் பிறந்தவீட்டு மாளி(கை)க்குக்

காவலில்லை; மைந்தரும் பொசுக்கென்று இருக்கிறார்கள். முழுமையான மாற்றம் பிறந்த வீட்டில் ஏற்பட்டு விடுகிறது.

தந்தை இறந்தால் அந்த வீட்டுக் குழந்தைகளுக்குச் சீர் செய்வதில் பொருளியல் சிக்கல் ஏற்படுகிறது.

*''செத்தார் குழந்தைக்கு சிவம் போனார் மக்களுக்குச்*
*சீராரு செய்வாரு சீரு குறைச்சலில்லே''*

என்று புலம்புகிறாள் ஒரு பெண்.

தாய் இருந்த வரையில் பிறந்த வீட்டில் ஒரு பெண்ணுக்கு அனைத்து உரிமைகளும் இருந்தன; அனைத்துச் செயல்களும் அவள் விருப்பப்படி நடந்தன. தாய் வீட்டில் அவளுக்குப்

*''பொங்கப் பிரியமுண்டு*
*பொங்கி உண்ணச் சொந்த முண்டு.''*

மேலும் மக்கள் வந்தால் அந்த வீடே பூரிக்கும்; தாய் ஆதரிப்பாள்.

*''வள(ர்)த்த அம்மா இங்கிருந்தா மாளி(கை) கெழுத்தியுண்டு*
*மக்க(ள்) வந்தா ஆதரிப்பா-வளத்த அம்மா போய்மடிய*
*மாளி(கை) கெழுத்தி இல்லே; மக்க வந்தா பொக்குனுது''*

(கெழுத்தி: களை; மலர்ச்சி; பொக்குனுது; பொசுக்கென்று)

என்று ஆதரவு அழிந்து போனதை அங்கலாய்த்துப் புலம்புவதில் பெற்றோர் எப்படிப் பெருந்துணையாய் இருந்தனர் என்பது வெளியாகிறது.

இதனினும் கொடுமை என்னவென்றால் பெற்றோர் மறைவுக்குப்பின் தாய்வீடு ஒரு பெண்ணுக்கு அந்நியமாகப் போய்விடுவதுதான். இதனை,

*''தாயார் இருக்கு மட்டும் தண்ணிக் குளிச்சி உண்டு*
*தாழம்பூ வாசமுண்டு - எங்க தாயார் போய் மடிய*
*தண்ணி குளிச்சியில்லே; தாழம்பூ வாசமில்லே''*

என்கிறாள் ஒரு பெண். அத்தோடு துயரம் முடிந்ததா? ஆசையாய் அண்ணன், தம்பி என்று அவர்களின் வீட்டிற்குச் சென்றால்

அவர்களின் மனைவிமார்களான நங்கை, கொழுந்திகள் அவள் வருகையை வெறுப்பதோடு உதாசீனமும் செய்கிறார்கள்.

*"என்னைப் பெத்த அம்மா நீ இல்லா வாசலிலே*
*சாத்திக் கதவடைப்பா(ள்) தாழ்ப்பாளை உள்ளிடுவா(ள்)*
*இருத்திக் கதவடைப்பா(ள்) ஈரமண்ணைப் போட்டடைப்(பாள்)"*

இப்படி ஒரு பெண் அழுகிறாள். ஆலமரம் வீழ்ந்து விட்டால் அதைத் தாங்க விழுதுகள் நிற்கும். பெற்றவர்கள் மாய்ந்து விட்டால் பெண் மக்களுக்குத் துயரே நிற்கும்.

புகுந்த வீட்டிலும் அவள் வேதனைகளில் வெம்புபவளாகவே இருக்கிறாள். பெண் பிறப்பு உதைபடவும், அடிபடவும் படைக்கப் பட்டது போலும்! அந்தக் கொடுமை தாங்காமல் தாய்வீட்டிற்குச் சீராடி வந்தால் சகோதரர்களும், தாயும் அவளை அணைத்து ஆறுதல் தர மறுப்பதோடு, அன்பான ஒரு வார்த்தையும் பேசுவது இல்லை.

*"தங்க அரளி வேர் புடுங்கி தங்காளே அடிச்சானு*
*தங்கா உடம்புக்குத் தாழம்பூ மேனிக்குத்*
*தாங்க முடியாதே தாய் இடங்கள் வந்தேனா*
*தாயும் மதிக்கலையே எம் பொறப்பும் பேசலையே'*

என்ற வாக்கில் தன் துன்பத்தைக் கொட்டியழுகிறாள் ஒரு பெண். இந்த 'வாழாவெட்டி' வருகையால் குடும்ப மானம் குலைகிறது என்பது உண்மைதான். அதைக் காட்டிலும் வந்தவளுக்கு உணவிட்டுக் காப்பாற்றுவதில் ஏற்படும் சிக்கல், தாய், தந்தை, அவர்களின் மகன், மருமகள் இவர்களிடையே பெரும் பிளவையும் ஏற்படுத்த வல்லது. பொருளாதார அடிப்படையில் இதைக் காணுகையில் தாய்ப்பாசம்கூட மறுதலிப்பதற்குக் காரணம் புலப்படும்.

## வரதட்சணை

திரும்பத் திரும்பப் பொருள் வேண்டி (வரதட்சணை) அவள் தாய்வீட்டிற்குத் துரத்தப்படுகிறாள். பெற்றோரும் முடிந்த அளவு சீர்வரிசை செய்தாலும் அவை அடமானத்தில் தொலைக்கப் படுகின்றன. எப்படியாவது மகள் வாழ்வு நசிந்து விடக்கூடாதே என்ற ஆதங்கத்தின் விளைவு இது.

*''மயிலி பொழைக்குட்டுனு மைந்தனோட வாழட்டுனு*
*மாலை கொடுத்தனுப்பி மறுநகையும் போட்டனுப்பி*
*மைந்தரோட வாழாமெ மாலை அடமானம்*
*மறுநகையும் தேய்மானம் -*
*மைந்தரோடே சீராடி வளத்த இடங்கோ வந்தது*
*மயிலியோட பொறந்த மச்சனுக்குச் சஞ்சலிப்பு''.*

இந்த வரிகளால் நம் நாட்டுச் சமுதாய அமைப்பில் பெண்ணை வாழவைப்பது என்பதில் ஆயிரம் சிக்கல்கள் இருந்தாலும் அவற்றுள் பொருளியல் முதன்மை வகிப்பதை அறிய முடிகின்றது.

இந்த நிலைகளையெல்லாம் கடந்து ஒரு பெண் நன்றாக வாழ முடியுமா எனில் அவளுக்கு வாய்த்தவன் நல்லவனாக இருத்தல் வேண்டும். சிலசமயம் கணவன் நல்லவனாக இருப்பான்; மாமனாரோ மோசமானவராக இருப்பார். ''எனக்கு வந்த மன்னவரு நல்லவரு; அந்த மன்னவரைப் பெற்றெடுத்த மலைக்குரங்கோ தொந்தரவு'' என்று பாடும் பெண்களும் உண்டு. அனைத்துப் பெண்களுக்கும் இப்படியே மாமனார்கள் அமையமாட்டார்கள்; நல்லவர்கள் நிறையப் பேர் உண்டு. இருந்தாலும் பெண்களுக்குத் துன்பம் தருவதில் மாமனார்களும் அடங்குகின்றனர்.

கணவன்மார்களின் பலவீனத்தால் வசதி இழந்து வறுமையில் சிக்கும் பெண்கள் சமுதாயத்தில் கணிசமாகவே உள்ளனர். கொங்கு நாட்டில் ஒரு கால கட்டத்தில் பலதார மணமும், வேசியர் தொடர்பும் ஆண்களுக்கிருந்தது. அதனால் பொருள் சிதைவும் அதன் காரணமாகக் குடும்பங்களின் சிதைவுகளும் நடந்துள்ளன. இதனால் ஏற்பட்ட நிலையைப் பெண் ஒருத்தி சொல்லிப் புலம்புகிறாள். அவள் வளமான வாழ்வுதான் வாழ்ந்தாள். ஆனால் கணவன் வேசியர் தொடர்பு கொண்டு பொருளை இழந்ததோடு இறந்தும் போனான். இதனால் அவள் மட்டுமின்றி வேசியும் வெள்ளைப் புடவை உடுத்த வேண்டி வந்துவிட்டதாம்.

*''தங்கப் படிக் கிணறு தாகத்துக்கு நல்ல ஜலம்*
*தாகம் பெறுக்காம தாசி வந்து அண்டினாளா*
*தாசிக்கொரு சத்திரமா தனிப் புறமாக் கட்டி வச்சோம்*

*தாசிக்குக் காசாட்டம்; தருமருக்குச் சீட்டாட்டம்*
*தாசி விடுவதெப்போ? தருமர் வந்து சேர்வதெப்போ?*
*தாசியிட்ட சாப்பனையு தங்குனதா பந்திக் கெல்லாம்*
*தருமருக்கு வந்தவ(ள்) தாசிக்குக் காசிழந்தா*
*தங்கக் கலர் நூலிழந்தா(ள்)....''*

என்ற வரிகள் இந்நிலையைப் படம் பிடிக்கின்றன.

எந்தவொரு சூழலிலாவது ஏழ்மை வந்துவிட்டால் பங்காளிகள் மதிக்காமல் ஏசுவதும், ஒதுக்குவதும் சாடை பேசுவதும் இந்த மண்ணின் பண்பாடாகப் போய்விடுகின்றது. ''பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்ற வள்ளுவன் இலக்கணத்திற்கு இலக்கியம் நாட்டுப்புற மக்களே.

*''நாங்க(ள்)*
*எள்ளுக் கடையோரம் எதிராளி வீட்டோரம்*
*எச்சாப் பொழச் சிருந்தா எட்டு லட்சம் ஆயிருந்தா*
*எனமோ கரிக்காது எஞ்சனமோ பேசாது*
*எச்சாப் பிழைக்காதே எட்டு லட்சம் ஆகாதே*
*எனமே சதிச்சாச்சு எஞ்சனமே பேசலாச்சு''*

என்பதால் தாழ்வுவரின் மனிதன் புழுவாகப் போவதை இவ்வரிகள் காட்டுகின்றன.

இத்தகைய பொருளியல் சிக்கல்களையெல்லாம் மீறி வாழ்வைத் தொடங்க - தொடர நினைத்தாலும் வேறு வகைத் துன்பங்கள் சுறாமீன்களாகித் தாக்குகின்றன. திருமணமான ஆண்-பெண் இவர்களுக்குக் குழந்தைப் பேறு இல்லாமல் போய் விட்டால் அதற்குப் பெண்ணே முழுக்காரணம் என்று சமுதாயம் சபிக்கிறது. இந்தப் பழி தன் மீது படராமல் இருக்க அவள் நோன்பு, விரதம் எனப் பலவகைச் சடங்குகளையும் மேற்கொள்கிறாள்.

*''வளைவா வளைந்து வரும் வல்லடாங் காவேரி*
*வன்னி மரம் சுத்திவரும் வவானிக் கூடுதுறை*
*வன்னிமலை ரங்கருக்கு வன பூசை செய்திருந்தால்*
*மஞ்சனங் கிளையுமுண்டு மயிலுட சேர்க்கையுண்டு''*

எனக் கூறும் அவள்,

*"ஆல் அரசு சுத்தியல்லோ அருகு வச்சுப் பூசை செஞ்சு(ம்)*
*அக்கியானம் தீரலையே அதிக வரம் தாரலையே*
*வேம்பு அரசு சுத்தியல்லோ வில்வம் கொண்டு பூச செஞ்சும்*
*அக்கியானம் தீரலையே அதிக வரம் தாரலையே"*

என்றும் ஏங்க வேண்டியுள்ளது.

இந்த மலடியின் துன்பம் இழவு வீட்டிலும் எதிரொலிக்கிறது. செத்த பிணம் கிடக்கும் வீட்டிலும் இவள் அவமானப்பட வேண்டியுள்ளது. அந்த வீட்டில் இவளோடு யாரும் பேசுவதுகூட இல்லை.

*"சாமி இளவாழை சந்தனநீர் வாழை*
*இன்னிக்கி நா(ன்) தாரமுகிப் போனது - இந்தச்*
*சனத்தாரு அத்தனையும் எங்கிட்டே பேசச்*
*சத்தம் மங்கிப் போனதென்ன?"*

என்று அவள் கேட்கிறாள்.

இவற்றைக் காண்கையில் தன்னிச்சையாகச் செயல்பட முடியாமை, பிறரை அண்டி வாழ்தல், அனைத்துப் பழிகளுக்கும் பொறுப்பேற்றல் போன்றனவே கொங்குப் பெண்டிர் பலரின் வாழ்வாகப் போய்விட்டதைக் காண முடிகிறது. பெண்களின் நிலை குறித்து மனுதர்மம்,

*"பெண் எந்தத் பருவத்தினளாயினும் தன் இல்லத்திலே கூடத் தன்னிச்சைப்படி எந்தச் செயலும் இயற்றலாகாது."*[6]

என்றுரைப்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் மக்கள் இவர்கள் காவலின்றிப் பெண்கள் தம்மிச்சையாக இயங்கலாகாது.

தகப்பன், கணவன், மக்கள் இவர்களைத் தவிர்த்துத் தனித்திருக்க விரும்புதல் கூடாது. அப்படித் தனித்திருப்பின் பிறந்தகம், புக்கமாகிய இரு குலங்களுக்கும் நிந்தை உண்டாக்குவாள்.

## விதவைத் துயர்

சமுதாயக் கட்டுப்பாட்டில் பெண்கள் அடையும் துயரத்தின் முடிநிலை அவர்கள் விதவையாவதாகும். பொதுவாகப் பெண்கள் சுமங்கலியாகச் சாக விரும்புவர். நிறை வாழ்வு வாழ்ந்த மகிழ்வோடு செல்ல நினைப்பதற்காகவோ அல்லது சுமங்கலிப் பெண்கள் தெய்வமெனத் தொழப்படும் தகுதி படைத்தவர்கள் என்பதற்காகவோ அவர்கள் இதை விரும்புவதில்லை. விதவைத்துயரின் கொடுமை யிலிருந்து தப்பிப்பதற்காகவே அவர்கள் இதை எதிர்கொள்கின்றனர். 'உடன்கட்டை' ஏறும் வழக்கத்தினையும் இந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தல் வேண்டும். கணவன் பூதப்பாண்டியன் மாய்ந்த பிறகு அவன் தேவியாகிய பாண்டிய அரசிக்கே குளிர் நீர்ப்பொய்கையும் கொழுந்து விட்டு எரியும் தீயும் ஒன்றாகத் தெரிகின்றன என்றால் நாட்டுப்புற அபலைப் பெண்களுக்கு விதவை நிலை என்னென்ன துன்பங்களைத் தந்திருக்க வேண்டும்? ''மஞ்சள் குங்குமத்தோடும் மடி நிறைந்த பூவோடும் தாலிக் கழுத்தோடும் தலை நிறைந்த பூவோடும்'' 'போவது' பெருமைதான்; ஆனால் அது நடக்காதபோது எத்தனை துயர்கள்; இடர்கள்; உதாசீனங்கள்.

கணவன் அவளுக்குப் பெரும் காவலாக இருந்தான். எனவே அவள் எள்ளளவும் கவலையின்றி இருக்க முடிந்தது. அவன் மிளகு படரும்மலையாகவும், மோசம் வந்தால் தாங்கும் மலையாகவும் கரும்பு படரும் மலையாகவும், கஷ்டம் வந்தால் தாங்கும் மலையாகவும் அவளுக்கு அமைந்தான். அவனது இறப்பானது அவளது வாழ்க்கை, நம்பிக்கை, உணர்வு இவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. 'கணவரை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்ற காப்பியச் சொற்கள், ''மச்சான் துணை இல்லாமே மறு துணையும் பஞ்சமம்மா'' என்று கிராமப் பெண்ணின் ஒப்பாரியாகி ஒலிக்கிறது. மாண்டவனுக்காக மாரடித்து அழும் ஒரு பெண்ணின் துன்பமும், நினைவும்,

*''ஆறுண்ணா ஆறுமா? ஆயுசுக்கும் தீருமா?*
*எப்போ மறப்பனோ? எக்காலம் தீருமோ?''*

என்று கண்ணீர்க் கவிதைகளாகின்றன. உள்ளம் வெடித்து வாழ்க்கை சிதறிப்போன நாட்டுப்புற மகள் ஒருத்தியின் நாக்கில் இந்தக் கவிதை

பிறக்கிறது என்றால் எத்தகைய சூழலில் அவள் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்தல் வேண்டும். இத்துணை நாள்வரை இருந்ததை விட இனி ஆயுளுக்கும் எப்படி இருக்கப் போகிறோம் என்ற பயமே இதில் பளிச்சிடுவதை அறிதல் அவசியம்.

கணவனை இழந்த பெண் பொட்டிடுதல், பூச்சூடுதல், பச்சை குத்திக் கொள்ளல், வளையல் அணிதல் ஆகியன செய்தல் கூடாது. இந்த மங்கலச் சின்னங்கள் மறுக்கப்பட்டுத் தாலியும் கழற்றப் படுகிறது. இதனை,

*''மன்னவருங் காலமுங்கோ - நான்*
*பூவிழந்தே(ன்); பொட்டிழந்தே(ன்)''*
*''கோய சிலையழகி; குங்குமப் பொட்டழகி - என்னட*
*கோய சிலை அழிக்க; குங்குமப் பொட்டழிக்க''*
*''ஆசைக்குத் தொட்டது அரும்புவச்ச பொன்வளையல்*
*ஆசை முடியலையே அரும்புதிர வாழலையே''*

என்ற பாடல் வரிகள் காட்டுகின்றன. அவளுக்குச் சொந்த வீட்டின் முன்னே கோலம் போடும் உரிமையும் இல்லாது போகிறது. அலங்கோலமானவள் போடும் கோலம் கோலமா?

*''வீதியெங்கும் கோலமிட்டா வீதியிலே போற சனம்*
*வெள்ளெப் பொடியுமும்பா வீமரில்லாக் கோலமும்பா*
*அந்தச் சொல்லக் கேட்டேனோ*
*கன்னி உருகறாளே; கண்மணியா வாடுறாளே''*

இதோடு அவள் சிக்கல் தீர்கிறதா? கோலம் போட முடியாவிட்டாலும் வெள்ளை உடை உடுத்தி வெளியில் வந்தால் அவள் தீய சகுனமாம்; முண்டையாம்.

*''கைக்காளன் மல்பீசு கழுத்திலிட்டு வந்தாலும்*
*கண்டாச் சயனம் என்பா(ர்) கடக்க வந்தா முண்டை என்பா(ர்)''*

ஒரு காலத்தில் இவளுடைய கணவன் உயிரோடு இருந்த போது இவள் பசந்த நகை போட்டு, பணம் போலப் பொட்டு வச்சுப் பாதையிலே போனாள். அப்போது இவளைப் பார்த்தவர்கள் ''பார்ப்பார் பொறவி' என்றும் ''பரமரொட தேவி' என்றும் பாராட்டினார்கள். இன்றோ அதே மக்கள்,

*"பார்த்தா சயனம் என்பா(ர்)*
*பக்கம் வந்தா ஆகாதென்பா(ர்)"*

என்று அவளைப் புறந்தள்ளுகிறார்கள்.

கணவனை இழந்த பெண்ணுக்கு யாரிடமும் மதிப்பில்லை. அவளைக் கண்டால் "எங்கே உதவி கேட்பாளோ? ஒட்டிக் கொள்வாளோ?" என்று எண்ணும் கூட்டமே மிகுதி. இந்த நிலையை,

*"கண்டா மதியாங்கோ; காசுள்ளோர் பேசாங்கோ;*
*பார்த்தா மதியாங்கோ; பணமுள்ளார் பேசாங்கோ"*

என்ற ஒப்பாரி புலப்படுத்துகிறது.

மீண்டும் மீண்டும் பெண்ணைத் தாக்கும் ஒரே சிக்கல் பணச் சிக்கலே. தாய் வீடு வசதியானதுதான். ஆனால் மகள் வீடோ வறுமையடைந்துவிட்டது. எனவே உட்கார்ந்து சாப்பிட முடியாமல் உழைத்துச் சாப்பிடவேண்டியதாயிற்று. "மானைப் பிடிக்கும் கை; மான் வேட்டை ஆடும் கை" இன்று மண் சுமக்கிறது; மாதப்படி வாங்குகிறது. "குயிலைப் புடிக்கும் கை; குயில் வேட்டை ஆடும் கை" இன்றைக்குக் குப்பை சுமந்து கூலிக்கு ஏந்துகிறது. இந்த ஏற்றத்தாழ்வு பெண்ணின் தலையில் இடியாய் விழுகிறது.

கணவனை இழந்த பெண் அவளது நியாயமான சொத்துக் களுக்கும் உரிமையற்றவளாய்ப் போய்விடுகிறாள். சமுதாய அமைப்பின் அவலட்சணம் இது. தனக்குரிய சொத்தினைத் தான் எடுத்துண்ண முடியாமல் சம்பந்தமில்லாத பிறருடைய கையை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. அதுவும் கொங்குச் சமுதாய நில உரிமைக் குடும்பங்களில் மச்சாண்டார், கொழுந்தனார் ஆகியோர் கொடுமை ஓரளவிற்குக் கடுமையானதே. ஒரு பெண் இப்படிப் புலம்புகிறாள்.

*"மச்சு மச்சா நெல் விளையும்*
*மகுடஞ் சம்பா போர் ஏறும்*
*மச்சாண்டார் கையாலே*
*மாசப்படி வாங்கித் திங்க - நான்*
*மாபாவி ஆனேனப்பா"*

*''குச்சுக் குச்சா நெல் விளையும்*
*குமுடஞ் சம்பா போர் ஏறும்*
*கொழுந்தனார் கையாலே*
*கூலிப்படி வாங்கித் திங்க - நான்*
*கொடும்பாவி ஆனேனப்பா''*

வறுமைக் காலத்து உழைத்து மாசப்ப்டியும், கூலிப்படியும் வாங்கித்தின்பதில் பொருள் உண்டு. உரிமை இருந்தும் உரிமைக்கு உரியவரல்லாதவரிடம் மாதப்படியும் கூலிப்படியும் ஏன் வாங்கித் தின்ன வேண்டும்? இது பெண்களின் தலைவிதியா? இல்லை சமுதாயத்தின் விதி - குறுக்கு விதி.

இன்னும் 'விலங்குக்கு' வாழ்க்கைப்பட்ட பெண்கள், இளம் வயதில் விதவையான பெண்கள், தான் பெற்ற மகனுடைய நற்காரியங்களிலும் கலந்து கொள்ள முடியாது உதாசீனப்படுத்தப்படும் அபலை விதவைகள் எனப் பல்வேறு நிலைகளில் பெண்களின் துன்பங்கள் ஒப்பாரிப் பாடல்களில் விரிகின்றன.

எழுதப்பட்ட இலக்கியங்கள் காட்டும் ''மாய'' வாழ்விலிருந்து மனதை மாற்றி நாட்டுப்புறப்பாடல்களை - குறிப்பாக ஒப்பாரிப் பாடல்களை ஆராய்ந்தால் உண்மையான சமுதாய - பண்பாட்டு நிலைகள் நமக்குப் புரியவரும்.

*''நாட்டுப் புற இலக்கியம், வாழ்க்கையோடு பொருந்திப்*
*பார்க்கும் பொழுது எழுத்திலக்கியத்தை விட*
*நடைமுறை சார்ந்ததாக உள்ளது''*[7]

என்ற கூற்று கொங்கு ஒப்பாரிப்பாடல்களுக்கு முழுமையும் பொருந்தும்.

கொங்கு நாட்டுப் புறப்பாடல்கள் பெண்பிறப்பைப் பாவப் பிறப்பாகக் காட்டுகின்றன. பெண்ணாகப் பிறந்தவள் வாழ்நாள் முழுவதும் அடிமையாகவே வாழவேண்டியுள்ளது. அவளது உணர்வுகட்கு உரிய இடம் தரப்படுவதில்லை. இல்லறத்திலும் அவள் துயரங்களையே சுமக்கின்றாள். பொருளியல் சிக்கல்கள் பெருமளவில் இவளைத் தாக்குகின்றன. சமுதாய பண்பாட்டு அடிப்படையில்

இவளுக்குச் சொந்தமான சொத்தை அனுபவிக்கவும் உரிமை இல்லை; பெற்றுப் பேணவும் விதியில்லை. விதவை என்ற நிலையில் அவள் ஒதுக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டுத் துன்பப்படுகிறாள்; துன்புறுத்தவும் படுகிறாள்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் நிலையில் மாற்றங்கள் இருப்பினும் நாட்டுப் புறப் பெண்கள் உயர வேண்டுமானால் அவர்கள் நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## *சான்றாதாரங்கள்*


1. தொல்காப்பியம்; புறத்திணையியல், சூத்: 77.
   புறப்பொருள் வெண்பாமாலை: 10; பன்னிரு பாட்டியல்: 13
2. தொல்காப்பியம்: மெய்ப்பாட்டியல்: 5
3. மு.கு.நூல், பேராசிரியர் உரை.
4. நாட்டுப் புற இயல் ஆய்வு - மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம் 1983, ப. 44
5. லிண்டாகிறிஸ்டி: வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள் - ஒரு பெண்ணிய நோக்கு. ''மேலும்'' (காலாண்டிதழ்), அக்டோபர் 1989.
6. மனுதர்ம சாஸ்திரம்: அத்தியாயம்: 5 சூத்திரம்: 45-47.
7. வி. சரசுவதி: நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் - பதிப்புத்துறை வெளியீடு: 1982, ப. 33.


* * *

## 8. பெருங்கதைச்சிறப்பும் மண்ணின் மணமும்

தமிழில் தோன்றிய காப்பியங்களின் வரிசையில் பெருங்கதை மூன்றாவதாகும். கொங்கு நாட்டு விஜயமங்கலத்தில் வாழ்ந்த கொங்குவேளிர் இக்காப்பியத்தின் ஆசிரியர். எனவே இக்காப்பியம் கொங்குவேள் மாக்கதை என்றும் வழங்கப்படும். இந்தக் கொங்கு நாட்டின் காப்பியத்திற்கெனத் தனிச்சிறப்புக்கள் உள்ளன.

பெருங்கதை என்ற இத்தொடர்நிலைச் செய்யுள் தமிழில் எழுந்த முதல் மொழிபெயர்ப்புக் காப்பியமாகும். குணாட்டியர் என்பார் பைசாச மொழியில் சைவமதம் சார்ந்த இக்காப்பியத்தைப் 'பிருகத்கதா' என்ற பெயரில் செய்தார். இதனைத் துர்விநீதன் என்ற கங்க மன்னன் சமணச் சார்புடையதாக்கிப் 'பிருகத் கதா' என்ற பெயரிலேயே வடமொழியில் செய்தான். இந்த வடமொழிக் காப்பியத்தை அதே பொருள்படும் படியான பெயரில் பெருங்கதை என்று தலைப்பிட்டுத் தமிழில் சமணச் சார்பாகச் செய்தவர் கொங்குவேளிர்.

பெருங்கதை துர்விநீதனின் காப்பியத்தை மூல நூலாகக் கொண்டது என்பார் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள்.

*"மேலே காட்டியவற்றைப் பார்க்கையில் துர்விநீதன்*

*என்னும் கங்கராசன் இயற்றிய வடநூலே இதற்கு முதனூலாக இருத்தல் வேண்டுமென்று தோற்றுகிறது''*[1]

என்பது அவர் கருத்து. ஆனால் இக்கருத்துக்கு மறுப்புரை கூறுபவர்களும் உண்டு.

> *''கி.பி. 5 ஆம் 6ஆம் நூற்றாண்டில் கங்கராஜனான துர்வினீதன் பிற பிருகத்கதைகள் போலச் சைவ மணம் கமழாது கொங்குவேளைப் போலச் சமண மணம் கமழப் பிருகத்கதையை வடமொழியில் எழுதினார். இதனுடைய மொழிபெயர்ப்பே கொங்குவேள் மாக்கதை என்பர். அப்படி மொழிபெயர்ப்பென்று இந்த நூலைக் கூறுவதற்கில்லை''*[2]

என்பார் தெ.பொ.மீ.

கொங்குவேளிரே முதன்முதலில் வடநாட்டுக் காப்பியம் ஒன்றைத் தமிழில் தரமுடியும் என்ற பாதையை நடைமுறைப்படுத்திப் புதுவழி காட்டியவர். இதனால் இவருக்குப்பின் வந்த காப்பிய ஆசிரியர்கள் அனைவரும் கதை தேடித் துன்பப்படாது வடபுலக் கதைகளைத் தழுவிக் கொள்ளத் தொடங்கினர். இந்த விதிக்கு விலக்காக அமைவது பெரிய புராணம் மட்டுமே.

வடநாட்டுக் கதையின் மொழிபெயர்ப்பில் தமிழ் அகமரபை (களவு வழிக்கற்பு)ப் புகுத்தியவரும் இவரே. இவர் காட்டிய வழியிலேயே, ''அண்ணலும் நோக்கி அவளும் நோக்கித்'' திருமணம் முடிப்பதாகக் கம்பர் உள்ளிட்ட ஏனைய காப்பியப் புலவர்களும் தலைவர்தம் அகவாழ்வைப் படைத்துள்ளனர். தமிழ் நிலக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இல்லாத இந்த மரபு கொங்கு வேளிரால் முதன்முதலில் மொழி பெயர்ப்புக் காப்பியத்தில் புகுத்தப்பட்டுள்ளது.

ஏனைய காப்பியங்கள் போலன்றிப் பெருங்கதை காப்பிய உட்பிரிவுகளான காதைக்குக் காதை சொல் தொடர்ச்சி கொண்டு அந்தாதியாக அமைக்கப்பட்டுள்ளது. காப்பியத்தில் அந்தாதி முறை பின்பற்றப்பட்டுள்ளது இக்காப்பியத்தில் மட்டுமே. மேலும் இந்த

அந்தாதி முறையை அகலக்கவியில் புகுத்திய முதல் புலவரும் கொங்குவேளிரே.

காப்பியத்தலைவர்கள் காதலித்துத் திருமணம் செய்து கொள்வர்; அல்லது பிறவழிகளில் திருமணம் கொள்வா. ஆனால் உடன்போக்கில் தலைவியைக் கூட்டிச் சென்று திருமணம் செய்து கொண்ட நாயகனைத் தலைவனாக உடையது பெருங்கதை. இஃது இதன் புதுமை; தனிச்சிறப்பு.

தன் மனைவியின் முகத்திலேயே காதலிக்குத் திருமுகம் எழுதி அனுப்பிய புதுமையும் இக்காப்பியத்திற்குச் சொந்தமானதே.

குடிமக்களுள் ஒருவரைத் தலைவராகக்கொண்டு இதிலும் பெண்களைத் தலைவியாகக் கொண்டு காப்பியம் பாடும் தமிழ் மரபுக்கு மாறாக அரசகுடும்பத்து இளவரசனைத் தலைவனாகக் கொண்டு தமிழில் பாடப்பட்ட முதற்காப்பியம் என்ற சிறப்பும் பெருங்கதைக்கே உண்டு.

இத்தகு தனித்தன்மைகள் கொண்ட பெருங்கதையில் தமிழ் மற்றும் கொங்கு நாட்டின் மணம் கமழுவதைக் காட்ட முயல்வது இக்கட்டுரையின் நோக்கம்.

களவுவழிக் கற்பு என்ற அகநெறி தமிழுக்குரிய இலக்கண நெறி. பாடல் சான்ற இப்புலனெறி வழக்கம் பெரும்பான்மை நாடக வழக்கிலும், சிறுபான்மை உலகியல் வழக்கிலும் நிகழ்வதாகும். இது தமிழின் தனிச்சிறப்பு ஆதலின் இவ்வழக்கைத் 'தமிழ்' என்றே இலக்கியங்கள் குறிப்பிடும்.[3] இவ்வக மரபின் இறுக்கத்தை மீற முடியாமலேயே பல புலவர்கள் அகப்பாடல்களைப் பாடியுள்ளனர்.

இத்தகைய வலுவான நெறி தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் காட்டப்படவில்லை; ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் வடநாட்டில் இல்லாத, இருக்கமுடியாத இந்த நெறியை வடநாட்டுக் கதை ஒன்றில் முதன்முதலில் அமைத்துக்காட்டுகிறார் கொங்கு வேளிர்.

தமிழ் இலக்கண நெறியானது பால்வரைத் தெய்வம் நின்றூட்டத் தலைவனும் தலைவியும் சந்திப்பார்கள் என்று சொல்லுகிறது.

*"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உணர்ந்த பாலது ஆணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"*[4]

என்று முதல் இலக்கணம் தொல்காப்பியம் பேசுகிறது.

இந்த இலக்கண அடிப்படையிலேயே உதயணனும் வாசவதத்தையும் சந்திப்பதாக உவமை கொண்டு விளக்குகிறார் வேளிர்.[5]

*"தென்கடல் இட்டதோர் திருமண் வான்கழி*
*வடகடல் நுகத் துளை வந்து பட்டாஅங்கு*
*நனிசேண் இட்ட நாட்டினர் ஆயினும்*
*பொறைபடு கருமம் பொய்யாது ஆகலின்*
*...... ...... ...... ......*
*...... ...... ...... ......*
*ஆயத்து இடையோள் பாசிழைப் பாவை*
*யானை மிசையோன் மாமுடிக் குருசில்*
*இருவரும் அவ்வழிப் பருகுவனர் நிகழ"*[5]

என்பன காப்பிய வரிகள்.

இன்னும் உதயணனின் நான்கு திருமணங்களும் களவு வழியான கற்பு மணங்களே. இதில் இன்னும் சிறப்பு என்னவென்றால் அவனது நான்காவது மணத்தைத் "தமிழியல் வழக்கு" என்றே வேளிர் சிறப்பிக்கிறார்.

விரிசிகையின் திருமணம் காணும் பொதுமக்கள் களவுக்குப் பின் நீண்ட காலம் கழித்து உதயணன் விரிசிகையை மணப்பதை விமர்சிக்கின்றனர். வேளிர் இதனைத் தமிழியல் வழக்கு எனக் குறிப்பதைக் கீழ்க்காணும் வரிகள் சுட்டும்.

*"இமிழ்திரை வையத்து ஏயர் பெருமகன்*
*தமிழியல் வழக்கினன் தணப்பு மிகப்பெருக்கி*
*நிலவரை நிகர்ப்போர் இல்லா மாதரைத்*
*தலைவர விடுத்தது தகாது என்போரும்"*[6]

என்பன காப்பிய அடிகள்.

களவு நீட்டிக்கும் கால அளவையும் மீறிக் கால நீட்டிப்புச்

செய்தது தகாத செயல் என்று அரசனையே பொதுமக்கள் சாடுமளவிற்குத் தமிழ் நெறியின் தாக்கம் இருந்திருப்பதை இதனால் அறியலாம்.

வடநாட்டுக் கதையில் இம்மரபு இருக்க வாய்ப்பு இல்லை. மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் கந்தர்வம் போன்று களவு அமையும். ஆனால் கந்தர்வம் களவு ஆகாது. இதனை நச்சினார்க்கினியர் நுட்பமாக வேறுபடுத்திக் காட்டுவார். கொங்கு வேளிர் இவர்தம் காதலை வடநாட்டுக் கந்தர்வமாகக் காட்டாது தமிழ்க் களவாகக் காட்டியுள்ளார். இதனால் இந்த அகப்பொருள்நெறி தமிழிலக்கியத்தில் செலுத்திய ஆதிக்கத்தை அறிய முடிகிறது.

ஒருவலிமையான நெறியைப் புறக்கணிக்க முடியாத - மாற்ற முடியாத - மாற்ற நினைக்காத இலக்கிய அமைப்புக்களில் இதுவும் ஒன்று எனலாம்.

புறப்பொருளைப் பாடும்போதும் வேளிரால் தமிழ் இலக்கணத்தைத் தவிர்க்க முடியவில்லை; அல்லது தவிர்க்காமல் விரும்பிப் பாடுகிறார் எனலாம்.

உதயணன் வாசவதத்தையைக் கடத்தி வருகையில் அவர்கள் சென்ற வழியை மருதநிலம் கடந்தது, முல்லை நிலம் கடந்தது, குறிஞ்சி நிலம் கடந்தது, பாலை நிலம் கடந்தது எனப்பெயர் சூட்டிக் காதைகளை அமைக்கிறார். தமிழ் நானிலப்பிரிப்புச் சிந்தனை இங்கே இடம் பெறுகிறது. ஆனால் நெய்தல் நிலம் கடந்ததாக ஆசிரியர் பாடவில்லை. இதற்குக் காரணம் அவர் பிறந்து வளர்ந்த கொங்கு மண் நெய்தல் சார்புடையது அன்று எனக் கூறலாம்.

பாலை நில வருணனையில் புறப்பொருள் இலக்கணப் போர் முறைகளையே கொங்கு வேளிர் பாடுகிறார். அப்படிப் பாடுவதோடு புறப்பொருள் இலக்கணம் காட்டும் மரபுச் சொற்கள் / கலைச்சொற்கள் ஆகியனவற்றையே பயன்படுத்துகிறார்.

பாலைநில மக்கள் அடுத்தவர்க்குச் சொந்தமான ஆநிரைகளைக் கவர்ந்து வருகின்றனர்; கால்நடைச் சொந்தக்காரர்கள் தத்தம் உடைமைகளை மீட்கப் போருக்கு வருகின்றனர். ஆனாலும் இந்தப் பாலை நில எயினர் அவர்களை வென்று துரத்துகின்றனர். இதனை,

*"வேட்டச் செந்நாய் வேண்டாது ஒழித்த*
*காட்டுமா வல்சியர் கரந்தை பாழ்பட*
*வெட்சி மிலைச்சிய வில்லுறு வாழ்க்கை*
*சிறுபுல்லாளர் .... .... ...."[7]*

என்று வருணிக்கிறார் வேளிர்.

போர் நிகழ்ச்சிகளைக் கூறியே இவர்தம் செயல்களைச் சொல்ல முடியும். ஆனால் கரந்தை பாழ்பட, வெட்சி மிலைச்சிய என்ற புறப்பொருள் இலக்கணக் கலைச் சொற்களைக் கூறுதல் தமிழிலக்கணம் வேளிர் மீது செலுத்திய செல்வாக்கைக் காட்டுகிறது. அல்லது தமிழ்மணம் கமழ இதைச் செய்துள்ளார் எனலாம்.

கவிஞர்கள் தத்தம் நிலப்பண்பாடுகள் கமழப் பிறநெறிகளை மாற்றிப் போற்றல் என்பதும் ஓர் இலக்கியக் கொள்கையே. தமிழ்நாடு மற்றும் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஏற்பத் தேவரும், கம்பரும் செய்யுள் செய்துள்ளனர் என்ற நிலைக்கு மூலமானவர் பெருங்கதை ஆசிரியரே என்பதில் மாறுபாடு இல்லை. இதனைத் தெ.பொ.மீ அவர்கள்,

> *"இந்நூல் திணைவளம் கூறும் பகுதிகளில் வடநாட்டினையே தமிழ் மயமாக்குகின்றது. வாசவதத்தையும் உதயணனும் கம்பருடைய இராமனும் சீதையும் போலத் தமிழ் முறைப்படி கண்டதும் காதல் கொள்கின்ற தமிழ்ப்பண்பாடு விளங்கப் புலவர் பாடிச் செல்கின்றார்."[8]*

என்கிறார்.

வேளிர் கொங்குநாட்டுச் சிற்றரசர். தமிழ் மற்றும் வடமொழிப் புலமை சான்றவர். சங்கப் புலவர்கள் வெட்கப்படும்படி அவர்களுடைய வினாக்களுக்குத் தமது பணிப்பெண்ணைக் கொண்டு விடை கூறச் செய்தவர். அவருடைய காப்பியத்தில் தமிழக மணம் மட்டுமின்றி அவர் பிறந்த கொங்கு மண்டலத்தின் மணமும் கமழுவதைப் பார்க்க முடிகின்றது.

'பாலைநிலம் கடந்தது' என்ற பகுதியில் கொற்றவை கோயில் மற்றும் கொற்றவை வழிபாடு குறித்துப் பேசுகின்றார் காப்பிய ஆசிரியர். வீரர்கள் தங்கள் கண்களைத் தோண்டி அத்தெய்வத்திற்குக்

காணிக்கையாகச் செலுத்தியுள்ளதை அவர் இப்பகுதியில் கூறுகிறார். கொங்கு நாட்டுக் காளி கோயில்களில் கண்ணடக்கம் போடும் பழக்கம் மிகுந்திருப்பதை இன்றும் நம்மால் காண முடிகின்றது. தமிழகத்தின் பிற பகுதிகளில் இப்பழக்கம் இல்லாமல் இல்லை. இருப்பினும் காப்பிய ஆசிரியர் தம் மண்டல வழிபாட்டு நெறியாகவே இதனைக் காண்கிறார் என்பதில் குறை இல்லை.

கொங்கு நாட்டில் பெண்கள் தம் கூந்தலுக்கு மணம் கமழும் ஒரு மண்ணைப் பூசிக் குளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். குடவாயில் என்ற பழைய பெயர் கொண்ட இன்றைய கொடுவாய்ப் பகுதியில் இப்படி மண்பூசிக் குளிக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை பழக்கத்தில் இருந்தது. இதனைச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இந்த மண்ணை அவர்கள் 'ஏர்மண்' என்று அழைக்கின்றனர். இச்செய்தியைத் தமது காப்பியத்தில் "கூந்தல் நறுமண் சாந்தொடு கொண்டு"[9] எனக் கூறுகிறார் வேளிர். சங்கப்பாடல்களில் "கூழைக்கு எருமண் கொணர்கம்"[10] என்று இப்பழக்கம் பேசப்படுகிறது.

ஒரு நாட்டின் அல்லது அந்த நாட்டின் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் தனித்துவமான, நிலையான பண்பாடு மற்றும் நாகரிகம் முதலியவற்றை அப்பகுதி மக்களின் மங்கல, அமங்கலச் சடங்கு களினால் துல்லியமாகக் காண முடியும். உதயணனுக்கும், வாசவதத்தைக்கும் நடந்த திருமணத்தைக் கூறவரும் கொங்கு வேளிர் அவற்றைச் சமணமத வழிகளின் படியும் பொதுவான திருமண நெறிகளின் படியும் விளக்குகிறார். ஆனாலும் இவற்றுள் தனித்துவமான சில சடங்குகள் கொங்கு மண்ணிற்கு உரியவையாக இருப்பதை அறிய முடிகின்றது.

வாசவதத்தைக்குத் திருமணம் முடிந்த ஆறாம் திங்களில் மயிர் வினைஞன் மயிர்களை வினை செய்ததாகக் காப்பியம் கூறுகிறது. வாசவதத்தையின் புருவம் ஒதுக்கப்பட்ட சடங்கை,

*"மண்ணுவினை மயிர்த்தொழில் நன்னல நாவிதன்*
*எல்லை வகுப்ப .... .....*
*எதிர்நோக்கு ஆற்றா இலங்கிழை முகத்தையும்*

*மதிமாசு கழீஇய வண்ணம் போலக்*
*கதிர்மேல் இலங்கக் கைவினை முடித்தபின்'*[11]

என்று விளக்குகிறார் மாக்கதை தந்தவர். இன்னும் அவன் இலக்கணம் பிழையா எஃகும் இரும்பும் கலந்து செய்யப்பட்ட கத்தியைச் சாணைக் கல்லில் தீட்டிப் பட்டுத்துணியில் நன்றாகத் தேய்த்துப் புரட்டித் தூய நீரைக் கொண்டு, உடம்பை மூரித்தல செய்யாது கொட்டாவி விடாது இந்த ஒப்பனை செய்தான் என விரிவாகவே பேசுகிறார். இத்தன்மை இன்றும் நடைமுறையில் உள்ளதை அறிய முடியும். சீவக சிந்தாமணி யிலும் இதே சடங்கு கூறப்படுகிறது.[12]

மயிர் வினைஞன் ஒருவன் மணப்பெண்ணுக்குப் புருவம் முதலியன ஒதுக்கி ஒப்பனை செய்தல் என்பது பலருக்குப் புதுமையாகத் தோன்றும். ஆனால் கொங்கு நாட்டில் மணப்பெண் களுக்கு இத்தகைய தூய்மைச் செயலை (அவர்தம்) நாவிதர்களின் மனைவியர் செய்து வந்ததைக் காங்கயம் வட்டாரச் செய்திகள் அரண் செய்கின்றன.

இதேபோன்று விரல் நகங்களை வெட்டி அழகுபடுத்துதல் நாவிதன் செயலாகக் கூறப்படுகிறது.

"*சேவடிக்கு ஏற்பச் செழுமதிப் பாகு என*
*வாருகிர் குறைத்து'*[13]

எனப் பெருங்கதை இச்செயலைச் சுட்டும். கொங்கின் பல பகுதிகளில் செல்வம் நிறைந்த வீட்டுப் பெண்களின் கை, கால் நகங்களைக் குறைத்து நாவிதன் ஒப்பனை செய்வதை இன்றும் காண முடிகின்றது.

இன்னும் கொங்குத் திருமணங்களில் - குறிப்பாக வேளாளர் திருமணங்களில் நாவிதன் பங்கு முக்கியமானதாகவும், முதன்மை யானதாகவும் அமைவதைக் காண்கிறோம். இந்தப் பின்னணியிலும் மேற்கண்ட சடங்குகளைப் பார்த்தால் பெருங்கதையில் கொங்கின் மணம் கமழுவதை உணரலாம். இவ்விடத்தில் பெருங்கதை செய்தவர் வேளாளர் இனத்தைச் சார்ந்தவர் என்பதையும் நினைவு கூர்தல் வேண்டும்.

திருமணச் சடங்குகளில் 'கட்டில் ஏற்றியது; 'நீராட்டியது' என்ற தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இன்றும் கொங்குத் திருமணங்களில் நாள் நீராட்டும், மண நீராட்டும் சிறப்பான சடங்குகளாக உள்ளன. 'கட்டில் ஏற்றியது' என்ற தொடர் மணமக்களைப் பள்ளிக் கட்டிலில் சேர்ப்பதைக் குறிக்கிறது. கொங்கு வேளாளரில் நார்முடி கட்டியர் என்ற பிரிவினர் திருமணங்களில் மாப்பிள்ளையைச் சடங்குகள் முடித்து மணமேடைக்கு அழைத்து வரலைக் "கட்டில் ஏற்றிவரல்" என்ற சடங்காகக் கூறுவது உண்டு. இத்தொடர்களின் பொருள்கள் சற்று வேறுபட்டாலும் அச்சடங்கு (அத்தொடர்) கொங்கு நாட்டில் இன்றளவும் வழக்கில் உள்ளது என்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

இன்னும் பெருங்கதையில் காணப்படும் இந்த மண்ணிற்கே உரிய அல்லது இம்மண்ணை எதிரொலிக்கிற உவமைகள், வழக்குச் சொற்கள், சில நடைமுறைப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு நாகரிகக் கூறுகள் பற்றி ஆழ்ந்து நோக்கின் இக்காப்பியம் கொங்கு மணம் வீசும் நூலாக இருப்பதை அறியமுடியும்.

கொங்குவேளிர் உதயணனை 'வத்தவன்', 'வத்தவகுமரன்' என்ற பெயர்களால் சுட்டுகிறார். இந்தப் பெயர் இன்றும் கொங்கு நாட்டில் வழக்கத்தில் இருப்பதை உ.வே.சா. அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

> *"கொங்கு மண்டலத்தின் பலபாகங்களில் வத்தவன்,*
> *வத்தராயன், வச்சராயன் முதலிய பெயர்கள்*
> *இக்காலத்தும் வழங்கப்படுகின்றன"*[14]

என்பது அவர் குறிப்புரை.

கவிஞன் புற நிலையில் நின்றுதான் பழங்கதையைப் பாடு பொருளாக்கிக் காப்பியம் சமைக்கிறான். இக்கொள்கை, வளர்ச்சிக் காப்பியம் (**Epic of Growth**), கலைக் காப்பியம் (**Epic of Art**) என்ற இரண்டிற்கும் பொருந்தும். அப்படிப் பழைய கதையைப் பிறமொழியிலிருந்து எடுத்தாளும் கவிஞனுக்கு அவன் பிறந்த மண்ணின் மணத்தையும், அவனுடைய தாய்மொழியின் இலக்கண மரபையும், அவனுக்குச் சொந்தமான வழிபாட்டு மரபுகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் விடுத்து இலக்கியம் செய்ய முடிவதில்லை; அவனும் செய்வதில்லை என்பதைக் கொங்குவேள் மாக்கதை கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது.

## சான்றாதாரங்கள்


1. உ.வே.சாமிநாத அய்யர் (பதி). பெருங்கதை, முன்னுரை, ப · 56
2. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் - சமணத் தமிழிலக்கிய வரலாறு. கலைக்கதிர் அச்சகம் - கோவை 1961, ப : 97.
3. பரிபாடல்.
4. தொல்காப்பியம் : பொருளதிகாரம் : களவியல் : 2.
5 பெருங்கதை : I : 32 : 17 - 27.
6. பெருங்கதை : IV : 17 : 66 - 69.
7. பெருங்கதை : I : 52 : 72 - 75.
8. சமணத் தமிழிலக்கிய வரலாறு : ப: 95.
9. பெருங்கதை : I : 40 : 28.
10. குறுந்தொகை : 113.
11. பெருங்கதை : I : 00 : 00 - 00.
12. சீவகசிந்தாமணி : 2495.
13. பெருங்கதை : II : 4 : 186 - 87.
14. பெருங்கதைப் பதிப்பு - 1968. முகவுரை : ப : xxiv.


* * *

## 9. சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

தமிழகத்தின் பல பகுதிகளையும் சார்ந்த புலவர்கள் இலக்கியம், இலக்கணம், உரை என்ற துறைகளில் தமிழ்ப்பணி செய்துள்ளனர். இதே போன்று கொங்கு மண்டலச் சான்றோர்களும் தமிழாக்கம் கரு திப் பெருமை மிகு சாதனைகளைச் செய்துள்ளனர். சேரநாட்டு இளங் கோவின் சிலம்புக்கு அருமையான உரை கொங்கு நாட்டு அடியார்க் கு நல்லாரால் செய்யப்பட்டுள்ளது. தொண்டை மண்டலச் சேக்கிழா ரின் திருத்தொண்டர் புராணத்திற்குச் சீரியதோர் உரை செய்தவர் "சிவக்கவிமணி" எனப் புகழ் பெற்ற கோவை சி.கே.சுப்பிரமணிய முத லியார். அன்னாரின் நாட்டுப்பணி, சைவப்பணி, தமிழ்ப்பணி, உரைப் பெருமை இவற்றை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

### பிறப்பும் வளர்வும் வாழ்வும்

கோவையில் தமிழ்ப்பேரறிஞராகவும், வழக்கறிஞராகவும் பணி புரிந்த கந்தசாமி முதலியாருக்கும், வடிவம்மைக்கும் கோவையில் வைசியர் தெருவில் 20.02.1878 இல் தொண்டைமண்டல வேளாளர் குல விளக்காய்த் தோன்றியவர் சுப்பிரமணிய முதலியார் ஆவர்.

அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து கோவையில் குடியேறிய ''வாத்தியார்'' வைத்தியலிங்கம் பிள்ளையவர்களிடம் ஆரம்பக் கல்வியைச் சுப்பிரமணிய முதலியார் பயின்றார். தன்னுடைய 11ஆம் வயதில் தந்தையை இழந்த நிலையில் ''வாத்தியார்'' அவர்களிடமே கல்வி கற்று வந்தார். பின்னர் கோவை அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும், அதன் பின்னர் எப்.ஏ.(**F.A.**) படிப்பை 1897 இல் இடைநிலைக் கல்லூரியிலும் முடித்தார். இந்த அரசுக் கல்லூரியில் ஆசிரியராகத் திகழ்ந்த திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களைச் சார்ந்து தமிழ்க் கல்வியை1894 முதல் கற்றார். இந்தத் திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தந்தை கந்தசாமி முதலியாரின் மாணவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் கல்வி கற்கையில் அனைத்து வகுப்புக்களிலும் இவர் முதன்மையாகத் தேறியவர் என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். இதன் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து தத்துவத்தை முதன்மைப் பாடமாகக் கொண்டு பி.ஏ., பயின்றார். பட்டப்படிப்புப் பயிலுங் காலத்திலேயே 1898-இல் சேலம் கனகசபை முதலியாரின் திருமகள் மீனாட்சியை வாழ்க்கைத் துணைவியாகக் கரம்பற்றினார். 1899ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைத் தேர்வில் சிறப்பான வெற்றி பெற்றதோடு சென்னை மாநிலத்திலேயே (அப்போது ஆந்திராவின் பகுதிகளும் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இருந்தன.) தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்றார். அதற்காக இவருக்கு ''பிராங்கிலின்'' பெயரில் தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டது.

இத்தேர்வில் ஆறு அடிகள் கொண்ட ஓர் ஆங்கிலச் செய்யுளைத் தமிழ்ப்படுத்தும் படியான மொழி பெயர்ப்பு வினாவை எட்டு அடிகள் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாக மொழிபெயர்த்திருந்தார். இந்த மொழி பெயர்ப்புச் சிறப்புக்காக 120 ரூபாய் இவருக்குப் பரிசு தரப்பட்டது. இந்தத் தொகையில் நூறு ரூபாயைத் தன்னுடைய ஆசிரியர் திருச்சிற்றம்பலம்பிள்ளை எழுதிய ''மாணிக்கவாசகர்'' என்ற நூலை வெளியிடப் பயன்படுத்தினார்.

இதே போன்று கல்லூரியில் நடந்த கட்டுரைப் போட்டி ஒன்றில் இவர் கலந்து கொள்ளவில்லை. காரணம் அதை நடத்திய தமிழாசிரியருக்கும் இவருக்குமிடையே இருந்த மன வேற்றுமையே ஆகும்.

இருப்பினும் இவரது திறமையைத் தெரிந்த நடுவர்கள் இவருக்கே (கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளாத நிலையிலும்) முதற் பரிசு வழங்கினர் என்பது சுப்பிரமணிய முதலியாரின் திறமைக்குச் சான்றாக அமைகின்றது.

இதன் பின்னர் தந்தை செய்த வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து நடத்த எண்ணி 1903 ஆம் ஆண்டில் ஓராண்டுச் சட்டக் கல்வி கற்று அதே ஆண்டில் வழக்கறிஞர் தொழிலையும் தொடங்கி னார். முதலில் பொருள் நிறையத் தரக்கூடிய குற்றவியல் வழக்கு களைச் சுப்பிரமணிய முதலியார் தொடங்கினும் அவரது மன ஓட்டம் அவரை அதில் ஈடுபடுத்தாமல் பொது வழக்குகளையே ஏற்றுக் கொள்ளச் செய்தது.

ஒரு சமயம் கோவையில் 'பிளேக்' நோய் பரவ இவர் சேலம், ஆத்தூரில் தங்கி வழக்கறிஞர் தொழில் செய்தார். அப்போது பெற்ற ஊதியத்தைக் கொண்டு இவர் இராமேசுவரப் புனிதப்பயணத்தை மகிழ்வோடு செய்து முடித்தார். மீண்டும் 1910 முதல் கோவையில் நிரந்தரமாக இருந்து வாழ்ந்த நிலையில் 1916இல் முதல் மனைவி சிவபதம் அடைய அன்னாரின் தங்கையாகிய மீனாட்சியை 1917இல் திருமணம் செய்து கொண்டார்.

இவரது வாழ்வு நாட்டுப்பணியாக, சைவப்பணியாக, தமிழ்ப் பணியாக அமையும் சிறப்பு உடையது.

### நாட்டுப் பணி

சென்னையில் பட்டப்படிப்புப் பயிலுங்காலத்திலேயே சுப்பிர மணிய முதலியார் சுதந்திரப்போராட்டத்தில் கருத்துடையவராக இருந்தார். மகாத்மா காந்தியடிகள் அப்போது இந்திய அரசியலில் நுழையாத காலம். வங்காள வீரர் வீபின் சந்திரபால் அவர்கள் சென் னைக்கு வந்த போது அவரைக் கோச் வண்டியில் வைத்து இழுத்து கொண்டு வந்து பேச வைத்தவர்களில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தார்.

விடுதலைப்போரில் கப்பலோட்டிய தமிழனுக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. மணியாச்சிச் சந்திப்பில் 'ஆஷ்' என்ற வெள்ளையனைக் குண்டுக்கு இரையாக்கிய வாஞ்சி நாதனின் துணைவருள் ஒருவர் நீலகண்ட பிரம்மச்சாரி. ஆஷ், கொலைச் சதிக்கு

உடந்தை என அரசு நீலகண்ட பிரம்மச்சாரியைத் தேடிக் கண்டு பிடித்துச் சித்திரவதை செய்தது. அப்போது அவர் கோவையில் சி.கே.எஸ். (சி.கே. சுப்பிரமணிய முதலியார்) வீட்டில் இரகசியமாகத் தங்க வைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டதைக் காவலரிடம் கூறி விட்டார். ஒரு நாள் சி.கே.எஸ். அவர்கள் வழக்காடு மன்றத்தில் இருக்கையில் வீட்டைக் காவலர்கள் முற்றுகையிட்டனர். சி.கே.எஸ். அவர்களின் துணைவியார் தம் கணவர் வீட்டில் இல்லாத போது காவலர்கள் வீட்டிற்குள் புகுந்து சோதனை செய்வதை அனுமதிக்க மறுத்து விட்டார். மேலும் தம் கணவரை வழக்காடு மன்றத்திலிருந்து காவலர்கள் கூட்டி வருவதற்குள், விடுதலைப் போராட்டம் தொடர்பாக இருந்த இரகசிய ஏடுகளைத் தீயிட்டு எரித்ததோடு அதைக் கிணற்று நீரிலும் கரைத்து விட்டு விட்டார். சோதனை செய்த காவலர்கள் வெறுங்கையோடு மீளவேண்டி வந்தது.

சி.கே.எஸ்., வ.உ.சி. அவர்கள் கோவைச் சிறையில் செக்கிழுத்துச் சித்திரவதை செய்யப்பட்டதை விசாரணைக்குக் கொண்டு வந்து வழக்காடினார். அவரது விடுதலையன்று சிறைக்குச் சி.கே.எஸ். ஒருவர் மட்டுமே சென்று கூட்டிவந்து வ.உ.சி.யைப் பேரூரில் குடியமர்த்தி உதவிகள் பல செய்தார்.

இந்த உதவியை நினைத்தே வ.உ.சி. அவர்கள் தமது மகன் ஒருவர்க்கும் மகள் ஒருத்திக்கும் முறையே சுப்பிரமணியம் என்றும் (சி.கே.எஸ். மனைவி பெயராகிய) மீனாட்சி என்றும் பெயர் வைத்தார்.

இந்தச் சூழலில் காந்திய சகாப்தம் தொடங்க அப்போதைய மனநிலையில் அரசியல் மற்றும் வழக்கறிஞர் தொழிலில் ஆர்வம் குறைந்த சி.கே.எஸ் சமயத்துறையிலும் ஆன்மிகத்துறையிலும் ஈடுபாடு கொண்டவரானார்.

## *சைவத் திருப்பணிகள்*

தமிழ்நாடு மற்றும் ஈழநாட்டிலுள்ள முக்கியத் திருத்தலங் களுக்குக் குடும்பத்தோடு பலமுறை புனிதப்பயணம் மேற் கொண்டிருந்த சி.கே.எஸ் அவர்கள் பழனி மற்றும் பேரூர் உள்ளிட்ட பற்பல கோயில்களின் திருக்குடமுழுக்கு நடைபெற மூலவராக இருந்துள்ளார். மேலும் சிவாலயத் திருப்பணிகள் பல இவரால்

மேற்கொள்ளப்பட்டன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாகப் பேரூர்ப் பட்டீசுவரப் பெருமான் கோவில் திருப்பணிகள் பல இவரால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பேரூர்த் திருக்கோயிலோடு தன்னை இணைத்துக் கொண்ட இவர் பட்டப்படிப்பில் முதன்மை பெற்றமைக்காகத் தனக்குக் கொடுக்கப்பட்ட ''பிராங்க்லின்'' பொற்பதக்கத்தைப் பட்டிப்பெருமான் திருவுருவில் சொர்ண மாணிக்கமுடன் இட்டார். இன்னும் பேரூர்க் கோயிலுக்கு உரிமையுடையதாகிய மாவுத்தம் பதி கிராமத்தின் நீர்க்கூலி தொடர்பாக அரசுடன் வாதாடி வென்றுள்ளார். மேலும் நடராசர் திருவுருவச் சிலையமைத்தும் கோயிலில் இரும்பு உண்டியல் வைத்தும் வருவாயை மிகுதிப்படுத்திச் சிவப்பணி செய்தார்.

இவரது சைவப்பணி மலைநாடு (கேரளம்) வரை பரவியது. கோவையில் 'சேக்கிழார் திருக்கூட்டம்' என்ற மன்றம் நிறுவி மலை நாட்டில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சேரமான் பெருமாள் நாயனார்க்கும் குருபூசை நடத்தினார்.

தம் இல்லத்திலேயே தேவாரப் பாடசாலை நடத்தியதோடு தக்கார் பலரைக் கொண்டு அன்பர்கள் பலருக்குச் சைவத் தீட்சைகள் செய்வித்துச் சைவநெறி பரப்பினார். மேலும் நாள் ஒன்றுக்குச் சிலபாடல்கள் வீதம் சைவத் திருமுறைகள் பன்னிரெண்டையும் ஓராண்டுக்குள் ஓதி முடிக்கும் நியதியையும் மேற்கொண்டிருந்தார்.

கோவையில் இன்று புகழ்பெற்று விளங்கும் ஆர்.எஸ்.புரம் இரத்தினவிநாயகர் ஆலயம் இவரால் கட்டப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியக்கூடிய செய்தியாம். இன்னும் தம் தந்தை நடத்திய சைவப்பிரசங்க சாலையும், தம் ஆசிரியர் தொடங்கிய கோவைத் தமிழ்ச்சங்கமும் தொடர்ந்து இயங்கி வரத் தனிக்கட்டிடம் கட்டிய பெருமையும் இவருக்குரியதே.

கோவையில் 1938 மற்றும் 1947 இல் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாக்களில் பெரும்பங்கு வகித்த சி.கே.எஸ் அவர்கள் 1939 இல் குன்றக்குடியில் நடைபெற்ற சமாஜ மாநாட்டுத் தலைவராகவும் திகழ்ந்தார். மிக இளம் வயதிலேயே இந்து தேவஸ்தானக்கமிட்டிக்கு 1902-இல் தேர்ந்தெடுக்கப்பட்டு 1921

வரை அதில் பணியாற்றினார். மேலும் இக்குழுவின் செயலாளராக 1910 முதல் 1921 வரை இருந்து அரும்பெரும் பணிகள் செய்தார் என்பதும் குறிக்கத்தக்கது.

சைவத்தின்பால் பேரீடுபாடு கொண்டு இவர் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாசதேசிகரிடம் சமய விசேட தீட்சைகள் பெற்றுக்கொண்டார். சிதம்பரம் உலக மூர்த்தி தேசிகர் மடம் ஸ்ரீமுத்துக் கற்பகக் குருக்களையா அவர்களிடம் நிர்வாண தீட்சையும் பெற்றுக்கொண்டார்.

1946 இல் இரண்டாவது வாழ்க்கைத் துணைவியாரும் சிவபதம் அடைய 1958 இல் மதுரை சென்று துறவு பூண்டு ''சம்பந்த சரணாலயர்'' என்ற திருப்பெயர் தாங்கிக் கோவைக்கு மீண்டு தவவாழ்வு மேற்கொண்டார்.

## பொதுப் பணிகள்

அரசியலோடு தொடர்பு கொணடிருந்த சி.கே.எஸ். அவர்கள் கோவையில் 1922 இல் நகரசபை உறுப்பினர் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றதோடு தொடர்ந்து நான்கு முறையும் வென்று 1935 வரை பணியாற்றினார். இதன் பின்னர் 1945 முதல் 1947 வரை இவரை நகரசபை அங்கத்தினராக அரசாங்கம் நியமித்துச் சிறப்புச் செய்தது. இவரது பணிக்காலத்தில் இவரது நேர்மை பலரது பகையைத் தேடித் தந்தாலும் தன் கொள்கையிலிருந்து வழுவவில்லை.

1922 இல் கோவை நகர்மன்றங்களின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினரானார். அதே போன்று நாட்டுப்பள்ளிகள் மன்றத்திலும் உறுப்பினரானார். 1926 ஆம் ஆண்டிலும் 1929 ஆம் ஆண்டிலும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்மொழிப் பிரதிநிதியாக அரசாங்கம் இவரை நியமித்தது. அக்கால கட்டத்தில் இப்பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதி ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். இதே போன்று 1930 இல் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் ''சேக்கிழார்'' பற்றி மூன்று சொற்பொழிவுகளை மேற் கொண்டார். பெரிய புராண உரை என்று நாம் போற்றும் ஒரு மாபெரும்

செயல் உருவாவதற்கு இந்த மூன்று சொற்பொழிவுகள் வித்தாக இருந்து ஆலமரமாகிச் செழித்தன எனில் அது மிகையன்று.

## பெரியபுராணம் உரைப் பணி

சி.கே.எஸ். அவர்கள் தமது ஆசிரியர் திருசிற்றம்பலம்பிள்ளை அவர்களிடம் 1894 முதல் 1906 வரை 12 ஆண்டுகள் பெரியபுராணம் பயின்றவர். அதன் பின்னர் 12 ஆண்டுகள் தாமாகவே அந்நூலைக் கற்றுக் கொண்டிருந்தார். இந்தச் சூழலில் சென்னை, சுங்கத்துறையில் பணிபுரிந்த கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்களின் பெரியபுராண உரை 1911-1912 இல் கோவையில் நடைபெற்றது. பெரிய புராணத்தைப் புராணக் கதையாக்காமல் தனித்தனிப் பாடலாக எடுத்து விளக்கவுரை தந்தார் செட்டியார் அவர்கள். அவ்விளக்கவுரை தருவதற்கு சி.கே.எஸ். அவர்கள் கையேடு படித்தார். அதாவது இவர் மூலப்பாடலைப் படிக்கச் செட்டியார் விளக்கம் தருவார். இங்ஙனம் அவர் விளக்கவுரை கூறுகையில் அதன் சாரத்தை சி.கே.எஸ் அவர்கள் கையெழுத்துப் பிரதியாக மூன்று தொகுதிகளாக எழுதிவைத்தார். இந்த உரைக் குறிப்புகள் அவர் உரை எழுதப் பெரும்துணையாக அமைந்தன.

இந்தப் பெரியபுராணச் சொற்பொழிவும், இயற்கையாகவே அப்புராணத்தில் இவர் கொண்டிருந்த ஈடுபாடும் சி.கே.எஸ் அவர்களை உரை எழுதத் தூண்டின. அத்தூண்டுதல் சி.கே.எஸ் அவர்களின் 56 ஆம் வயதில் 1935 இல் தொடங்கி அன்னாரின் 70 ஆம் வயதில் 1948 இல் சிதம்பரத்தில் முற்றுப் பெற்றது.

சேக்கிழார் பெருமான் எவ்விடத்தில் தமது பனுவலைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி அரங்கேற்றினாரோ அதே இடத்தில் சிவக்கவிமணியவர்கள் அப்பனுவலின் நயம் சொட்டச் சொட்ட அந்த உரையை முடித்தார். அன்று சேக்கிழார் பெருமானுக்குச் செய்யப்பட்ட சிறப்புக்கள் அனைத்தும் இவருக்கும் செய்யப்பட்டன எனில் மிகையன்று.

பெரியபுராண உரை செய்யும் தெய்வப்பணி நடந்து கொண்டிருந்த காலத்தில் 1940 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இவருக்குச் 'சிவக்கவிமணி' என்ற பட்டம் தந்து தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. அப்படியே 1954 இல் மதுரை திருஞானசம்பந்த மட ஆதீனகர்த்தர் "திருமுறை ஞானபாநு" என்ற பட்டத்தை இவருக்குச் சூட்டிச் சிறப்பித்தார். இவர் துறவியான பின்னரக் கூடத் தமிழுலகம் இவரை விடவில்லை. 1958 இல் நாகர் கோயிலில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது மாநாட்டில் இவரது

தமிழ்ப்பணிக்காக அப்போதைய இந்திய அரசின் கல்வித்துறைத் துணை அமைச்சராக இருந்த ஹுமாயூன் கபீர் அவர்களைக் கொண்டு வெள்ளிக்கேடயம் அளித்துச் சிறப்புச் செய்தது.

## உரைப் பெருமை

உரையாசிரியர்கள் மூலநூலாசிரியர்களின் உள்ளிடு பொருளை யெல்லாம் தெள்ளிதின் விளக்குபவர்கள் என்பது உண்மையே. ஆனால் உரைகாரர்கள் சில சமயங்களில் திறனாய்வாளர்களாகி உரை செய்கையில் மூலநூலின் பல்வேறு சிறப்புக்களும் உலகிற்குத் தெரியவருகின்றன. இந்த முறையில் உரை தந்தவர் நம் சிவக்கவிமணியவர்கள். இந்த உரைப் பெருமைக்குக் கீழ்வரும் கூற்றுக் களையே சான்றுகளாக்கலாம்.

''மூலபாடத்தை எடுத்து முதல் இறுதிகளை அனுவதித்துப் பொழிப்புத்திரட்டி - பதசாரத்தை விளக்கி எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் கூறித் தேவார, திருவாசக, பதினான்கு சாத்திரங் களிலும், குறள், இராமாயணம் ஆகியனவற்றிலிருந்து மேற்கோள் காட்டிப் பொருள் நிச்சயஞ் செய்து எழுதப்பட்டுள்ளது'' (இவ்வுரை ''ஞானசித்தி'' - இலங்கை 1935, அக்டோபர் : 1)

''தல சம்பந்தமான செய்திகளும் வேறு நூற்கருத்துக்களும் மேற்கோள்களும் சாசனப் பகுதியும் படங்களும் இவ்வுரையில் உரிய இடங்களில் மிக நன்றாக அமைந்துள்ளன. இவ்வளவு உழைத்து எழுதப்பட்ட உரை இந்நூலுக்கு இதுகாறும் இல்லை''. ( உ.வே.சா. அவர்கள் பெரியபுராணம் உரை - மதிப்புரை : 6)

இந்த உரை சிவக்கவிமணியவர்களின் இலக்கிய, இலக்கண, சித்தாந்த சாத்திரங்களின் நிறைந்த அறிவைக் காட்டுவதோடு அவரது உள்ளத்திலிருந்த பேரன்பும், பக்தியும் மிளிரவும் காரணமாகின்றது. அத்தோடு சமய நூல்கள், சாத்திரதோத்திர நூல்கள், கல்வெட்டுக்கள் இவற்றில் சிவக்கவிமணி பெற்றிருந்த பெரும்புலமை தெற்றெனத் தெரிகின்றது.

நாயன்மார்களின் திருவுருவங்கள், திருத்தலங்கள் ஆகியன படம் பிடிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளதோடு அவை சரியானவைதானா என்று உறுதி செய்வதற்காகச் சிவக்கவிமணி பல வழிகளில் முயன்றுள்ளார். தலங்கள் பற்றிக் குழப்பங்கள் வருகையில் நேரில் சென்றும், அறிந்தோரைக் கேட்டும், குறிப்பிட்ட அந்தத் தலவழக்கு, தலசரிதங்கள், கல்வெட்டுக்கள் கொண்டும் உறுதி செய்துள்ளமை இவரது ஆய்வு நோக்குக்குச் சான்றாகும்.

பெரியபுராணம் ஒரு காவியம் என்பதை ''உலகெலாம்'' எனத் தொடங்கும் முதல் பாடலுக்கு உரை எழுதுகையில் விளக்கியுள்ளார். இதைக்கொண்டு சிவக்கவிமணி செய்துள்ள உரை வெறும் விளக்கவுரையன்று; சீரியதோர் ஆய்வுரை எனத் தெளிய முடிகின்றது.

பெரியபுராணத்தின் மீது தாம் கொண்ட ஈடுபாட்டை ''இலௌகிகத்திலும் கூட எந்தத்துறையில் மக்கள் நல் வாழ்க்கை வாழவேண்டுமாயினும் அதற்குப் பெரியபுராணமே நன்கு துணை செய்வதாகும் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றி வளர்ந்து வருகின்றது.'' (பெரிய புராண உரை - முகவுரைக்கு முன்னுரை) என்ற அவரது வாக்கால் உணரலாம்.

இப்பெரிய புராணப் பேருரை நிறைவு அரங்கேற்ற விழா நடந்த 1954 ஆம் ஆண்டு மே மாதம் 6, 7 ஆகிய இரண்டு நாட்களில் ஆதீனகர்த்தர்கள், பேராசிரியர்கள், சைவத் தமிழ்ச்சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிவக்கவிமணியவர்களின் பேருரைச் சுவடிகள் யானை மேல் வைத்து நகர்வலமாகக் கொண்டு வரப்பட்டுத் தில்லைக் கூத்தனின் திருவடிகளில் வைத்துப் போற்றப்பட்டன. மீண்டும் சேக்கிழாரே திருவவதாரம் செய்தாரோ என்று எண்ணும் வண்ணம் அந்நிகழ்ச்சி நடந்தது. இதற்குத் தமிழுலகம் தலைமுறைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

## பிற தமிழ்ப் பணிகள்

சிவக்கவிமணியவர்கள் செய்யுள் இயற்றும் நலம் படைத்தவர். அவிநாசி பெருங்கருணைநாயகி பிள்ளைத் தமிழ், பேரூர் இரட்டை மணிமாலை, கந்தபுராண போற்றிக் கலிவெண்பா ஆகிய பிரபந்தங் களையும், பற்பல பதிகங்களையும் சிவக்கவிமணி செய்துள்ளார்.

## உரைநடை நூல்கள்

இவரது உரைநடை நூல்கள் சென்னையில் நடத்திய சொற் பொழிவுகளின் எழுத்து வடிவமான ''சேக்கிழார்'' மற்றும் சேக்கிழார் செம்மணித்திரள், மாதிருக்கும் பாதியான், சேக்கிழாரும் சேயிழையாரும், கருவூர்த்தேவர், திருத்தொண்டர் புராணத்துள் முருகன், மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை, வாகீசர் அல்லது மெய்யுணர்தல் என்பனவாகும். இவற்றுள் இறுதியில் கூறப்பட்டவை குறிப்பிட்ட குறள் அதிகாரங்களின் வாழ்வாக அச்சான்றோர்கள் வாழ்ந்த வாழவியலை விளக்கும் நூல்களாம்.

## நிறைவாழ்வு

கோவை வைசியர் தெருவில் சுப்பிரமணியமாக உருவாகிச் சிவக்கவிமணியாக உயர்ந்து சம்பந்த சரணாலய சுவாமிகளாகப் போற்றப்பட்ட திருத்தொண்டர் புராண உரைகாரர் இறைவன் திருவுளப் படியும், உலக உயிர்களுக்கென விதிக்கப்பட்ட முறைப்படியும் 1961 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 24 ஆம் நாள் திருப்பேரூரில் பூதவுடம்பை நீத்தார். நிறைந்த பெருவாழ்வாய் நித்தமும் தமிழுலகில் அவர் சிறப்பிக்கப்படுகிறார்.

*''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே''*

## கட்டுரையாக்கத்திற்குத் துணை


1. C.M. இராமச்சந்திரன் செட்டியார் - சிவக்கவிமணி வாழ்க்கைத்திறன், கோவை : 1948
2. வித்துவான் ஜி.எம். முத்துசாமிப்பிள்ளை, சிவக்கவிமணி அவர்கள் நூற்றாண்டுவிழா (கட்டுரை), சித்தாந்தம் - இதழ்
3. சிவக்கவிமணியின் உறவினர்சி.சு. கண்ணாயிரம் அவர்களுடன் நேர்முகம். (வைசியர் வீதி - கோவை - 24.10.91 - மாலை)


## துணை நூல்கள்


4. கிருட்டினசாமி: கொங்கு நாட்டுப் புறப்பாடல்கள்: தொகுப்பு: I&II மக்கள் வெளியீடு : சென்னை.
5. நா.வானமாமலை: தமிழ் நாட்டுப் பாடல்கள்: NCBH சென்னை.
6. க.ரா.சுப்பிரமணியம்: பெரியார் மாவட்டக் கும்மி ஒப்பாரிப் பாடல்கள் - ஓர் ஆய்வு. எஃபில் ஆய்வேடு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1984-85.
7. கட்டுரையாசிரியர் கிராமப்புறங்களில் கேட்ட பாடல்கள்.


***



பெயர் : இரா. கா. மாணிக்கம்

பிறந்த நாள் : 17.01.1943

ஊர் : கொங்கர்பாளையம்
கோபி வட்டம்

கல்வி : அரக்கன்கோட்டைத் திண்ணைப் பள்ளி
5 ஆம் வகுப்பு வரை,

சத்தியமங்கலம் உயர்நிலைப் பள்ளி
11 ஆம் வகுப்பு வரை,

கோவை பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,
புகுமுக வகுப்பு, B.A., (தமிழ்), M.Phil.,Ph.D.,
ஆய்வுப்பட்டங்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
M.A., தமிழ் (1965) முதலிடம்,
தெ.பொ.மீ. தங்கப்பதக்கம்

தமிழ்ப் பேராசிரியர் பணி : பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோவை: 1 ஆண்டு
கோ. வெங்கிடசாமி நாயுடு கல்லூரி
கோவிற்பட்டி: 4 ஆண்டுகள்
கோபி கலை அறிவியல் கல்லூரி
கோபி : 31 ஆண்டுகள்

முதல்வர் : காமதேனு கலை அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம் : ஜூன் 2001 முதல்

ஆய்வு நெறியாளர் : M.Phil., முடித்த ஆய்வாளர்கள், பாரதியார், மதுரை,
மனோன்மணீயம் பல்கலைக் கழகம்
சார்ந்தவர்கள் 20 பேர்.
பாரதியார் பல்கலைக் கழகம்,
Ph.D., ஆய்வாளர்கள் 5 பேர்

படைப்புகள் : ஆய்வரங்கில் பலப்பல கட்டுரைகள்,
கல்லூரி மலர்களில் சிலபல சிறுகதைகள்